# செம்மண்

நிலம் 1 துகள் 31 வள்ளுவர் ஆண்டு 2052, 13 - 19 மாசி 2021 வாரமலர் பக்கங்கள் 24 விலை ரூபா 50/-




# நடைமுறைக்குவரும் தனிப் பயன்பாட்டு பிளாஸ்டிக் பொருட்களுக்கான தடை!

▪ ஸூடோ ஸ்வாமி ▪

எதிர்வரும் பங்குனி (மார்ச்) மாதம் **31**ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்குவரும் வகையில் ஒற்றைப் பயன்பாட்டு பிளாஸ்டிக் பொருட்களுக்குத் தடைவிதிக்கப்படுகின்றது. முன்னதாக இந்த வருடத் தொடக்கத்திலிருந்து மேற்படிதடை நடைமுறைக்கு வரவிருந்த நிலையில், அதனை நடைமுறைப்படுத்தக் கால அவகாசம் கொடுக்கப்பட்டு இப்போது பங்குனி வரையில் நீடிக்கப்பட்டிருக்கிறது. சுற்றாடல் அமைச்சர் மஹிந்த அமரவீரவினால் கடந்த தை (ஜனவரி) மாதம் **21**ஆம் திகதி வெளியிடப்பட்ட **221/51** இலக்க சிறப்பு அரசிதழ் அறிவித்தலுக்கு அமையக் குறித்த தடை நடைமுறைக்கு வரவிருக்கின்றது.

மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் முன்மொழிவுகளை அடிப்படையாக வைத்துக் கடந்த வருடத்தில் அமைச்சரவையில் முன்வைக்கப்பட்ட யோசனைகளுக்கு அமைவாகவே இந்தத் தீர்மானம் எட்டப்பட்டிருந்தது. இப்போது அது சட்ட அங்கீகாரத்தினைப் பெற்றிருக்கின்றது.



காதலுக்கு ஓர் தினம்..!! 05
மரத்தக் காணோம்... 11
மூன்றே மாதங்களில்... 12

செம்மண்

வாரப் பத்திரிகை
551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
மின்னஞ்சல்: shemman.redsoil@gmail.com
தொடர்பு எண்: 021 492 7781
உரிமை மற்றும் வெளியீடு: கிறீன் மீடியா கவுஸ் பிரை. லிட்

ஆசிரியர்: தே.பிரேமானந்த்

# உரிய தலைமைத்துவத்தை இளையோருக்கு வழங்குங்கள்

கடந்த வாரத்தில் பொத்துவிலில் இருந்து பொலிகண்டி வரைக்கும் நடத்தப்பட்ட பேரணி தமிழ் அரசியலில் மிக முக்கியமானதொரு நகர்வாக அமைந்தது. 2009ஆம் ஆண்டுக்குப் பின்னர் தமிழ் மக்கள் அடைந்திருந்த அரசியல் மந்த நிலையிலிருந்து அவர்களை மீண்டெழ வைக்கும் உந்துதலை இந்தப் பேரணி கொடுத்திருந்தது. அதுவொரு நல்ல அரசியல் நகர்வாக முன்கொண்டு செல்லப்படக்கூடிய வாய்ப்பைக் கொண்டிருந்தது.

இருப்பினும் நந்தவனத்தில் ஓர் ஆண்டி நாலாறு மாதமாய் குயவனை வேண்டி கொண்டு வந்த தோண்டியைப் போட்டுடைத்த கதையாக பொத்துவிலில் இருந்து புறப்பட்ட மெல்ல மெல்ல எழுச்சி பெற்று பொலிகண்டியில் கிளர்ச்சியின் நுனியைத் தொட்டு நிறைவடைந்த போராட்டத்திற்குப் பின்னரான காலம், வெறுமனே அந்த வெற்றிக்கு யார் உரிமை கோருவது என்பதிலும் யார் உரிமை கோரிவிடக்கூடாது என்பதிலுமே கழிகின்றதைப் பார்க்கின்றபோது தமிழ் அரசியலில் எதுவும் மாறப்போவதில்லை என்கிற கவலை எழுகிறது.

இந்தப் பேரணியில் குறிப்பிடத்தக்கதொன்று மக்களின் தன்னெழுச்சியும் இளைஞர்களின் அணி திரள்வும். ஆயுதப் போராட்டம் தீவிரம் பெறுவதற்கு முன்னதாகத் தந்தை செல்வா காலத்தில் அறவழிப் போராட்டங்கள் எப்படி நடந்திருக்கும் என்பதை இன்றைய நடுத்தர வயதினருக்கும் இளைஞர்களுக்கும் தெரியப்படுத்துவதாக இந்தப் பேரணி அமைந்திருந்தது. துன்பியலாக 30 வருடங்கள் கடந்தும் இன்றைய இளைஞர்களும் தொடர்ந்து போராவேண்டியவர்களாகவே இருக்கிறார்கள் என்கிற உண்மையும் சுடுகிறது.

இளைஞர்களிடையே இன உணர்வும் அரசியல் ஈடுபாடும் மறைந்துவிட்டது என்கிற குற்றச்சாட்டையும் இந்தப் பேரணி முற்றிலுமாகத் தகர்த்திருக்கிறது. இளைஞர்கள் அரசியலில் அணிவகுப்பதற்கும் போராடுவதற்கும் தயாராக இருக்கின்றார்கள், அதற்குப் பொருத்தமான வழிநடத்தலும் துணிச்சலும் தலைமை தாங்குபவர்களும் வேண்டும் என்கிற பாடத்தையும் இந்தப் பேரணி கற்பித்துப் போயிருக்கின்றது.

நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியனுக்கு இந்தப் பேரணியின் மூலம் கிழக்கில் மட்டுமல்லாமல் வடக்கிலும் பேராதரவு ஏற்பட்டுள்ளது என்று சிலாகிக்கப்படுகிறது. அதற்குக் காரணம், பேரணிக்குத் தலைமை தாங்கி தானே முன்னின்று தடைகளை எதிர்த்து அவர் காட்டிய முன்மாதிரிதான். இளைஞர்கள் முன்மாதிரிகளைத்தான் எதிர்பார்க்கிறார்கள், அதன் பின்னால் அணிவகுப்பதற்குத் தயாராக இருக்கிறார்கள். அந்த முன்மாதிரிகள் சிறுகிக் குறுகிவிட்டதன் காரணத்தால் அவர்கள் அரசியலில் ஒதுங்கிப் போய்விடுகிறார்கள் என்பதையும் இந்தப் பேரணி போதித்திருக்கிறது.

இந்தக் கற்றறிந்த பாடத்தின் பின்னரும் இளைஞர்களை வழிப்படுத்தி முறைப்படுத்தி உரிய தலைமைத்துவத்தை வழங்கி அரசியலில் அவர்களை முன்னகர்த்தி இலக்கை நோக்கி முன்னேறவேண்டியவர்கள் மீண்டும் தமக்கான சொந்த அரசியல் நலன்களின் பின்னால் இழுபடத் தொடங்கியிருப்பது வீறுகொண்டெழுந்த இளைஞர்களை மீண்டும் பெட்டிப் பாம்பாக அடங்கச் செய்துவிடும்.

தலைமைகள் திட்டமிட்டு உருவாக்கப்படும் அதே நேரம் அவை தன்னெழுச்சியாகவும் அடையாளம் காணப்படும். அது இத்தயைக போராட்ட வடிவங்களின் ஒரு பக்கவிளைவு. உசாராகத் தங்களை இத்தகைய போராட்டங்களில் இருந்து தள்ளி வைத்துப் பாதுகாத்துக்கொண்டு அதேநேரம் மற்றவர்கள் போராட்டத்தின் மூலம் அரசியல் ஆதாயம் பெற்றுவிடக்கூடாது என்று எண்ணுவதில் எந்த நியாயமும் இல்லை. களத்தில் நின்று செயற்படும் யாரையும் அவர்களின் செயற்பாட்டை திறனாய்வு செய்து மக்கள் ஆதரிப்பார்கள். அதுதான் சரியானதும்கூட. அதைவிடுத்து குறைசொல்லிக்கொண்டிருப்பதில் பயன் ஏதுமில்லை.

நெல்லுக்கிறைக்கும் நீர் பொசிந்து புல்லுக்கும் போவது வழமைதான். அதுபோன்று இத்தகைய பேரணிகளின் ஊடாகச் சிலர் நன்மையடைந்து கொள்வார்கள் என்பதற்காக அவற்றை முடக்கி அவற்றின் வழியான அரசியல் வாசல்களை மூடிவிடக்கூடாது. அவை தானாக மூடிவிடும் வழியில் நடக்கவும்கூடாது. அது அரசியலில் இளைஞர்களைச் சோர்வடையச் செய்துவிடும்.

### தடைக்குள்ளாகும் பொருட்கள்

அந்த வகையில், விவசாய இரசாயனங்களைப் பொதியிடுவதற்காக பிஈடி (PET) எனச் சுருக்கமாக அழைக்கப்படும் பொலி எதைலீன் ரெறெப்தலேற் அல்லது பிவிசி (PVC) எனக் குறிப்பிடப்படும் பொலி வைனல் குளோரைட் போன்ற பல் பகுதியங்களைப் பயன்படுத்தத் தடை விதிக்கப்படுகிறது. அதேபோன்று உணவு மற்றும் மருந்து பொதியிடல் தவிர்ந்த 20 மி.லீ. கொள்ளவிற்கு அல்லது 20 கிராம் தேறிய நிறைக்குச் சமனானஅல்லது குறைவான சஷே பைகளின் பாவனைக்கும் கட்டுப்பாடு கொண்டுவரப்படுகின்றது.

பலூன்கள், பந்துகள், நீரில் மிதக்கக் கூடிய / நீரில் விளையாடக்கூடிய விளையாட்டுப் பொருட்கள், மற்றும் நீர் விளையாட்டுத் துணைப் பொருட்கள் தவிர்ந்த ஏனைய காற்றடைக்கப்படக்கூடிய விளையாட்டுப் பொருட்கள் மேற்படி தடைக்குள் உள்ளடங்குகின்றன.

மருத்துவத்துறையில் பயன்படுத்தப்படும் பஞ்சுமுனைக் குச்சுக்கள் (Cotton buds) தவிர்ந்த பிளாஸ்டிக் காம்புடைய பஞ்சுமுனை குச்சுக்களையும் வெளியிடப்பட்டுள்ள அரசிதழ் அறிவிப்புத் தடைசெய்கின்றது.

தடை தொடர்பான அறிவிப்பினைத் தாங்கி வந்திருக்கும் அரசிதழ், பிளாஸ்டிக் பொருட்கள் என்பதற்கான விளக்கத்தினையும் தெளிவுபடுத்தியிருக்கின்றது. பிளாஸ்டிக் பொருள் என்பது பொலிஎதிலீன் ரெறெப்தலேட், உயர் அடர்த்தி கொண்ட பொலி எதிலீன், குறைவான அடர்த்தி கொண்ட பொலி எதிலீன், பொலி வைனல் குளோரைட், பொலி புரப்பலீன், பொலி ஸ்ரைரீன், உயிரியல் ரீதியில் சிதையத்தக்க பிளாஸ்டிக் அல்லது வேறேதேனும் ஒத்த மூலப்பொருள் அல்லது கலவையைப் பயன்படுத்தி உற்பத்தி செய்யப்பட்ட உற்பத்திப் பொருட்கள் என வரையறுக்கிறது.

### கால அவகாசம்

சுற்றுச் சூழலை மாசடையச் செய்வதில் கணிசமான பங்காற்றும் ஒருமுறை பாவித்த பின் வீசப்படும் நெகிழிப் (பிளாஸ்டிக்) பொருட்களின் உற்பத்தி விநியோகம் மற்றும் விற்பனை என்பவற்றுக்கு எதிரான தடை ஏற்கெனவே அறிவிக்கப்பட்டிருந்தது. எனினும், குறித்த பொருட்களை உற்பத்தி செய்பவர்கள் மற்றும் பயன்படுத்துபவர்களுக்கு உதவும் வகையிலும், மாற்று ஏற்பாடுகளுக்கு அவகாசம் வழங்கும் வகையிலும் நடைமுறைப்படுத்தப்படவேண்டும் என அமைச்சரவை மட்டத்தில் தீர்மானிக்கப்பட்டிருந்தது. அதன் தொடர்ச்சியாகவே இப்போது பங்குனி வரையில் கால அவகாசம் வழங்கப்பட்டிருக்கிறது.



### கழிவாகச் சேரும் நெகிழி

நெகிழிப் பொருட்களின் பாவனை காரணமாக சூழலுக்குச் சேரும் கழிவு தொடர்பில் சூழல் ஆர்வலர்கள் பலரும் குரல் கொடுத்து வருகின்றார்கள். பெற்றோ கெமிக்கல் என வழங்கப்படும் கைத்தொழில் துறையின் உற்பத்தியான நெகிழிப் பொருட்கள் கண்டறியப்பட்ட தொடக்கத்தில் ஆச்சரியத்தை ஊட்டும் பொருளாக இருந்த போதிலும் தற்போது அவை சூழலுக்குப் பெரும் அச்சுறுத்தலை ஏற்படுத்துபவையாக மாறி வருகின்றன. மலிவானவிலை, சுலபமான உற்பத்தி மற்றும் பல்துறைப் பயன்பாடு என்பன நெகிழியை எல்லாத்துறைகளிலும் நுழைத்திருக்கின்றது. சிதைவடையாத தன்மை காரணமாக சிக்கலைக் கொடுக்கும் நெகிழிப் பொருட்கள் பூமியில் தேங்குகின்றன.

வெளியேற்றப்படும் கழிவுகளில் நெகிழிப் பொருட்கள் தவிர்க்க முடியாத பாகமாக மாறி வருகின்றன. அதிலும் தனிப் பயன்பாட்டு நெகிழிப் பொருட்கள், நகரத்தில் சேரும் கழிவில் 15 வீதமாகக் காணப்படுவதாக அறிக்கை ஒன்று குறிப்பிடுகிறது. இலங்கையில் சேகரிக்கப்படும் கழிவுகளில் 8 வீதமானவை பிளாஸ்டிக் பொருட்கள் ஆகும். இலங்கையில் ஒவ்வொரு நாளும் 20 மில்லியன் உணவு பொதியிடல் தாள்களும் (Lunch sheet) 15 மில்லியன் நெகிழிப் பைகளும் 10 மில்லியன் வெற்றுப் போத்தல்களும் சூழலுக்குள் வீசப்படுவதாகக் கடந்த ஆண்டு வெளியிடப்பட்ட அறிக்கை ஒன்று குறிப்பிடுகிறது.

> “ நெகிழிப் பொருட்களின் பாவனை காரணமாக சூழலுக்குச் சேரும் கழிவு தொடர்பில் சூழல் ஆர்வலர்கள் பலரும் குரல் கொடுத்து வருகின்றார்கள்.

### பயன் தரமறுத்த முயற்சிகள்


நெகிழிப் பொருட்கள் காரணமாக ஏற்படக்கூடிய பாதிப்புக்கள் இனங்காணப்பட்டு 1994ஆம் ஆண்டிலேயே நெகிழியை ஒழுங்குபடுத்தும் நடவடிக்கைகளை இலங்கை தொடங்கியிருந்தது. அத்துலத்முதலி சுற்றாடல் அமைச்சராக இருந்த வேளையில் 20 மைக்ரோன் தடிப்பிற்கும் குறைவானஉயர் அடர்த்தி பொலி எதைலீன் பைகளைதடைசெய்ய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டபோதிலும் அது வெற்றியளிக்கவில்லை. பின்னர் 2007இல் மீண்டும் இந்தத் தடை அரசிதழ் அறிவிப்பினூடாக நடைமுறைக்கு வந்தது. 2008ஆம் ஆண்டில் பேணுகை வரி ஒன்று அறிமுகப்படுத்தப்பட்டபோதிலும் பின்னர் அது கைவிடப்பட்டது.

2017ஆம் வருடத்தில் அடுத்தடுத்து அரசிதழ் அறிவுறுத்தல்கள் விடுக்கப்பட்டு தடைகள் இடப்பட்டாலும் எதிர்பார்க்கப்பட்ட வினைத்திறனான பயனை அவை கொடுத்திருக்கவில்லை. பிறப்பிக்கப்படும் சட்டங்கள் சரியாக நடைமுறைப்படுத்தப்படாமையே இந்தப் பின்னடைவிற்கு முக்கிய காரணமாகும்.

நெகிழிப் பிரச்சினை உலகம் பூராகவும் சமூக பொருளாதாரச் சவாலாக உருவெடுத்திருக்கிறது. அதற்கு முகம் கொடுக்க இலங்கையில் இப்போதும் ஒரு அரசிதழ் அறிவிப்பு வெளிவந்திருக்கிறது. குறித்த தடையினைக் கொண்டு வருவதில் உள்ள நடைமுறைச் சிக்கல்களைக் கருத்தில் கொண்டு அதற்காக கால அவகாசமும் வழங்கப்பட்டிருக்கின்றது. இந்த காலப் பகுதியில் தடையாகும் பொருட்களுக்காக மாற்றீடான இயற்கை பிரதியீடுகளையும் அரசு அறிமுகம் செய்யவேண்டும். அதன் உற்பத்தி மற்றும் பாவனையை ஊக்குவிக்கவேண்டும். மீள் சுழற்சி, மீள் பாவனை என்பவற்றை வலியுறுத்துவதோடு பிளாஸ்டிக் பொருட்களின் பாவனையைக் குறைக்கவும் வழி செய்யவேண்டும். இல்லையேல்,அறிவிக்கப்பட்டிருக்கும் புதிய தடையும் ஏட்டுச் சுரைக் காயாகவே அமையும்.

# ஜனாசா விவகாரம் அரசியல் நாடகமா…?

■ கமலநாதன்



கொரோனாத் தொற்றால் இறக்கின்ற முஸ்லிம்களின் சடலங்களை எரிக்காமல் இஸ்லாமிய மத அடிப்படையில் புதைப்பதற்கு அனுமதிக்குமாறு முதன் முதலில் ரிசாத் பதியுதீன் ஜனாதிபதிக்குக் கடிதம் எழுதியிருந்தார். ஏறத்தாழ ஒரு வருட காலமாக இருந்து வருகின்ற இந்த விவகாரத்தில் இதற்குச் சாதகமான பதில் இதுவரை கிடைக்கவில்லை. ஆனால், மாசி மாதம் 10ஆம் திகதியன்று நாடாளுமன்ற உரையில் தலைமை அமைச்சர் மகிந்த ராஜபக்ச, "முஸ்லிம்களின் ஜனாசாக்களைப் புதைக்க அனுமதிக்கப்படும்" என்று கூறியுள்ளார்.

உயிர்த்த ஞாயிறுக் குண்டுத் தாக்குதலின் பின்னர் முஸ்லிம்களின் அரசியல் பொருளாதார கலாசார விடயங்கள், இளவயதுத் திருமணம், சரியாச் சட்டத்தை நீக்குதல் என்று முஸ்லிம்களுக்கு எதிரான நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டன இந்தச் சூழல் எல்லாவற்றுக்கும் முகம் கொடுக்கும் வகையில் முஸ்லிம் தலைவர்கள் நடந்துகொண்டார்கள். அதில் முதலிடத்தில் அவர்களின் தெரிவாக இருந்தது என்னவெனில் சஜித் பிரேமதாசவை அதிபராக்குவதாகும். கோட்டாபய ராஜபக்ச அதிபர் ஆகிவிட்டால் தமக்குப் பிரச்சினை கொடுப்பார் என்பதை முஸ்லிம் தலைவர்கள் முன்னுணர்ந்து செயற்பட்டபோதும் அவர்களது திட்டம் தோல்வியில் முடிந்தது.

இந்த அணுகுமுறை உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலின் பின்பான முஸ்லிம் சமூகத்தை இரு மடங்குப் பிரச்சினைக்குள் தள்ளியது.

அடுத்த கட்டத்தில் 2020 பொதுத் தேர்தலில் மூன்றில் இரண்டு பெரும்பான்மைப் பலத்தைக் கோட்டாபய அரசு பெற்றுவிடக்கூடாது என்பதற்காக எதிரணியுடன் சேர்ந்து முஸ்லிம் தலைவர்கள் செயற்பட்டபோதிலும் அதிலும் வெற்றிபெற முடியவில்லை. இது கோட்டபாய அரசைச் சினம் கொள்ள வைத்து 3 மடங்கு பிரச்சினையைக் கொடுத்தது. இதன் பின்னர் நிலைமையைச் சமாளிக்க அரசமைப்பின் 20ஆவது திருத்தச் சட்டத்துக்கு ஆதரவாக முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் 8 பேர் வாக்களித்தனர். அதனால் ஜனாசாக்களை அடக்கம் செய்ய அரசு அனுமதிக்கும் என நம்பினர். அது நடக்கவில்லை.

அண்மையில் பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரை நடந்த போராட்டத்தில் முஸ்லிம்கள் இணைந்தது என்பது ஓர் அடையாளமே தவிர அவர்கள் சிங்கள மக்களின் பக்கமிருந்து தமிழர்களுடன் சேர்வார்கள் என்பதை பெருமளவில் எதிர்பார்க்க முடியாது. ஏனெனில் நலன்கள் சார்ந்ததே அரசியல். முஸ்லிம்களைப் பொறுத்தவரையில் தமிழர்களிடம் இருந்து அவர்களுக்குக் கிடைக்கும் நலன்களைவிட சிங்களவர்களிடமிருந்து கிடைக்கும் நலன்கள் அதிகமானவை, முக்கியமானவை. எனவே எப்போதும் சிங்களவர்களை அவர்கள் சார்வதைத் தவிர்க்க முடியாது.

ரஹூப் ஹக்கீம், ரிசாத் பதியுதீன், ஹிஸ்புல்லா போன்ற முக்கிய முஸ்லிம் தலைவர்கள் இந்த ஊர்வலத்தில் வெளிப்படையாகக் கலந்துகொள்ளவில்லை என்பதைக் கவனித்தாலே இது புரியும்.

ஜெனீவா மனித உரிமைப் பிரச்சினை மற்றும் பாகிஸ்தான் பிரதமர் இம்ரானின் இலங்கை வருகை போன்றனவற் றுக்குப் பெயரளவிலான ஒரு பச்சை விளக்கைத் தலைமை அமைச்சர் மகிந்த காட்டியிருக்கிறார் என்றே அவருடைய ஜனாசா அடக்கம் பற்றிய சிறிய அறிவிப்பை எடுத்துக்கொள்ள வேண்டியிருக்கிறது.. இது நடைமுறைப்படுத்தப்படும் பட்சத்தில் தமிழர் தரப்பை உதறிவிட்டு அதிபருக்கும் தலைமை அமைச்சருக்கும் முஸ்லிம் தரப்பு நன்றி தெரிவித்தல் என்ற சாட்டுப்போக்கில் அவர்கள் இருவரையும் இலகுவில் அணுகித் தமது எதிர்கால அரசியலைத் திட்டமிட வாய்ப்புண்டு.

முஸ்லிம்களை அரசியல் ரீதியாகக் கையாள்வதற்குக் கோட்டாபய அரசுக்குக் கிடைத்த அரிய வாய்ப்பே ஜனாச அடக்கம் பற்றிய விடயம். கடந்த ஒரு வருட காலப் பகுதிக்குள் ஜனாசா அடக்கத்தை மையமாக வைத்து முஸ்லிம்களைக் கையாள்வதில் அரசு வெற்றி கண்டிருக்கிறது.

தலைமை அமைச்சரின் ஜனாசாக்களைப் புதைக்க முடியும் என்ற கருத்தைப் பௌத்த பிக்குகள் எதிர்க்கின்றனர். அதைக் கூறுவதற்குப் பிரதமர் யார்? அது பற்றித் தீர்மானம் எடுக்க வேண்டியவர்கள் மருத்துவத் துறை சார்ந்தவர்களும் மண் ஆராய்ச்சி சம்பந்தப்பட்ட ஆய்வாளர்களுமே என்கின்றனர் அவர்கள்.

இந்த விடயத்தில் முடிவெடுக்கக்கூடிய அதிகாரத்தில் உள்ளவரான அதிபர் கோட்டாபய ராஜபக்சகூட தலைமை அமைச்சரின் கருத்தை ஆமோதிக்கும் விதத்தில் கருத்து எதுவும் கூறவில்லை என்பதையும் கவனத்தில் கொள்வது அவசியம்.

தலைமை அமைச்சரின் அறிவிப்பை அமெரிக்கா, பிரிட்டன், பாகிஸ்தான் ஆகிய நாடுகளும் உள்ளூர் முஸ்லிம் அரசியல் தலைவர்களும் உடனடியாக வரவேற்றபோதிலும் அதற்கான அரசிதழ் அறிவித்தல் இதுவரை வெளியிடப்படவில்லை.

ஐ.நாவில் மனித உரிமைப் பிரச்சினையைச் எதிர்கொள்ளவுள்ள நிலையில் இலங்கையில் முக்கிய இரண்டு இனங்களையும் பகைத்துக் கொள்ளாது இருக்கவேண்டும் என்பதில் அரசு உறுதியாக இருப்பது தெரிகிறது. மீண்டும் ஜனாசா அடக்கம் ஓர் அரசியல் நாடகமாக மாறுவதற்கான வாய்ப்புக்களே கொழும்பு அரசியல் களத்தில் வெளிச்சமாக இருக்கிறது. ■

## சுண்டங்காய்க் குழம்பு




யாழ்ப்பாணத்தைப் பொறுத்தவரை அரிதாகக் கிடைப்பதும் ஆங்காங்கே ஒரு சிலரால் சமைக்கப்படுவதுமாக இருக்கின்ற காய்கறி இது. "சுண்டங்காய் காப்பணம் சுமைக்கூலி முக்காப்பணம்" என்று நம்மவர் மத்தியில் இருக்கிற சொல்லாடல் இதன் பழங்காலப் பயன்பாடு பற்றிக் கூறி நிற்கிறது.

சுண்டங்காய் என்று பேச்சு வழக்கில் அழைக்கப்படினும் சுண்டங் கத்தரி என்பதே இதன் நாமம். மிகச் சிறியது ஆகையால் சுண்டங்காய் என்று அழைக்கிறார்கள்போல. கத்தரிக்காயின் இனம் ஆதலால் சுண்டங் கத்தரி என்கிறார்கள். சிறிய வட்ட வடிவிலான இதன் உள்ளகத்தில் கத்தரி விதைகள் போலான சிறு விதைகளைக் காணமுடியும். சிறியதானலும் அதிக மருத்துவத் தன்மையைக் கொண்டிருப்பதால் சுண்டங்காய்க்கிருக்கிற மவுசு பலருக்குத் தெரிந்திருப்பதில்லை.


வைத்தியர்கள் பலருக்கும் அவர்களின் பரிந்துரையைப் பெறுபவர்களுக்குமே இந்தச் சிறிய காயின் மகத்துவம் தெரியக் கிடைக்கிறது. நீரிழிவுக்கு மிகப் பயனளிக்கும் உணவாகவும் சுவாச நோய்கள், குடற்புண் மற்றும் வயிற்றுப் புழுக்கள் போன்றவற்றுக்குத் தீர்வாகவும் இது இருக்கிறது. சிறியளவு கசப்புத் தன்மை இருந்தாலும் சுவையாக உணவாக்கும்போது இதன் கசப்புத் தன்மை தூர ஓடிவிடுகிறது. உணவு மருந்தாகிறது.


### தேவையான பொருள்கள்

சுண்டங்காய்கள் அல்லது 3 டம்ளர் அளவு, தக்காளிப் பழங்கள் 2. நல்லெண்ணை வதக்குவதற்கு, சின்னவெங்காயம் பத்து, உள்ளி 4 பற்கள், பெருஞ்சீரகம், உப்பு, புளி, கறிவேப்பிலை ஆகியன தேவையான அளவு, தேங்காய்ப்பால் ஒன்றரை டம்ளர், கறிவேப்பிலை 1 கெட்டு.

### எப்படிச் சமைப்பது…?

முதலில் சுண்டங்காய்களைக் கழுவிச் சுத்தப்படுத்திக் கொள்ளுங்கள். சுத்தப்படுத்திய காய்களை ஒன்றாக்கி அவற்றைக் குத்தி (காய்கள் ஒவ்வொன்றும் உடையும் வரை) உள்ளே இருக்கின்ற விதைகள் வெளியே வருமாறு ஆக்குங்கள். பின்னர் சட்டி ஒன்றை அடுப்பில் வைத்து அதில் எண்ணெய்யை ஊற்றிச் சீரகம், வெங்காயம், உள்ளி ஆகியவற்றை இட்டு வதக்கி அவை வதங்கியதும் சுண்டங்காய்களைப் போட்டு வதக்குங்கள். சுண்டங்காய்கள் நன்கு வதங்கிவரவேண்டும். பின்னர் தேங்காய்ப்பால் சேருங்கள், தேவையான உறைப்புக்குத் தூள் சேருங்கள். பின்னர் புளிக் கரைசலை விட்டுக் கொதிக்க வையுங்கள். கொதித்து வரத் தக்காளிப் பழங்களை நறுக்கிப் போடுங்கள். கறிவேப்பிலையைக் கழுவிப் போடுங்கள். சிறிது நேரம் மூடி நன்கு கொதிக்க விடுங்கள். குழம்பு சற்று வற்றிப்போகும் தருணத்தில் அடுப்பில் இருந்து இறக்குங்கள். இப்போது சுவையான ஆரோக்கியம் நிறைந்த சுண்டங்காய்க் குழப்பு தயார்…!





# ஆயிரம் காலத்து தாய்மரம்..!!

என். குமரன்

## வெளுத்து வாங்கும் மகேந்திரத்தார் 05

"தாய் தன்ர பிள்ளையளைத்தான் இருக்கும் வரைக்கும் எப்பிடி கஸ்டம் இல்லாம பாத்துக் கொள்ளுவாளோ, அதே போலத் தான் தம்பி இந்தப் பனை மரமும்.." கருத்துக்களையும், சமூகப் பிரச்சினைகளையும் தன்பாணியில் சொல்லி வந்த மகேந்திரத்தார், கற்பகதரு என்று சொல்லுகின்ற பனைமரம் பற்றிச் சொல்ல ஆரம்பித்தார்.

"ஒரு பனைமரம் நட்டு அது வளர்ந்து பருவமடையிற வயசு வாறதுக்கு முப்பது தொடக்கம் முப்பத்தஞ்சு வருசம் வரைக்கும் எடுக்கும், அப்பிடி வளர்ந்த அந்த மரம் ஆயிரம் ஆண்டுகளுக்கு அழியாமலுக்கு நிக்கும். அது எத்தினை வருசம் அழியாமலுக்கு நிக்குமோ, அத்தினை வருசம் பயன் தரும்"

"இண்டைக்குத் தம்பி, வளவுக்குள்ள ஒரு பனை மரம் நிக்குது எண்டால் அதைக் கண்ட ஒருத்தன் வந்து நான் இவ்வளவு காசு தாறன் வெட்டட்டுமோ எண்டு கேட்டு ஆக்கினை பண்ணி, இன்னும் ஆயிரம் ரண்டாயிரம் கூடத்தாறன் எண்டு சொன்னால்.. எங்கடையாக்கள் காசு வருகுதுதானே எண்டு போட்டு சரி வெட்டு எண்டு விடுகினம். அந்த பனைமரம் வெட்டி வாற காசு ஒரு ஐஞ்சு நாளைக்கு கிடக்குமோ தெரியாது.. ஆனால் அந்தப் பனைமரம் வெட்டாமலுக்கு நிண்டிச்சு தெண்டா வருசம் முழுக்கச் சாப்பிடக் கூடியளவுக்கு பயன்கிடைக்கும் எண்டு அதை வெட்டுற எங்கடை யளுக்குத் தெரியாது.." பனை மரங்கள் அழிந்து போகின்ற நிலையை நினைத்து நொந்து கொள்கிறார் அவர்.

பனைமரத்தில் அப்பிடி என்ன வருசம் முழுக்கவும் நன்மை தாற விசயம் இருக்கு என்று நான் கேட்க "பனையை ஆண்பனை, பெண் பனை எண்டு இரண்டு விதமாப் பிரிக்கலாம். இதில ஆண் பனையில இருந்து கள்ளும் கருப்பணியும் மட்டும்தான் எடுக்கலாம் ஆனால் பெண் பனைதான் நான் சொன்ன மாதிரி வருசம் முழுக்க பயன் தருகிற தாய் மரம். எப்பிடி யெண்டால், முதலில நொங்கு. இந்த நொங்கு இளனியைவிட சுவையான ஒண்டு, வெய்யில் காலத்தில ஆடு மாடு மேய்க்கிறவை தோட்டங் களுக்குப் போறவை நொங்கைக் கண்டால் விட மாட்டினம். வெட்டிக் குடிச்சிட்டுத்தான் போவினை, வெயில் நேரத்தில குடிச்சால் அமிர்தம்தான். அதுக்குப் பிறகு, பனம் பழம். பனம் பழம் பழுத்து விழுந்திச்சுதெண்டா அதைப் பொறுக்கிச் சுட்டுச் சாப்பிட எண்டு ஒரு கூட்டம் திரியும். அதே போலத்தான் பனம் பழத்தில பனியாரம் சுடுவினை. அதுக் குப் பேர்தான் பனங்காய்ப் பணியாரம். இப்ப சில கடை வழிய ஒரு பனங்காய்ப் பணியாரம் ஐஞ்சு ரூவாய்க்கும் விக்கிறாங்கள். அந்தக் காலத்தில எங்களுக்கு முக்கியமான சாப்பாடும் அதுதான், நொறுக்குத் தீனும் அதுதான் . அதைப் போல பினாட்டுச் செய்வினம். நல்ல பனை ஓலையில செய்த பாயில பனம்பழத்தை பினைஞ்சு போட்டு நாலஞ்சு நாளைக்கு வெய்யில்ல காய விட்டு, அது ஒரு ரொபியின்ட மொத்தத்துக்கு வர, எடுத்து சின்னன் சின்னனா வெட்டி பொலுத்தீன்ல சுத்தி வைச்சிருப்பினை. நாங்கள் பள்ளிக்கூடம் போறண்டாலும் சரி, வேலைக்குப் போறதெண்டாலும் சரி அதில ரண்டு மூண்டு துண்டையும் எடுத்துச் சாப்பிட்டிட்டு, பழந்தண்ணியும் தரு வினை குடிச்சிட்டுப் போவம்.

பனம் பழம் முடிய, பனம் விதையத் தாட்டு பனங்கிழங்கு வரும். ரண்டு மூண்டு மாதத்தில் பனங்கிழங்கை எடுக்கலாம். பனங்கிழங்கு அவிச்சுப் போட்டும் சாப்பிடலாம், ஒடியல் போட்டும் சாப்பிடலாம். நாங்கள் பள்ளிக்கூடம் போகேக்க, வீட்டில பனங்கிழங்கு அவச்சிச்சினம் எண்டா, பொக்கட்டுக்குள்ள போட்டுக் கொண்டு போய் வகுப்பில பெடியளுக்கும் குடுத்து சாப்பிடுவம்.." மகேந்திரத்தார் பள்ளிக்காலத்து நினைவுகளை மனக்கண்ணில் கொண்டு வந்தார்.

"ஒடியல் போட்டிச்சினம் எண்டால், அதை பக்கற்றுகளுக்குள்ள போட்டு வச்சிருந்து கால காலத்துக்கும் சாப்பிடலாம். அதையே தூள் ஆக்கி வச்சிருந்து காத்துப் போகாத போத்தலில போட்டு வச்சிருந்தால் ஒருவருசத்துக்கு வச்சிருக்கலாம். இதைத்தான் ஒரு வருசத்துக்கு சாப்பிடலாம் எண்டு நான் முதல் சொன்னனான். அதெப்பிடி எண்டு யோசிப்பியள், தம்பி, ஒடியல்மாவில புட்டு அவிக்கலாம், தேங்காய்ப்பூ போட்டு குழைச்சு சாப்பிடலாம். அதையெல்லாம்விட முக்கியமா, அந்தக் காலத்தில பெரும்பாலானவர்களின்ட முக்கியமான மத்தியானச் சாப்பாடு ஒடியல் கூழ்தான். பனங்கட்டி போட்டு கூள் காச்சிக் குடிக் கிறது இப்ப ஆடிப் பிறப்பில மட்டும்தான். ஆனால் அந்தக் காலத்தில மத்தியானச் சாப்பாடே அதுவாத்தான் இருக்கும்.

அதைவிட, இப்ப பெடியள் சாராயம் வாங்கிக் குடிச்சு பம்பலடிக்கிற போல, நாங்கள் கடற்கரைக்குப் போய் கடலுணவுகள் எல்லாம் வாங்கிக் கொண்டுவந்து போட்டு மச்சக் கூழ் காச்சி அக்கம் பக்கத்து பெடியள் எல்லாரையும் கூப்பிட்டுக் குடிப்பம். அது ஒரு பொழுதுபோக்கு எங்களுக்கு" தங்களுடைய இள வயது நினைவுகளை எண்ணிப்பார்த்துப் பூரித்துக் கொள்கின்றார்.

"இண்டைக்குத் தம்பி பலருக்கு ஒடியல் மாவும் தெரியாது ஒடியல்மாப் புட்டும் தெரியாது. கிட்டடியில ஆரோ ஒரு பொலிஸ்காரன் யாழ்பாணத்தார் புட்டுச் சாப்பிட்டவை அவையளை பீசாவோ என்னமோ சாப்பிட வச்சது தாங்கள் எண்டு சொன்னவராம், அதுக்குப் பிறகு எங்கட பெடியள் செய்த அக்கப்போரில மன்னிப்பும் கேட்டவராம். அதுக்குப் பிறகு எங்கட பொடியள் புட்டுக்கு எண்டு பாட்டெல்லாம் பாடினவங்களாம். அந்தப் பாட்டில புட்டுகளிண்டை வகையள் கனக்கச் சொல்லியிருந்த வங்கள் அல்லோ.. அதுக்குப் பிறகு தான் எங்கடை இப்பத்தையான் ஆக்கள் கனபேருக்கு இப்பிடியெல்லாம் புட்டு இருக்குதெண்டே தெரிய வந்திச்சுது.." என்றார் நகைச்சுவை கலந்த ஆதங்கத்துடன்.

"பனைமரம் தம்பி தனியச் சாப்பாட்டுக்கு மட்டுமில்ல, பாய் பின்னுறது, பெட்டி கடகம் இளைக்கிறது, வீடுகளுக்கு கூரை மேயிறது எண்டு எல்லாத்துக்கும் பயன் படுத்தினாங்கள். அதைவிட தொடக்கத்திலயிருந்து தொண்ணூ றாம் ஆண்டு சண்டை வரைக்கும் பனம் நார், ஈக்கில் அதுகளைக் கொண்டு பின்னின பட்டை யில தான் தோட்டங்களுக்குத் தண்ணியிறைச் சவையள். உந்த மேசன்மார் இப்பவும் கட்ட டங்கள் கட்டேக்க சொல்லுவினம் இத்தினை கட கம் சல்லி போடு, மண் போடு எண்டு அதெல்லாம் பனையீக்கில்ல செய்யிற கடகங்கள்தான். உப்பிடி பனையெண்டு எங்கடை வாழ்க்கையில ஒரு குடும் பத்து ஆள் போலத்தான் இருந்தது.."

**பனையெண்டது எங்கடை வாழ்க்கையில ஒரு குடும்பத்து ஆள் போலத்தான்**

"ஒருக்கால் என்ட சினேகிதன் சவுதியில இருந்து வந்தவன். அவன் சொன்னான் அங்கத்தையான் பெரிய பெரிய முதலாளிமார் எல்லாம் ரோட்டால போகேக்க பேரிச்சை மரத்திலயிருந்து பேரீச்சம் பழம் விழுந்து ரோட்டில கிடந்தா இறங்கி அதை ஓரமா தட்டி விட்டிட்டுத்தான் போவினமாம். ஏனென்டால், அவங்களை உயர்த்திவிட்டது அந்தப் பேரீச்சை மரம் தானாம். அதேபோலத் தான் இந்த பனை மரமும் எத்தினையோ விதத் தில எங்கடை சனத்துக்கு நன்மையா இருந்திச்சு. ஆனா எங்கடையாக்கள் தங்களுக்கு வீடுகட்ட வும், ரொயிலட் கட்டவும், கரண்ட் போஸ்ட் போடவும் பனை மரம் இடைஞ்சலாக் கிடக்கு எண்டு வெட்டிறாங்கள்.. முந்தி இயக்கம் இருந்த காலத்தில, ஒரு பனையை தறிக்கிறதெண்டால் ஐஞ்சு விதை நட்டால் தான் வெட்ட விடுவாங்கள் எண்டு சட்டம் போட்டவங்கள். அதோட குளக்கட்டுகள், நீரோட்ட மான இடங்களில பனம் விதை நட வேணும் எண்டு ஊக்குவிச்சவங்கள்.. இண்டைக்கு பனையும் இல்ல ஒண்டுமில்லாமல் போச்சுது.." அவரது பேச்சில் எதையோ இழந்துவிட்டது போன்ற உணர்வு வெளிப்படுகின்றது.

"இண்டைய காலத்தில பனைய வளர்க்கிற தோட, அதால அடையிற பயன்களை சொன்னாலே எத்தினையோ சனம் பனம் விதையளை நடும். பிறந்தநாள், கலியாணம், நினைவு நாள் முதற்கொண்டு ஒரு அக்சிடன்ட் பட்டாலும் அந்தண்டு ஒரு பனைய நடுங்கோ, நினைவா வளரும் காலா காலத்துக்கும் உங்கடை பிள்ளை யள், பேரன், பூட்டி எண்டு சந்ததிக்கே அண்டைக்கு நடந்த விசயத்தைச் சொல்லி ஞாபகங்களை மீட்டுப் பாக்கலாம்.." தனக்குப் பக்கத்தில யிருந்த பனை மரத்தை தடவிய படியே சொன்னார் மகேந்தி ரத்தார். சிலவேளை அந்தப் பனைக் குப் பின்னால் கூட ஏதேனும் கதை இருக்க லாம்..

(தொடரும்)





**இயக்கம் இருந்த காலத்தில, ஒரு பனையை தறிக்கிறதெண்டால் ஐஞ்சு விதை நட்டால் தான் வெட்ட விடுவாங்கள்**



# காதலுக்கு ஓர் தினம்..!!

என்.குமரன்





மழைக்கு மண் மீது காதல், வண்டுக்கு மலர் மீது காதல், மீன்களுக்கு தண்ணீர் மீது காதல், கண்களுக்குக் கண்ணீர் மீது காதல் என்று காதல் எங்கும் எதிலும்பரவியுள்ளது. ஆண்கள் பெண்கள் மீதும் பெண்கள் ஆண்கள் மீதும் தீராப் பிரியம் கொண்டு காதல் எனும் அலையில் மூழ்கி தத்தளிக்கிறார்கள். இதில் மீண்டவர்களும்இருக்கின்றார்கள் மாண்டவர்களும் இருக்கிறார்கள். ஆனால் காதல் வாழ்கிறது.

கண்டதற்கெல்லாம் ஒரு நாளை ஒதுக்கி வைத்திருக்கும் மனிதர்கள் காதலை விடுவார்களா. அதுதான் மாசி மாதம் 14ஆம் திகதியைக் கண்டுபிடித்திருக்கிறார்கள். இது காதலைப் புனிதப்படுத்தும் நாள் என்கிறார்கள் காதலிப்பவர்கள். சமூகச் சீரழிவுக்கான நாள் என்று தூற்றுவோரும் இருக்கவே செய்கிறார்கள். ஆனால், காதல் இன்றி வாழ்தல் சாத்தியமல்ல என்பதே அனுபவ அறிவு.

**காதலர் தின வரலாறு..**

ரோமானிய நாட்டு அரசன் தனது நாட்டில் திருமணங்கள் நடக்கக்கூடாது என்று உத்தரவிட்டான். ஏற்கனவே நடைபெற்ற திருமணக் குற்றங்கள், அவை செல்லாதவை என்றும் பைத்தியக்காரத்தனமான ஓர் உத்தரவைப் பிறப்பித்தான்.இந்த உத்தரவை மீறி, 'வேலன்டைன்ஸ்' எனும் பாதிரியார் இரகசியமாக நாட்டு மக்களுக்குத் திருமணங்களை நடத்தி வைத்திருந்தார். இதனையறிந்த அரசன், பாதிரியாரை சிறையில் அடைத்தான்.

சிறைக்குச் சென்ற பாதிரியார், அங்கிருந்த காவலாளியின் மகளுடன் பழகி காதலாகிக் கசிந்தார். காதலைப் பரிமாறிக்கொண்டார். இருவரும் காதலித்து வந்த நிலையில், இந்த விடயம் மன்னரின் காதுகளைச் சென்றடைந்தது. இதனையடுத்து கோபமடைந்த அரசன்,




பாதிரியாரைச் சித்திரவதைசெய்து கி.பி 270ஆம் ஆண்டு மாசி மாதம் 14ம் திகதி தூக்கிலிட்டான்.

அந்த நாளே இன்று காதலர் தினமாகக் ('வேலன்டைன்ஸ் டே') கொண்டாடப்பட்டு வருகிறது. இங்கிலாந்து மற்றும் பிரான்ஸ் போன்ற நாடுகளில் இந்தக் காதலர் தினமானது மிகவும் பிரபல்யம் வாய்ந்ததுடன் மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வருகின்றது. இலங்கை போன்ற நாடுகளில் இது வியாபார நோக்கத்துடன் மக்களிடையே பரப்பப்பட்டு இப்போது கணிசமானோர் வீதிகளில் காதலை வெளிப்படுத்துவது வரைக்கும் வளர்ந்துள்ளது.

**அன்றைய காதல்..**

காதல் என்பது ஓர் உணர்வு. ஒருவரைப் பார்த்தவுடன் உடலில் ஏற்படும் அமிலச் சுரப்பும் மூளையில் ஏற்படும் கிளர்ச்சி மின் அதிர்வுகளுமே காதல் எனப்படுகின்றது என்று அறிவியல் வரையறுக்கிறது. ஆனால், அது உயிரினும் மேலான உணர்வு என்று மனிதர்களில் ஒரு பகுதியினரால் கொண்டாடப்படுகின்து. காதல் உணர்வு என்றாலும் அதை வெளிப்படுத்த பல செயல்கள் தேவைப்படுகின்றன.

அந்தக் காலத்தில் இருவர் காதலித்தாலும் என்றோ ஒரு நாள் நேரில் சந்திக்கக் கிடைப்பதே காதலை வெளிப்படுத்தி உறுதிப்படுத்துவதற்குப் போதுமானதாக இருந்தது. அன்பினைக் கண்களாலேயே பரிமாற்றிக்கொண்டு மணமேடை வரை வந்த காதல்கள் அன்று வியாபித்திருந்தன. அடுத்த சந்திப்பு எப்போது நிகழும் என எதிர்பார்த்துக் காத்திருப்பதே அவர்களுக்கு அலாதி சுகத்தைக் கொடுத்தது.

அந்தக் காதல்களில் மதிப்பும், மரியாதையும், ஒருவருக்கு ஒருவர் புரிந்துணர்ந்து நடக்கக் கூடிய தன்மையும் காணப்பட்டது. அவற்றுக்கு நீண்ட ஆயுளும் இருந்தது. நூற்றில் ஒன்றிரண்டு காதல்கள்தான் கைகூடாமல் போயின. அப்படிப்பட்ட காதல்கள் காவியக் காதல்களாகின.

**இன்றைய காதல்..**

இன்று காதல் சில ஈமோஜிகளில் இலகுவாகப் பரிமாறப்பட்டுவிடுகிறது. அதே வேகத்தில் 'பிரேக்கப்' ஆகப் பிரிந்தும் சென்றுவிடுகின்றது. கண்டதும் காதல் கொண்டதும் கோலம் என்று அன்று சொன்னார்கள். இன்றோ கண்டதும் காதல் கோபம் கொண்டதும் பிரிவு என்பதே இளையோரின் காதலாக இருக்கிறது. அன்பின் மறு உருவமான காதல் இன்று காமத்தின் மறு உருவமாகிவிட்டது என்கிற குற்றச்சாட்டுக்கும் குறைவில்லை.

காதல் என்கிற உணர்வு என்ன என்பதைப் புரிந்துகொள்ளும் வயதிற்கு முன்பே, பதின்ம வயதிலேயே காதல் வயப்படுகின்றோம் என்று இனக்கிளர்ச்சியை காதலாக வரிந்து கொண்டு தங்கள் எதிர்காலத்தைத் தொலைக்கின்றவர்களும் பலர் இருக்கிறார்கள்.

**இன்று காதல் சில ஈமோஜிகளில் இலகுவாகப் பரிமாறப்பட்டு விடுகிறது. அதே வேகத்தில் 'பிரேக்கப்' ஆகப் பிரிந்தும் சென்று விடுகின்றது.**

காதல் என்ற பெயரில் இன்று இளவயதுத் திருமணங்கள்தான் அதிகரித்திருக்கின்றன என்கிறார்கள் அதிகாரிகள். அத்தகைய இனக்கவர்ச்சி திருமணமான கொஞ்ச நாள்களிலேயே முரண்பாடுகளால் சிதைந்து மணவிலக்குகளிலும் விபரீத முடிவுகளிலும் கொண்டு சென்று நிறுத்துகின்றன என்கிறார்கள் உளவியலாளர்கள்.

இளமையில் கல் என்பதைப் போலவே காதலும் செய் ஆனால் காத்திரு என்பது அவர்களுக்குப் புரியாமல் போய்விடுகிறது.

**காதலர்தினக் கொண்டாட்டங்கள்**

பல ஆண்டுகளுக்கு முன்னர் தங்களுக்கு ஒருவரைப் பிடித்துக் கொண்டால் அதனை வெளிப்படுத்துவதற்கும் நேரடியாகச் சொல்லுவதற்க்குமான வாய்ப்பாக காதலர் தினத்தைப் பயன்படுத்திக்கொண்டார்கள். இன்று நினைத்த மாத்திரத்தில் காதலைத் தட்டிவிட அலைபேசிகள் கூடவே அலையும்போது காதலர் தினத்திற்கு அந்த மவுசு குறைந்து போய்விட்டது.

இன்று காதலர் தினம் ஒரு சடங்காக மாறிப் போய்விட்டது. நினைவுப் பரிசில்களைக் காதலர்களும் கணவன் மனைவியும் பரிமாறிக் கொள்ளும் சடங்காகவே காதலர் தினம் புதிய வார்ப்பு எடுத்திருக்கிறது. அது முற்றிலும் வியாபாரமாக்கப்பட்டுள்ளன. சிறிய இனிப்புப் பண்டங்களில் தொடங்கி, பெறுமதி வாய்ந்த



பரிசுப் பொருள்கள், காதல் சின்னங்கள் என்று இந்தத் தினத்தைக் குறி வைத்த வியாபாரப் பொருள்கள் கடைகளில் வந்து குவிகின்றன. பரிசு கொடுத்துக் கொண்டாடி னால் தான் அது காதலர் தினம் எனும் நிலைக்கு வந்துவிட்டது. காதலர் தினம் மட்டுமல்ல அன்னையர் தினம், தந்தை யர் தினக் கொண்டாட்டங்கள் என்று எல்லா வற்றிலுமே வியாபாரம்தான் மேலோங்கி விட்டது.

**திரைப்படங்கள்கற்றுக் கொடுக்கும் பாடம்..**

உல்லாச விடுதிகள், நட்சத்திர உணவக விடுதிகள், கடற்கரைகள் இவைகள்தான் இன்றைய காதலர் தினத்துக்கொண்டாட் டங்களுக்காகத் தேர்ந்தெடுக்கப்படும் இடங்கள். இவ்வாறு காதல் செய்வோரில் பெரும்பாலானோர் உண்மையான காத லர்கள் இல்லை என்பதும், பெரும்பாலான காதல்கள் வெயில் வந்ததும் மறைகின்ற பனித்துளி போல உடனே தோன்றி மறை வனவாக உள்ளன என்பதும் காதலை இளைய சமூகத்தினர் இன்னும் சரிவரப் புரிந்துகொள்ளவில்லையோ என்கிற கேள் வியை எழுப்புகின்றன.



தமிழ்த் திரைப்படங்களில் எல்லாக் காலங்களிலுமே வெற்றிகரமாக ஓடும் படங்கள் காதல் படங்களாகவே இருக் கின்றன. காதல் இல்லாத படங்கள் அபூர் வம் என்கிற நிலையில்தான் தமிழ்த் திரைப்படங்கள் எடுக்கப்படுகின்றன.


அவையே இளையோர் மத்தியிலும் பெரும் தாக்கத்தைச் செலுத்துகின்றன. வரன்முறைகளை மீறும் முரட்டுத்தனம் தான் காதலுக்கு மூலதனம் என்பதை தமிழ்த் திரைப்படங்களே இளம் தலை முறையினரிடம் கற்றுக்கொடுக்கின்றன. அத்துமீறல்கள் காதலின் அடிப்படை விதி களை இந்தத் திரைப்படங்களே கற்றுக் கொடுக்கின்றன.

**காதலர்தினம் தேவை தானா..?**

வருடம் 365 நாள்கள் இருக்கும்போது இந்த ஒரு நாள் தான் காதலைக் கொண் டாடவும், அன்பைப் பரிமாறவும் பிரகட னப்படுத்தப்பட்டுள்ளதா..? தனக்குக் காத லன் அல்லது காதலி இருப்பதனை வெளிப் படுத்தவும் கொண்டாடவும், காதலித்துப் பிரிந்தவர்கள் தங்கள் காதலை நினைத்து துக்கத்தில் உருகவும் (மதுபான சாலை களில் மதுப்பிரியர்களாக), காதலிக்காத வர்கள் தனக்கு காதலியோ,காதலனோ இல்லையே என்று ஏங்கித் தவிக்கவும் செய் யும் இந்தக் காதலர் தினம் தேவை தானா என்கின்ற கேள்விபலரிடமும் இன்றும் என்றும் உண்டு..

துன்பியல் என்னவென்றால் ஆண் டாண்டு காலத்திற்கும் இந்தக் கேள்வி நிலைத்திருக்கும் என்பதுதான். ■



# இயற்கைக்கு மாறானது

மிங் எனப்படுகின்ற விலங்கினம் முழுவதையும் கொன்றுவிடுவதற்கு டென்மார்க் முடிவெடுத் திருந்த செய்தியின் பின்னர் விலங்குகளைக் கொல்வது பற்றி வந்திருக்கின்ற செய்தி இது. புதிய வகையான வீரியம் மிக்க கொரோனா வைரஸைப் பரப்புவதாகக் கூறியே மிங் விலங்குகளைக் கொல்வதற்கு முடிவெடுக்கப்பட்டிருந்தது. அதன் பின் னர் இப்போது கொல்வதற்கு முடிவெடுக்கப் பட்டிருப்பது கொலம்பியாவில் உள்ள நீர் யானைகள் சிலவற்றை. ஆனால் அதற்குரிய காரணம் கொரோனா வைரஸ் அல்ல. அத் தோடு மனிதர்களுக்கு எவ்வித தீங்கையும் இவை விளைவிக்கவில்லை. அப்படி யிருக்க இவற்றை ஏன் கொல்கிறார்கள்...? என்ற கேள்வியுடன் தேடியதில் கிடைத்த பதில் சற்று விநோதமாக இருந்தது.

இந்த நீர்யானைகள் உலகின் மிகப் பெரிய பணக்காரராகவும் கொலம்பியாவில் பெரும் குற்றவாளியாகவும் இருந்த பப்லோ எஸ் கோபர் என்பவரால் வளர்க்கப்பட்டு வந்துள் ளன. 1993ஆம் ஆண்டில் அரச படை களால் அவர் கொல்லப்பட கைவிடப்பட்ட இந்த நீர்யானைகள் கொலம்பியாவின் மக்டாலினா என்கிற நதியில் தஞ்சமடைந்து வாழ்ந்து வருகின்றன. சுற்றுச்சூழலுக்கு இவற்றால் பாதிப்பு ஏற்படும் என்று கூறு கின்ற அறிவியலாளர்கள் அந்தப் பாதிப் பைத் தடுக்க வேண்டுமானால், இந்த நீர் யானைகளைக் கொல்ல வேண்டும் என் கின்றனர். இவற்றால் எப்படிச் சுற்றுச் சூழ லுக்குப் பாதிப்பு என்கிறீர்களா...?

கொலம்பியாவைப் பொறுத்தவரையில் நீர் யானை என்பது புதிய விலங்கு. தமது மேய்ப்பன் இறந்த பிறகு இவை அப்படியே இறந்து விடும் என்று கருதி அவற்றைக் கைவிட்டிருக்க, அவை உயிர் பிழைத்து வாழ்ந்து வருகின்றன. 120 வரையிலான நீர்யானைகள் இப்போது அங்கிருக்கின்றன. நீர் யானைகளின் தாயகமான ஆபிரிக்கா வுக்கு அடுத்து அதிக எண்ணிக்கையில் நீர் யானைகள் வாழ்வது கொலம்பியா வில்தான் என்கிறார்கள். இவற்றை இவ் வாறே வாழ அனுமதித்தால் 2034 ஆம் ஆண்டில் இவற்றின் எண்ணிக்கை ஆயி ரத்து 400க்கும் அதிகமாகும் என்று கரு தப்படுகிறது. காரணம், கொலம்பியாவில் இயற்கையாகவே இவற்றைக் கொல்லக் கூடிய - வேட்டையாடக்கூடிய விலங்குகள் (சிங்கம், முதலை) இல்லை. காலநிலையும் இவற்றின் பெருக்கத்துக்கு ஊக்கமளிக் கிறது.

அத்தோடு இந்த நீர் யானைகளால் ஆபத்தை எதிர்கொண்டுள்ள - அழிவின் விளிம்பில் உள்ள சில நீர்வாழ் உயிரினங்கள் இடம் பெயர்ந்து செல்லும் நிலை வரும், அவ்வாறு சென்றால் நீர் நிலைகளில் இர சாயனத் தன்மை மாறுபடும், அது மீன் களுக்கு ஆபத்தானதாக மாறக்கூடும். கொலம்பியாவின் மிகப் பெரிய நீர்ப் படுக்கைப் பகுதியில் நீர் யானைகள் எண் ணிக்கை அதிகரித்து வருகிறது. அந்த நீர் நிலையை நம்பித்தான் பல ஆயிரம் பேர் வாழ்ந்து வருகிறார்கள். நீர் யானைகளின் இந்தப் பெருக்கம் நடக்காமல் தடுக்க வேண்டுமானால் ஆண்டுதோறும் 30 நீர்யானைகளைக் கொல்ல வேண்டும் என்கின்றனர். ■

# "எனக்கு 80, உனக்கு 29" இணையத்தை கலக்கிய காதல்..!!

அண்மைய நாள்களில் தென்னாப்பிரிக்கா விருந்து ஒரு காதல் கதை இணையத்தை ஆட்கொண்டது. "காதலுக்கு கண் இல்லை" என்று சொல்வார்களே அப்படியான ஒரு காதல் கதை தான் அது.

தென்னாப்பிரிக்க நாட்டின் கேப்டவுன் நக ரத்தில் வசிக்கும், 29 வயதாகும் இளம்பெண்ணின் பெயர் டெர்சல் ராஸ் மஸ். சட்டக் கல்லூரியில் படித்துக்கொண்டே உள்ளூர் பத்திரிக்கை யொன்றில் வேலை செய்துவருகிறார். உள் ளூர் செய்தித்தாள் நடத் திய நிகழ்ச்சி ஒன்றில் கலந்துகொள்ள டெர்செல் ராஸ்மஸ் சென்றபோது 80 வயதான வில்சன் ராஸ் மஸ் எனும் முதியவரை சந்தித்துள்ளார். எப் படியோ இருவருக்கு மிடையில் காதல் மலர்ந் துள்ளது. வயதைத் தாண்டி இருவருக்கும் இடையே ஏதோ ஒரு இடத்தில் மனது ஒத்துப் போய் இருக்கிறது.



இருவரும் சென்று டெர்சலின் தாயிடம் சென்று தங்கள் காதல் விவகாரத்தை சொல்ல, அதைக் கேட்டதும் அவர் கோபமடைந்துள்ளார். அதன் பிறகு அந்த தாய்க்கு காதல் ஜோடி இருவரும் 'காதலுக்கு வய தில்லை' என்பதை புரியவைத்து திருமணத்துக்கு ஒப்புக்கொள் ளச் செய்தனர். அதில் இன்னு மொரு சுவாரஸ்யம் என்ன வென்றால் டெர்சலின் தாயை விடவும் வில்சன் சுமார் 24 வருடங்கள் மூத்தவராவார்.

# மீதிணிசு விழிநிலையும் உயிர் ஒளியின் மொழியும்

■ மருத்துவர் **சி. யமுனாநந்தா**

குவாண்டம் பௌதீகத்தில் ஒளியின் இயல்புகளைக் கண்டறிவதற்காகக் கடந்த 100 வருடகாலங்களாக நடந்த ஆராய்ச்சிகளை விடவும் கடந்த 10 வருடகாலமாக முன்னெடுக்கப்படுகின்ற ஆராய்ச்சிகள் அதிக விடயத்தை வெளிப்படுத்தியுள்ளன. குவாண்டம் பௌதீகத்தை உருஅரு மீதிணிசு இயல் என அழைக்கலாம். உருஅரு மீதிணிசுப் பௌதீகம் வேகமாக வளர்ச்சி அடைந்து வருகின்றது. இவற்றின் நடைமுறைப் பயன்பாடுகள் பல உண்டு. இவற்றில் உயிரியல் ரீதியான ஒளியின் மொழியை அறிவதானது எதிர்காலத்துக்கான காத்திரமான மனித நாகரீகத்துக்கு இட்டுச் செல்லும்.

**தாவரங்களிலும் மனிதரிலும் ஒளி**

உயிரியலில் ஒளியின் மொழியைத் தாவரங்களின் ஒளித்தொகுப்பிலும், மனிதனில் மூளை நரம்புக்கலம் வரையிலும் அவதானிக்கக்கூடியதாக உள்ளது. இவை அண்மைய விஞ்ஞானக் கண்டுபிடிப்புக்களாகும். உயிரிகளில் ஒளியின் தாக்கம் உயிர் மீதிணிசு நிலையில் நிகழ்கின்றது. இவை பின்வரும் ஐந்து வகைகளாகச் செயற்படுகின்றன.


(1) இரண்டு அல்லது இரண்டிற்கு மேற்பட்ட பௌதீகநிலையில் மீதிணிசு இருத்தல்.

(2) இரண்டு அல்லது இரண்டிற்கு மேற்பட்ட பௌதீகநிலையில் மீதிணிசு உள்ளபோது அவற்றுக்கு இடையிலான தொடர்பு.

(3) இரண்டு அல்லது இரண்டிற்கு மேற்பட்ட பௌதீகநிலையில் மீதிணிசுகள் தொடர்பற்ற நிலையில் இருத்தல்.

(4) சக்திமட்டத் தடுப்புடைய இரண்டு பௌதீகநிலைகளுக்கு இடையே பூச்சியத்துடன் மீதிணிசு இடமாற்றம்.

(5) இரண்டு பௌதீகநிலை மீதிணிசுகளுக்கு இடையிலான நெருக்கம்



**திருமந்திரத்தில் காழும் ஒளி**

உயிர்மீதிணிசு உயிர்களில் காழும் ஒளியைத் திருமந்திரத்தில் கல்லொளி எனக் குறிப்பிடுகின்றார் திருமூலர். உயிர் ஒளியின் மேற்கூறிய ஐந்நிலை மொழி அட்டமாசித்திகளுக்குப் பௌதீக விளக்கத்தை அளிக்கும். தாவரங்களில் உயிர்மீதிணிசுத் தாக்கம் ஒளித்தொகுப்பில் செல்வாக்குச் செலுத்துகின்றது. பறவைகளின் பறத்தல் திசை உயிர்மீதிணிசுத் தாக்கத்தால் கட்டுப்படுத்தப்படுகின்றது. விலங்குகளின் மோப்பப்புலன் உயிர்மீதிணிசின் தாக்கத்தால் கட்டுப்படுகிறது. உடற்கலங்களில் பாரம் பரிய அலகுகளில் இருந்து செய்தி பிரதி எடுத்தல், நொதியத் தாக்கம் என்பவற்றிலும் மீதிணிசு நிலை செல்வாக்குச் செலுத்துகின்றது.

**மனித மூளையில் ஒளியலைகள்**


மனித மூளை யின் நரம்புக்கலங்களில் ஒளியலைகளின் காழல்கள் இருப்பது அண்மைய ஆய்வுகளில் கண்டறியப்பட்டுள்ளது. நரம்புக் கலங்களின் குழியவுருவில் உள்ள நுண்புன் குழாய்களில் கணத்தாக்கங்கள் கடத்தப்படுவதிலும் புரதங்கள் உருவாகுவதிலும் மீதிணிசு நிலை செல்வாக்குச் செலுத்துகின்றது. இங்கு பூச்சிய சக்தியுடன் மீதிணிசு இடமாற்றம் நிகழ்கின்றது. அவ்வாறே நரம்புக்கலங்களில் இழை மணியினுள் சக்தி உருவாக்கத்திலும் உயிர்திணிசு நிலை செல்வாக்குச் செலுத்துகின்றது. மேலும் நரம்புக் கல இணைப்புக்களில் கணத்தாக்கம் கடத்தப்படுவதற்கும், மீதிணிசு இடமாற்றம் பூச்சிய சக்தியின் உதவியுடன் செயலாற்றுகின்றது. நரம்புக்கல மென்சவ்வுகளுக்கு இடையே சக்தி மாற்றமும் பூட்டுச்சாவி முறையில் மீதிணிசு துரியநிலை மாற்றத்தால் ஏற்படுகின்றது.

> **உயிரியலில் ஒளியின் மொழியைத் தாவரங்களின் ஒளித்தொகுப்பிலும், மனிதனில் மூளை நரம்புக்கலம் வரையிலும் அவதானிக்கக்கூடியதாக உள்ளது.**

**மயக்க மருந்தின் செயற்பாட்டில் செல்வாக்கு**

மனிதனுக்கு மயக்கமருந்து கொடுத்து நினைவிழக்கச் செய்யும் மருத்துவத்தில் மீதிணிசு செயல்நிலை செல்வாக்குச் செலுத்துகின்றமை அவதானிக்கப்பட்டுள்ளது. குறிப்பாக Xenon வாயுவை மயக்க மருந்தாகப் பயன்படுத்தியபோது இது அவதானிக்கப்பட்டுள்ளது. உடற்றொழிலியல் மாற்றங்களுடன் மீதிணிசு நிலை மாற்றம் தொடர்புபட்டுள்ளது. இதற்கு அடிப்படையாக மீதிணிசு அதிர்வு நிலைகள் அமைகின்றன. மனிதனின் புத்திக்கூர்மையிலும் உயிர்த்திணிவின் அதிர்வுகளுக்குத் தொடர்பு உள்ளதாக அறியப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் மனச் சோர்வு உட்படப் பல உள நோய்களுக்கு உயிர் ஒளிச் சிகிச்சை சாத்தியமாகலாம்...! ■

## "குதிரை அழகிப் போட்டி" பரிசு 25கோடி..!!



ஆணழகன் போட்டி, உலக அழகிப் போட்டி போன்று மிருகங்களுக்கு இடையிலான அழகுப் போட்டிகள் பல்வேறு நாடுகளிலும் நடைபெறுவது வழமை. அந்த வகையில் அண்மையில் கட்டார் நாட்டில், குதிரைகளுக்கான அழகிப் போட்டி சிறப்பாக இடம்பெற்றுள்ளது.

கட்டாரின் தலைநகரான டோகாவில் இடம்பெற்ற இந்தப் போட்டியில் வளைகுடா நாடுகள் மற்றும் ஐரோப்பிய நாடுகளைச் சேர்ந்த 252 குதிரைகள் கலந்து கொண்டன. குதிரைகளின் வயதின் அடிப்படையில் மூன்று பிரிவுகளாக அவை பிரிக்கப்பட்டு முகத் தோற்றம், உடல்வாகு, நடை போன்றவற்றின் அடிப்படையில் வெற்றிபெற்ற குதிரைகள் தெரிவுசெய்யப்பட்டன.

இந்தப் போட்டியில் வெற்றி பெற்ற மூன்று குதிரைகளுக்கும் 25 கோடி ரூபா பெறுமதியான பரிசுத் தொகைகள் வழங்கப்பட்டிருந்தன.






# போர்க்குற்றத்தைச் சமப்படுத்த முயல்கிறது அரசு

● வி.அருணாசலம்

2 வாரங்களுக்கு முன்னர் யாழ்ப்பாணம் மத்திய பேருந்து நிலையைத்தை அண்மித்த பகுதியில் ஓர் ஆர்ப்பாட்டம் நடந்தது. அதில் கலந்து கொண்டவர்கள் யாவர்? யாரால் அது ஒழுங்கு செய்யப்பட்டது? போன்ற விடயங்களில் தெளிவற்ற நிலை காணப்படுகிறது. இந்த ஆர்ப்பாட்டமானது ஊடகங்களில் அதிக முக்கியத்துவம் பெறாவிட்டாலும் அந்த ஆர்ப்பாட்டம் ஏதோ உள்நோக்கம் கொண்டது என்று மட்டும் தெளிவாகிறது. இந்த ஆர்ப்பாட்டத்தின் பேசு பொருளாக இருந்தது என்னவெனில் விடுதலைப்புலிகளாலும் ஏனைய தமிழ் ஆயுதக் குழுக்களாலும் கொல்லப்பட்டவர்கள் தொடர்பிலும் விசாரணை நடத்தப்படவேண்டும் என்பதே. இராணுவம் போர்க்குற்றத்தில் ஈடுபட்டது, தமிழ் மக்கள் கொல்லப்பட்டனர் போன்ற விடயங்கள் இராணுவத்துக்கு மட்டும் சொந்தமானதல்ல, விடுதலைப் புலிகள் உட்பட அனைத்துத் தமிழ் ஆயுததாரிகளுக்கும் அதில் பொறுப்புள்ளது என்பதைக் காட்டும் நோக்கத்தைக் கொண்டிருந்தது இந்த ஆர்ப்பாட்டம். விடுதலைப் புலிகள், ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியினர், புளொட், ரெலோ, ஈ.பி.ஆர். எல்.எவ். எனச் சகல ஆயுதம் தாங்கிய செயற்பாட்டாளர்களுக்கும் கழுத்தில் சுருக்குப்போடும் ஓர் ஏற்பாடுபோலவே இது தெரிகிறது.


### அரசு தெளிவாக இருக்கிறது

இந்தத் தமிழ் ஆயுததாரிகளால் கொல்லப்பட்ட தமிழ், சிங்கள, முஸ்லிம்களின் பட்டியல் காலம் கடந்தாலும் அரசின் கையில் உள்ளது. விடுதலைப் புலிகளுக்கு எதிரான செயற்பாட்டில் இறங்கிய எதிர்த் தரப்பினர் இந்திய இராணுவத்துடனும் இலங்கை இராணுவத்துடனும் இணைந்து செயற்பட்டிருந்தார்கள். இத்தகைய ஆயுததாரிகளின் செயற்பாட்டுக்கு இந்திய இராணுவமோ, இலங்கை இராணுவமோ பொறுப்பேற்கப்போவதில்லை. இதனால் நேரடியாகப் படுகொலைகளில் சம்பந்தப்பட்டவர்கள் மீது இலகுவாகச் சட்ட நடவடிக்கை எடுக்க வாய்ப்புள்ளது. தற்போதைய அரசைப் பொறுத்தவரை தமது கட்சிக்கு ஆதரவளிக்கின்ற தமிழ் அரசியல்வாதிகள் ஆயுதம் தாங்காத தரப்பிரனாக இருக்க வேண்டும் என்பதில் தெளிவாக இருப்பது தெரிகிறது. இப்போதைக்கு வடக்கில் அங்கஜன் இராமநாதனும் கிழக்கில் வியாழேந்திரனும் முன்னிலைக்குக் கொண்டுவரப்பட்டுள்ளனர். இவர்கள் மீது தமிழ்த் தேசியக் கட்சிகள் படுகொலை தொடர்பான குற்றச்சாட்டுகளை முன்வைக்க முடியாது. ஆனால், கூட்டமைப்பில் அங்கம் வகிக்கின்ற புளொட், ரெலோ ஆகிய ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்ட தரப்பினரும் விக்னேஸ்வரனின் அணியில் சுரேஷ் பிரேமச் சந்திரனும் குற்றவாளிக் கூண்டில் ஏற்றப்படும் வாய்ப்புகள் அதிகம் இருக்கிறது. ஒரு கட்டத்தில் இராணுவத்தின் படுகொலைகள் பற்றிப் பேச முடியாதா சூழல் இவர்களுக்கு ஏற்படும்.




### கிழக்கில் கருணாவும் பிள்ளையானும்

வடக்கு நிலமை இவ்வாறிருக்க, கிழக்கில் கருணா, பிள்ளையான், கருணாகரம் (ஜெனா) ஆகியோருக்கு இதே நிலை ஏற்படலாம். இவ்வாறு தமிழ் ஆயுததாரிகள் ஒருபக்கமாக ஒதுக்கப்படுவதால் இரா.சம்பந்தன், மாவை சேனாதிராசா, ஏம்.ஏ. சுமந்திரன், கஜேந்திரகுமார் அணி என ஜனநாயக அரசியல் நடத்துபவர்கள் தமது அரசியல் சதுரங்க ஆட்டத்தில் அரசின் நிலைப்பாட்டை ஆதரிக்க வழி செய்யும். இதனால் இவர்கள் ஒருகட்டத்தில் ஆயுதம் தாங்கிய தமிழர் தரப்புக்கு ஆதரவளிக்காது ஒதுங்குவார்கள். யாழ்ப்பாணம் பேருந்து நிலையத்தில் நடந்த ஆர்ப்பாட்டம் தமிழ் அரசியல்வாதிகளின் ஜெனீவாக் குற்றச்சாட்டுகளுக்கு நிகராக மற்றோர் மறுத்தாணை ஆகும்.



### புலிகளுக்கு எதிரான ஆவணப்படுத்தல்கள்

இராணுவம் மட்டும்தான் தமிழ் மக்களைக் கொன்றது என்று குற்றம் சாட்ட முடியாத அளவுக்கு இலங்கை அரசு ஆவணங்களைத் தயாரித்து ஐ.நா மனித உரிமைப் பேரவையிடம் கையளிப்பதற்கான வாய்ப்புகள் அதிகம் உள்ளன. இதைவிட இறுதிப்போரில் நேரடியாகக் களத்தில் நின்ற முன்னாள் புலி உறுப்பினர்கள் சிலரை ஐ.நா மனித உரிமைப் பேரவையில் நேரடிச் சாட்சிகளாக (அரச சாட்சி) முன்னிலைப்படுத்தவும், ஆயுதம் தாங்கிய விடுதலைப் புலிகள் இறுதிப்போரில் மக்களைப் பலவந்தமாகத் தடுத்துவைத்திருந்தபோது மக்களில் 85ஆயிரத்துக்கு மேற்பட்டோரை ஓர் இரவில் இராணுவம் மீட்டதுபோன்ற இராணுவத்துக்குச் சார்பான சம்பவங்களில் சம்பந்தப்பட் சிலரையும் அங்கு முன்னிலைப்படுத்துவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படுவதாகத் தெரிகிறது. அத்தோடு ஆயுதம் தாங்கிய அமைப்புக்களின் படுகொலைகளைப் பட்டியல் படுத்துவதன் மூலம் இராணுவமும் ஆயுதம் தாங்கிய தமிழ் இயக்கங்களும் ஒன்றுதான் என்று சமப்படுத்த முனைவது தெரிகிறது. எனவே இவ்வாறான சூழலில் தமிழ்த் தலைவர்களும் தமது குரல்களை இது விடயத்தில் இனித் தாழ்த்த வேண்டியெ நிலை ஏற்படும்.

"நியாயத்தை எடுத்துரைக்க இராணுவத்துக்கு வாய்ப்பளிக்க வேண்டும்" என்று தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் தலைவர் பேராசிரியர் குணதாச அமரசேகர கூறியிருப்பது இங்கு கவனத்தில் கொள்ளப்படத்தக்கது. இந்தப் புது முயற்சியின் மூலம் இராணுவம் மீதான போர்க்குற்றத்தை சமப்படுத்த அரசு முயல்வதே பட்டவர்த்தனமாகிறது. ■

**“ இராணுவம் மட்டும்தான் தமிழ் மக்களைக் கொன்றது என்று குற்றம் சாட்ட முடியாத அளவுக்கு இலங்கை அரசு ஆவணங்களைத் தயாரித்து ஐ.நா மனித உரிமைப் பேரவையிடம் கையளிப்பதற்கான வாய்ப்புகள் அதிகம் உள்ளன. ”**

# திரைக்கு வந்தது “மான்ஸ்ரர் ஹன்ரர்”




போல் எஸ். டபிள்யு அண்டர்சன் என்பவரால் இயக்கப்பட்டு டோனி ஜா, மிலா ஜோவோவிச் ஆகியோரின் நடிப்பில் கடந்த வாரம் வெளியாகிய ஆங்கிலத் திரைப்படம் இது. இதே பெயரில் ஏற்கனவே உள்ள வீடியோ கேம் எனப்படுகின்ற விளையாட்டை அடிப்படையாக வைத்து உருவாக்கப்பட்ட படம் இது. வெளியாகிய மறுகணமே “விளையாட்டாகவே எடுக்கப்பட்டிருக்கிறது” என்கிற பெரும் விமர்சனத்தை எதிர்கொண்டிருக்கிறது.

மனிதர்களின் கண்ணுக்குத் தென்படாமல் புதிய உலகம் ஒன்று இயங்கிக் கொண்டிருக்கிறது. இராட்சதத் தோற்றத்துடன் பற்பல வடிவங்களில் அங்கு கொடூரமான விலங்குகள் இருக்கின்றன. அந்த விலங்குகளை வேட்டையாடும் குழு ஒன்றும் அங்கிருக்கிறது. அதன் தலைவராக டோனி ஜா இருக்கிறார். டோனி ஜா தலைமையிலான குழு தாக்கப்பட்டு அந்தக் குழுவைவிட்டு டோனி ஜா பிரிகிறார். பிரிந்த அவர் தனியாகப் பாலைவனம் ஒன்றில் அலைந்து திரிகிறார். மறுபுறம் நிஜ உலகம் இருக்கிறது. அங்கு ஒரு பாலைவனத்தில் மிலா ஜோவோவிச் அமெரிக்க இராணுவக் குழு ஒன்றுடன் தேடலில் ஈடுபடுகிறார். அந்தப் பாலைவனத்தில் ஏற்கனவே காணாமல் போன இராணுவக் குழுவை அவர் தேடி அலைகிறார். அப்போது திடீரென நடக்கின்ற சில இனம்புரியாத மாற்றங்களால் பூமியிலுள்ள பாலைவனத்தில் திரிகிற இவர்கள் இராட்சத விலங்குகள் வாழ்கின்ற பூமிக்குள் தள்ளப்படுகிறார்கள். அங்குள்ள விலங்குகளுக்கும் இவர்களுக்கு இடையே மோதல்கள் நடக்கின்றன. மோதலின்போது கூடச் சென்ற சிப்பாய்கள் இறந்து போக நாயகி மாத்திரம் மிஞ்சுகிறார். பின்னர் அவர் டோனி ஜாவைச் சந்திக்கிறார். பின்னர் இருவரும் இணைந்து இராட்சத விலங்குகளை எதிர்த்துச் சண்டையிடுகின்றனர். அவற்றை வேட்டையாடுகின்றனர். முடிவில் நாயகி நிஜ உலகுக்குத் திரும்ப சுபத்துடன் இனிதே நிறைவுறுகிறது படம்.

மிலாவும் டோனிஜாவும் இதுவரையான தத்தமது படங்களில் செய்தவற்றையே இதிலும் செய்திருக்கிறார்கள். அதே ஆக்சன் சண்டைகள். டோனிஜா கொஞ்சம் கவனிக்க வைக்கிறார். மற்றும்படி புதுமை என்று சொல்வதற்கும் கதை என்று சொல்வதற்கும் படத்தில் எதுவும் இல்லை. இராட்சத மிருகங்களைக் கொன்று மனிதர்களைக் காப்பாற்றும் இதுவரையான ஆங்கிலப் படங்கள் எப்படியிருந்தனவோ அப்படியே இருக்கிறது இந்தப் படமும். ஆகவே இந்தப் படத்தைப் பற்றியும் இதில் நடிப்பவர்கள் பற்றியும் சொல்வதற்குப் புதிதாக எதுவும் இல்லை. இவ்வளவே போதுமானது. பதின்ம வயதினரை இந்தப் படம் கவரலாம்...!



நாதன் - புதுக்குடியிருப்பு

# கதை 23 | ஒரு போராளியின் பேய் அனுபவம்




நான் இயக்கத்தில் இருந்த போது போராளிகள் மத்தியில் பேய்கள், ஆவிகள் பற்றிய கதைகள் நிறைய உலாவி வந்தன. அவை எமது சக போராளிகளின் ஆவி என்பதால் எமக்குப் பல சந்தர்ப்பங்களில் உதவியிருக்கின்றன. மயிரிழையில் நம்மை உயிர் தப்பவும் வைத்திருக்கின்றன.

ஒரு தடவை நான் முகமாலை முன்னரங்க நிலையில் இருந்தபோது இரவு 3 மணியிருந்தது. நான் நித்திரையாகிவிட்டேன். நான் இருந்த இடத்தை நோக்கி இராணுவத்தின் வேவுப் பிரிவு ஒன்று முன்னேறியது எனக்குத் தெரியாது. அப்போது சடுதியாக என்னை யாரோ தட்டி எழுப்பி இராணுவ நகர்வுள்ள இடத்தை நோக்கி எனது தலையைத் திருப்பியதை உணர்ந்தேன். நான் இராணுவத்தின் நகர்வைக் காணவும் அவர்கள் துப்பாக்கியால் என்னை நோக்கிச் சுடவும் சரியாக இருந்தது நேரம். உடனே மூவிங் பங்கருக்குள் குதித்து உயிர் தப்பினேன். இராணுவம் எங்கள் பங்கருக்கு அருகில் வரமுடியாவிட்டாலும் எங்களைச் சுட்டுக் கொல்லும் துப்பாக்கி ரேஞ்சில் நிற்க முடியும். இது எனக்கு நடந்த முதல் சம்பவம்.

பின்னர் மணலாறு காட்டில் உள்ள டடி பேசுக்கு நான் மாற்றப்பட்டேன். அங்கு பேய்களின் தொல்லை அதிகமிருந்தது. அங்கு இயக்கத்துக்கு வேண்டப்படாத ஒருவரைக் கொன்றதாக அறிந்தேன். அங்கு பேய்கள் அதிக தொல்லை கொடுத்தன. எங்களுக்குரிய இரவுச் சாப்பாடானது மாலையே அங்கு வந்து சேர்ந்துவிடும். அது வந்து சேர்ந்ததும் உடனேயே சாப்பிட்டு விடவேண்டும். சாப்பாட்டை வைத்துவிட்டு இரவுக்குச் சாப்பிடுவோம் என்று நினைத்தால் அந்தச் சாப்பாட்டுப் பொட்டலம் பிய்த்து எறியப்பட்டுக் கிடக்கும். “சுணங்கிச் சாப்பாட்டை எடுத்துச் சாப்பிடும்போது அதில் ரெத்த வாடை அடிக்கிறது’ என்று இதுபற்றி வேறொரு அண்ணையும் சொன்னார். அதனால் அந்தச் சாப்பாட்டைச் சாப்பிட முடியாது என்றும் அவர் கூறினார். அப்படி ஒரு விடயம் உண்டா என்பதைப் பரீட்சிக்க முயன்றால் சிலவேளை அன்றிரவு சாப்பாடு இல்லாமல் போய்விடும் என்ற பயத்தில் அவ்வாறான விசப் பரீட்சைகளில் போராளிகள் இறங்குவதில்லை.

இரவு எல்லைப் பாதுகாப்பில் இருக்கும்போது துப்பாக்கியை எடுத்துச் சென்று வேறு இடத்தில் போடுவது, பாதுகாப்பரணுக்கு முன்னால் வந்து உருவம்போல நிற்பது எனப் பலவற்றை நான் அனுபவித்திருக்கிறேன். அந்த இடத்துக்குப் புதிதாக வருகின்ற சில போராளிகள் அவ்வாறு மர்மமான உருவத்தைக் கண்டதும் சரமாரியாகச் சுட்டிருக்கிறார்கள். மறுநாள் காலையில் பார்த்தால் எதுவும் இல்லை. அவர்கள் சுட்ட சன்னங்கள் அங்கு நிற்கின்ற மரங்களில் பட்டிருக்கும்.



டடி பேசுக்குள் இவ்வாறு சாரமாரியான துப்பாக்கி வேட்டுக்கள் கேட்டால் “டடி பேசுக்குள்ள பேய் வந்திட்டுது” என்று டடி பேசுக்கு அருகில் உள்ள காவலரண்களில் இருப்பவர்கள் சாதாரணமாகக் கூறுவார்கள். ஒரு தடவை டடி பேசிலிருந்து 5 போராளிகள் இரவு நேரத்தில் அழைத்துச் செல்லப்பட்டிருக்கிறார்கள். முன்னே செல்கின்ற தலைமையாளர் ஒருவருக்குப் பின்னால் அந்த 5பேரும் சத்தமில்லாமல் இரவிரவாக நடந்தே போயிருக்கிறார்கள். விடிந்தபின்னர் பார்த்தால் அவர்களை வழிநடத்திக் கூட்டிப் போனவரைக் காணவில்லை. விடிந்த பிறகு அவர்கள் அந்த அடர்ந்த காட்டுப் பகுதியில் இருந்து ஒரு திசையை நோக்கி நடந்து நெடுங்கேணிக்கு அருகில் காட்டை விட்டு வெளியேறியிருக்கிறார்கள். அவர்களை வழிநடத்தி அழைத்துச் சென்றவர் மறைந்து போயுள்ளார்.

டடி முகாமில் பாதுகாப்பு அரணுக்கு அருகில் வெள்ளை நிற உருவத்தைக் கண்டு பல போராளிகள் பயந்து கத்துவது மிகச் சாதாரண விடயமாக இருந்திருக்கிறது. ஒரு தடவை இவ்வாறு மர்மமான உருவத்தைக் கண்டுவிடுபவர்கள் எந்த நேரமும் தமது துப்பாக்கிகளைத் தம்முடன் தயார் நிலையில் வைத்திருப்பார்கள். துப்பாக்கி அவர்களுக்கு எப்போதும் ஒரு துணைபோல இருக்கும். ஒருவரை அடுத்து ஒருவர் சென்ரி மாறும்போது, ஒரு தடவை சென்ரி மாறுபவர் துப்பாக்கியை வாங்கிவிட்டு முன்னர் கடமையில் இருந்தவரை அனுப்பியிருக்கிறார். முன்னர் கடமையிலிருந்தவர் தங்குமிடத்துக்குப் போனபோது தனக்குப் பின் சென்ரி மாற இருந்தவர் அங்கு நல்ல நித்திரையாகக் கிடப்பதைக் கண்டு பதறிப்போயிருக்கிறார். பின்னர் இருவருமாகப் போய்ச் சென்ரி நிற்கிற இடத்தைப் பார்த்தபோது அவருடை துப்பாக்கி அங்கே ஓரிடத்தில் ஓரமாக வீசப்பட்டுக் கிடந்திருக்கிறது. இந்தச் சம்பவங்கள் என்னைப்போன்ற பல போராளிகளின் அனுபவங்கள்.



**சண்முகதேவி கௌரிதரன்**
(அழகுக் கலை நிபுணர்)

# இளநரை முடிகளை கருமையாக்கும் பீற்றூட்..!!


இன்று இளவயதினர் பலருக்கும் முக்கியமான பிரச்சினை இளநரை.இந்த இளநரை பரம்பரை நோயாகவும் சிலருக்கு வேறு சில வழிகளிலும் ஏற்படும். அவ்வாறு இளநரையினால் துன்பப்படுவோருக்கு வீட்டிலிருந்தவாறே அதிலிருந்து எப்படி விடுபடமுடியும் என்று இந்த வாரம் பார்க்கலாம்.

சிறிதளவு கருவேப்பிலை,பீற்றூட், சிவப்பு செவ்வரத்தம்பூ சிறிதளவு, எலுமிச்சைச் சாறு, தண்ணீர், கோப்பித்தூள் சிறிதளவு என்பவற்றை முதலில் எடுத்துக் கொள்ள வேண்டும்.

பின்னர், தண்ணீரினை இரண்டு நிமிடங்கள் வரையில் சூடாக்கிக் கொண்டு அதனுள் கோப்பித்தூளை இடவேண்டும். அதிகளவான சூட்டு நீரில் கோப்பித்தூளை போடாமல் அடுப்பின் சூட்டினை சிறிது குறைத்து அதன் பின் போடவேண்டும். இந்த கோப்பிக் கலவையுடன் பீற்றூட், கறிவேப்பிலை, செவ்வரத்தம்பூ போன்றவற்றை தண்ணீர் சேர்க்காமல் நன்றாக மிக்சியில் அரைத்து கலக்கி 10 நிமிடங்கள் வரை அடுப்பில் வைத்து சூடுகாட்டவேண்டும்.

சூடுகாட்டிய பின்னர், குறைந்தது 12 மணி நேரங்களாயினும் வைத்திருந்து அதன் பின்னர் வடிகட்டி அல்லது வடிகட்டாமல் பெறப்பட்ட சாயத்தினை(டை) தலைக்குப் பூசவேண்டும்.

இந்த பீற்றூட் கலவையை தொடர்ந்து மூன்று வாரங்களுக்கு பயன்படுத்தி வந்தால் இளநரை இல்லாமல் போவதனை உணருவீர்கள்.



# எந்நாளும் நலம் வாழ மருத்துவம்



மருத்துவர் - **கந்தையா சோதிதாசன்**

## சுகமான தூக்கம்

"தூக்கம் உன் கண்களை தழுவட்டுமே
அமைதி உன் நெஞ்சில் நிலவட்டுமே "

என்பது பிரபலமான பழைய பாடல் ஒன்று

அமைதியான ஆழ்ந்த தூக்கம் நல வாழ்விற்கு மிகவும் அவசியமானது. ஒருவர் இரவிலே குறைந்தது 7 மணிநேரமாவது தூங்க வேண்டும்

சரியான தூக்கமின்மையே பெரும்பாலான நோய்களுக்கு காரணம் என்கிறன மருத்துவ ஆய்வுகள்.

தூக்கத்தில் தான் கனவு வருகிறது ஆனால் இன்று தூக்கமே பலருக்கு கனவாயிருக்கிறது நவீன வாழ்க்கைச் சூழல், தொழில்நுட்ப சாதனங்களின் அதீத பாவனை என்பன தூங்கும் நேரத்தை குறைத்திருக்கிறது. தூக்கமின்மையால் அவதிப்படுவோர் தொகை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது

தூக்கமின்மைக்கு மனம் அமைதியிழத்தலே பிரதான காரணமாக சொல்லப்படுகிறது

காலநிலை தங்குமிடம் என்பவற்றில் ஏற்படுகிற மாற்றம் ஆஸ்துமா, நீரிழிவு, உடல் நோவு போன்ற நோய்நிலைமைகள், ஒழுங்கற்ற உணவு மற்றும் வாழ்வு முறை என்பனவும் இதற்கான காரணிகளாக சொல்லப்படுகிறது

சரியான தூக்கமின்மை ஒருவரது இயல்பான வாழ்வியக்கத்தை பாதிக்கிறது. எரிச்சல், கோபம், மனச்சோர்வு, தலைவலி, நோய் எதிர்ப்புச் சக்தி குறைவடைதல் என பல இடர்களை தூக்கமின்மை ஏற்படுத்தி விடுகிறது .

இரவிலே போன், டிவி போன்ற இலத்திரனியல் பொருட்களின் பாவனையை குறைத்தல்,

திட்டமிட்ட உணவுத் திட்டம், உடற்பயிற்சி போன்றவற்றால் இப்பிரச்னைக்கு தீர்வு காண முடியும் ஆயினும் சித்த மருத்துவ நூல்கள் நோய்நிலைமைக்கேற்ப சில மருந்து வகைகளையும் குறிப்பிடுகின்றன.

1. சுக்குத் தைலம் அல்லது கீழ்காய் நெல்லித்தைலம் வைத்து தலை முழுகி வர வாத அதிகரிப்பால் ஏற்படும் நித்திரையின்மை நீங்கி குணம் பெறலாம்.

2. உடற்பலவீனத்தால் நித்திரைக் குறைவுள்ளவர்கள் அமுக்கிராய் சூரணத்தை பாலில் கலந்து தினமும் இரவு படுக்கைக்கு போகு முன் அருந்தலாம்.


3. மன அமைதியின்மை, கவலை போன்ற காரணங்களால் தூக்கமிழப்பவர்களுக்கு சடாமான்சில் சூரணம் குணமளிக்கிறது.

4. மலச்சிக்கல் மற்றும் சமிபாட்டு குறைபாடுள்ளவர்கள் இரவு படுக்கப் போகுமுன் சுக்கு, திப்பலி, சீரகம் கடுக்காய்த் தோல் என்பவற்றை சம அளவெடுத்து கஷாயம் செய்து அருந்தி வரலாம்.

5. சாதிக்காய் தூள் பாலில் கலந்து அருந்துவதும் தூக்கத்தை கொண்டுவரும்.

# சாதிக்காய் தினமும் அருந்துதல் நல்லதல்ல ஷ....

இன்றைய சுகமான தூக்கம் என்பது நாளையை நல்லதொரு விழிப்பின் அடித்தளம் ஆகும்.



# மரத்தக் காணோம்!

■ ஜெயாமாறன், சியாட்டில்



“மரத்தக் காணோம்! ஐயோ! வச்ச மரத்தக் காணோம்!" என்று அலறியபடி பின் தோட்டத்திலிருந்து வீட்டுக்குள் ஓடி வந்தார் அம்மா. ஹெட்போனை மாட்டிக்கொண்டு அலைபேசியில் எதையோ பார்த்துக்கொண்டிருந்த நான், அம்மாவின் பதற்றமான முகத்தைப் பார்த்ததும், அவசரமாக ஹெட்போனைக் கழற்றிவிட்டு, “என்னாச்சும்மா?” என்றேன். “மரத்தக் காணோம்டி” என்றார். “என்ன! மரத்தக் காணோமா?” (இதென்னடா இது. வடிவேலு கிணத்தக் காணோம்னு சொன்ன கதையால்ல இருக்கு - என்று மனத்தில் நினைத்தபடி) என்றேன்.

“ஆமாடி உனக்கு எத்தனை தடவ சொல்றது? எப்ப பாத்தாலும் அதையே நோண்டிக்கிட்டு...” என்று எரிந்து விழுந்தார். “எந்த மரம்மா?” என்றேன். “போ! உனக்கு எதுவும் நெனவிருக்காது. நாம வாங்கி வச்சமே, ஒரு ப்ளூ பெரி மரக்கன்னு. நெனவிருக்கா?” என்றார்.

அந்த நாள் எனக்கு நன்றாக நினைவிருந்தது. ஆனால், அதற்கு முன் அம்மாவைப் பற்றிச் சொல்ல வேண்டும்.

மா, பலா, வாழை, கறிவேப்பிலை, மிளகாய், மல்லி, கனகாம்பரம் என மரம், செடி, கொடிகள் நிறைந்த பெரிய தோட்டத்துடன்கூடிய கிராமத்து வீட்டில் வளர்ந்தவர் அம்மா. அவரது கனவுத் தோட்டம் திருமணத்திற்குப் பின்னான நகர வாழ்க்கையில் அழிந்து போனது.

அம்மா அமெரிக்கா வந்தபோது, எங்கள் வீட்டுக் கொல்லையில் பரந்து விரிந்திருந்த புல்வெளியையும், மரங்களையும் பார்க்கவும் அவரது தோட்டக் கனவு மீண்டும் துளிர்விட்டது.

அது மார்ச் மாதம் என்பதால், வசந்த காலம் தொடங்கியிருந்தது. உடனடியாக ஹோம் டிப்போவிற்குப் (செடிகள் விற்கும் கடை) போய், பல வகையான விதைகள், தொட்டிகள், மண், உரம் எல்லாம் வாங்கினோம். அங்கே செடிகள் இருந்த பகுதியில், சிறு பிள்ளை போல ஓடி ஓடிச் சென்று, ஒரு கனகாம்பரச் செடி, ஒரு மிளகாய்ச் செடி மற்றும் ஒரு ப்ளூ பெரி மரக்கன்றையும் எடுத்துக் கொண்டு சிரித்தபடி வெளியே வந்தார் அம்மா. இப்படித்தான் ப்ளூ பெரி மரக்கன்று வீட்டுக்கு வந்தது.

மரக்கன்று வாங்கியதற்கு முக்கியக் காரணம் ஒன்று உண்டு.

எங்கள் வீட்டுக் கொல்லையில் இருந்த உயரமான பைன் மரம், பாதி இறந்துவிட்டதால், மீதி மரம் வீட்டுக் கூரையின் மேல் விழாமல் இருக்க, H.O.A (Home Owners Association)இல் அனுமதி பெற்று ஐந்நூறு டொலர்கள் கொடுத்து அந்த மரத்தை வெட்டினோம். ஆம்! அமெரிக்காவில் ஒரு மரத்தை வெட்ட விலை ஐந்நூறு டொலர்கள். ஆனால் ஒரு மரக்கன்றின் விலையோ பதினைந்து டொலர்கள்தான்.

இந்தக் கூத்தெல்லாம் அம்மா இருந்தபோது நடந்ததால், வெட்டப்பட்ட மரத்திற்கு பதில் இன்னொரு மரத்தை நடுவதற்காகத்தான் ப்ளூ பெரி மரக்கன்றை வாங்கினார் அம்மா.

> **“ கைபேசியில் பேசிய படி என் கணவர், ப்ளூ பெரி மரக்கன்றின் ஒரு கிளையையும் தவறுதலாகப் பிடுங்கிவிட்டார். அப்படித்தான் ப்ளூ பெரி மரம் காணாமல் போயிருக்க வேண்டும். ஆனால், இதை நாங்கள் உணரவே யில்லை. ”**

எதை மறந்தாலும் செடிகளுக்கும், மரங்களுக்கும் தண்ணீர் ஊற்றுவதையும், எனக்குத் தினமும் மோர் கலந்து தருவதையும் அம்மா மறந்ததேயில்லை.

இந்த நேரத்தில் பக்கத்து ஊரில் வசிக்கும் என் பெரியம்மா மகனின் வீட்டிற்கு என் பெரியம்மா வந்திருந்தார். தன்னோடு வந்து ஒரு மாதம் இருந்துவிட்டுப் போகும்படி பெரியம்மா விடாமல் அழைக்க, அம்மாவும் அங்கே சென்றார்.

அம்மா போயிருந்தபோது நானும் என் கணவரும், திடீரென்று பொறுப்பு வர, கொல்லையில் மண்டிக் கிடக்கும் களைகளைப் பிடுங்கலாம் என்று களம் இறங்கினோம்.

கைபேசியில் பேசியபடி என் கணவர், ப்ளூ பெரி மரக்கன்றின் ஒரு கிளையையும் தவறுதலாகப் பிடுங்கிவிட்டார். அப்படித்தான் ப்ளூ பெரி மரம் காணாமல் போயிருக்கவேண்டும். ஆனால், இதை நாங்கள் உணரவேயில்லை.

அம்மா ஊரிலிருந்து திரும்பி வந்ததும் முதல் வேலையாக, ப்ளூ பெரி கன்றைத்தான் பார்க்கச் சென்றார். அதைக் காணாததால் தான், “மரத்தைக் காணோம்” என்று கத்திக்கொண்டு வந்தார்.


இப்போது களை பிடுங்கிய நாள் மின்னல் போல் நினைவுக்கு வர, அம்மாவுடன் கொல்லைக்கு ஓடினேன். விடாது பெய்த மழையில் மீண்டும் களைகள் மண்டிக் கிடக்க, அவற்றின் நடுவில் ஒரு சின்னச் செடியில் ஒரு சிறிய அட்டை ( இங்கே கடைகளில் விற்கப்படும் எல்லாச் செடிகளிலும், செடியின் விலை மற்றும் பராமரிப்பு விவரங்கள் அடங்கிய சிறிய அட்டையைக் கட்டியிருப்பார்கள்) தொங்கிக் கொண்டிருந்தது. அந்த அட்டையில் பாதி அழிந்த எழுத்துகளில் ‘பெரி’ என்ற சொல்லை பார்த்ததும் தான் அம்மாவிற்கு உயிரே வந்தது.

பயந்து கொண்டே அம்மாவிடம் நாங்கள் அலைபேசியோடு களை பறித்த கதையைச் சொன்னேன். “எப்படியோ! இதாவது மிஞ்சியதே, வளர்த்துவிடலாம்!” என்று ஆனந்தம் அடைந்தார் அம்மா.

சுற்றியிருந்த களைகளை அகற்றிவிட்டு, அந்தச் சின்னச் செடியைச் சுற்றி, மண்ணை மேவிப் பாத்தி கட்டி ஒரு அடையாளமும் வைத்தார்.

நிம்மதிப் பெருமூச்சு விட்டபடி வீட்டிற்குள் வந்த என்னிடம், “நம்ம ஒரு வாழைக்கன்னு வாங்கி வைக்கணும்டி” என்றார் அம்மா! ■

## ‘சிப்’ மூலம் இணையத்தை கலக்கவுள்ள குரங்கு..!!




அமெரிக்காவின் சான்பிரான்சிஸ்கோ நகரை தலைமையகமாகக் கொண்டு செயல்படும் நியூராலிங்க் என்னும் இவரது புதிய ஸ்டார்ட்அப் நிறுவனம், மனித மற்றும் விலங்குகளின் மூளையை இயந்திரத்துடன் இணைக்கும் தொழில்நுட்பத்தை உருவாக்கி வருகிறது.

அதன் ஒரு பகுதியாக நடத்தப்பட்ட ஆய்வு ஒன்றில், குரங்கு ஒன்றின் தலையோட்டில் சிறு வயர்களை கொண்ட சிப் போன்ற வயர்லெஸ் (கம்பியில்லாமல் தகவலை கடத்தும்) கருவியை பொருத்தியுள்ளதாக அண்மையில் இணையவழியே நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் ஈலோன் மஸ்க் அறிவித்துள்ளார்

“உங்களால் அந்த சிப் எங்கு பதியப்பட்டுள்ளது என்பதை காண முடியாது. அது மிகவும் மகிழ்ச்சியான குரங்கு” என்று கூறிய மஸ்க், இந்த திட்டம் குறித்த மேலதிக அறிவிப்புகள் வரும் மாதங்களில் வெளியிடப்படும் என்று கூறியுள்ளார்.இந்த நீண்டகால திட்டத்தின், முதல் பகுதியாக கடந்த ஆண்டு, இந்த தொழில்நுட்பத்தை பன்றிகளிடத்தில் பரிசோதிப்பது குறித்த அறிமுக கூட்டத்தை கடந்த ஆண்டு நடத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

■ தவம்



# மூன்றே மாதங்களில் செவ்வாய்க்குப் போகலாம்!

பூமியில் கட்டுக்கடங்காமல் பல்கிப் பெருகி அதற்குப் பேராபத்தாக மாறியிருக்கும் மனிதன், ஒருநாள் இந்தப் பூமியில் தனக்கு இடம் இருக்காது என்பதால் வேறு எங்காவது தப்பிச் செல்வதற்கான தேடலில் நீண்ட காலமாகவே இறங்கியிருக்கிறான்.

பல்வேறு சூரிய மண்டலங்களில் ஏதாவது ஒரு பூமி கண்ணுக்குப் புலப்பட்டுவிடாத என்கிற தேடுதல் ஒரு பக்கம் நடக்க செவ்வாய் கிரகத்துக்கு மனிதர்களை அனுப்பி ஆய்வு மேற்கொள்ளவும், அங்கு மனிதனைக் குடியேறச் செய்யவும் நாசா, ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனங்கள் தீவிரமாக முயற்சி செய்துவருகின்றன. இந்த முயற்சியை மேலும் வேகப்படுத்தும் வகையில் அணுசக்தி மூலம் இயங்கும் ஏவுகணைகளை உருவாக்கும் பணியில் அறிவியலாளர்கள் ஈடுபட்டுள்ளனர்.

பூமியிலிருந்து சராசரியாக 18.5 கோடி தொலைவில் அமைந்துள்ளது செவ்வாய் கிரகம். 2035 ஆம் ஆண்டுக்குள் செவ்வாய் கிரகத்தில் மனிதக் காலடியை நாட்டிவிடவேண்டும் என்பதில் நாசா படு தீவிரமாக இருக்கிறது. அதற்கான முயற்சிகளில் ஈடுபட்டு வருகிறது. சிவப்பு கிரகமான செவ்வாயில் மனிதன் காலடி எடுத்து வைப்பதென்பது மனித குல வரலாற்றில் ஒரு மகத்தான சாதனையாக இருக்கும்.

செவ்வாய் கிரகத்தின் சுற்றுச்சூழலானது பூமியுடன் ஒப்பிடுகையில் மிக மிக மோசமானதாகும். அண்டார்ட்டிகாவை விடவும் குளிர்ச்சியான காலநிலையே அங்கு நிலவுகிறது. மிக மிகக் குறைவான அளவே உயிர்வாயு (ஒக்சிஜன்) அங்குள்ளதால், மனிதன் அங்கு உயிர் தப்பிப் பிழைப்பதென்பது மிகவும் இப்போதைக்கு முடியாத காரியம். உயிர்வாயுத் துணைக் கருவிகளைச் சுமந்துகொண்டுதான் செவ்வாயில் மனிதன் காலடி எடுத்து வைக்க முடியும்.

அது செவ்வாயில் தரையிறங்கிய பிற்பாடு இருக்கும் சவால். அதற்கு முன்னதாக செவ்வாய்க்குப் போய்ச் சேர்வதற்கு மனிதனுக்கு எடுக்கும் காலமே மிகப் பெரும் சவாலாக உள்ளது. இப்போதிருக்கும் தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி செவ்வாய்க்குச் செல்வதானால் குறைந்தது 7 மாதங்களாவது ஆகும்.

விண்வெளி வீரர்கள் செவ்வாய் கிரகத்திற்குச் செல்லும்போதும் அதிக காலம் விண்வெளியில் இருக்கும்போதும் விண்வெளி கதிர்வீச்சு மூலம் கதிர்வீச்சு நோய், புற்றுநோய், எலும்பு அடர்த்தி குறைதல், நரம்பு மண்டல பாதிப்பு மற்றும் குருதி அணுக்கள் அழிவு உள்ளிட்ட பல்வேறு நோய்கள் ஏற்படக்கூடும் என்பதே இதிலுள்ள பெரும் சவால். இந்த பிரச்சினையைச் சமாளிக்க வேண்டுமானால், விரைவாகப் பயணிக்கவேண்டும். விண்வெளியில் மனிதன் இருக்கும் நேரத்தைக் குறைக்கவேண்டும். அப்போது மட்டுமே ஆபத்து குறையும்.



பயண நேரத்தைக் குறைக்க வேண்டுமானால், விண்கலத்தின் வேகத்தை அதிகரிப்பது மட்டுமே ஒரே தீர்வு. இதற்கு, அமெரிக்காவின் சியாட்டிலைத் தளமாகக் கொண்ட அல்ட்ரா சேஃப் நியூக்ளியர் டெக்னாலஜிஸ் (USNC Tech ), அணு சக்தி இயந்திரம் மூலம் இயங்கும் விண்கலத்தை (nuclear thermal propulsion engine) தீர்வாக முன்வைத்துள்ளது. அணுசக்தி ஏவுகணை இயந்திரங்கள் குறித்த யோசனை 1940ஆம் ஆண்டுகளிலிருந்தே முன்மொழியப்பட்டு வந்தாலும், விண்வெளி பயணத்துக்குப் பயன்படுத்தும் வகையிலான தொழில்நுட்பம் தற்போதுதான் மேம்படுத்தப்பட்டுள்ளது.

தற்போது, பூமியிலிருந்து அனுப்பி வைக்கப்படும் ஆளில்லா விண்கலம் செவ்வாய் கிரகத்தை அடையக் குறைந்த பட்சம் ஏழு மாத காலம் ஆகிறது. மனிதர்களுடன் செவ்வாய் கிரகத்தை அடையக் குறைந்தபட்சம் ஒன்பது மாத காலம் ஆகும் என்று சொல்லப்படுகிறது. ஆனால், அணுசக்தி மூலம் இயங்கும் விண்கலம் மூன்று மாதங்களில் செவ்வாய் கிரகத்தை அடையும் என்று அல்ட்ரா சேஃப் நியூக்ளியர் டெக்னாலஜிஸ் கூறியுள்ளது.

தற்போது இயக்கப்படும் ஏவுகணைகள் திரவ எரிபொருள்கள், திட எரிபொருள்கள் மூலம் இயக்கப்படுகின்றன. மண்ணெண்ணெய் மற்றும் திரவ ஆக்சிஜன் கலவை, ஆல்கஹால் மற்றும் திரவ உயிர்வாயு கலவை ஆகிய திரவ எரிபொருட்களும் அலுமினியம் பவுடர் உள்ளிட்ட திட எரிபொருள்களும் ஏவுகணைகளில் பயன்படுத்தப்படுகின்றன. இவற்றின் மூலம் செவ்வாய் கிரகத்துக்குச் சென்று திரும்ப வேண்டுமானால் குறைந்தபட்சம் மூன்று ஆண்டுகள் வரை ஆகும்.

அதனால், விண்வெளி நிறுவனங்கள் யுரேனியத்திலிருந்து வெப்பத்தை உருவாக்கும் அணு உலையை உருவாக்கியுள்ளன. இந்த வெப்ப ஆற்றல் ஏவுகணையில் உள்ள எரிபொருளான திரவ ஹைட்ரஜனை சூடு படுத்துகிறது. அப்போது, திரவ ஹைட்ரஜன் வாயுவாக விரிவடைந்து உந்து சக்தியை உருவாக்கி விண்கலத்தை முன்னோக்கிச் செலுத்தும்.

அணுசக்தியால் இயங்கும் ஏவுகணைகள் இன்று பயன்படுத்தப்படும் ரசாயன ஏவுகணைகளை விடச் சக்தி வாய்ந்ததாகவும், இரு மடங்கு திறன் கொண்டதாகவும் இருக்கும். குறைந்த அளவிலான எரிபொருள் மூலம் வேகமாகவும், நீண்ட தூரத்துக்கும் பயணிக்க முடியும். இதன் மூலம் மூன்று ஆண்டுகள் பயணிக்க வேண்டிய செவ்வாய் கிரகப் பயணத்தை இரண்டு ஆண்டுகளுக்குள் முடித்துவிட முடியும்.

ஆனால், விண்கலத்தை இயக்கும் nuclear thermal propulsion இயந்திரத்தை உருவாக்கும்போது, அணு வெப்ப இயந்திரத்துக்குள் உருவாகும் அதீத வெப்பநிலையைத் தாங்கும் வகையில் யுரேனியம் எரிபொருளைக் கண்டுபிடிப்பதென்பது சவாலாகவே கருதப்பட்டு வந்தது. இந்த நிலையில், 2500 டிகிரி செல்சியஸ் வெப்ப நிலையில் செயல்படும் சிலிக்கன் கார்பைடு எரிபொருளை உருவாக்கியதன் மூலம் இந்தச் சிக்கலைத் தீர்த்துள்ளதாக அல்ட்ரா சேஃப் நியூக்ளியர் டெக்னாலஜிஸ் தெரிவித்துள்ளது.

**திரவ எரிபொருள்களை அணு உலை இயந்திரத்துக்கும் குழுவினருக்கும் இடையே சேமிப்பதன் மூலம் கதிர் வீச்சைத் தடுத்து, கவசமாகச் செயல்படவைக்க முடியும் என்று விஞ்ஞானிகள் நம்புகின்றனர்.**

அணுசக்தி விண்கலத்தைப் பயன்படுத்தும் போது, விண்வெளி கதிர்வீச்சைப் போலவே அணு உலை கதிர்வீச்சும் பாதிப்பை ஏற்படுத்தும். ஏவுகணையின் வடிவமைப்பு மூலம் இந்த அபாயத்தை தீர்க்க முடியும் என்று அறிவியலாளர்கள் தெரிவித்துள்ளனர். திரவ எரிபொருள்களை அணு உலை இயந்திரத்துக்கும் குழுவினருக்கும் இடையே சேமிப்பதன் மூலம் கதிர் வீச்சைத் தடுத்து, கவசமாகச் செயல்படவைக்க முடியும் என்று விஞ்ஞானிகள் நம்புகின்றனர். ராணுவ கவச வாகனங்களில் பயன்படுத்தும் பொருட்கள் மூலம் அணு உலையில் உருவாகும் கதிர்வீச்சைத் தடுத்து விண்வெளி வீரர்கள் தங்கியுள்ள கலன்களைப் பாதுகாக்க முடியும்.

மேலும், விண்கலம் மேலெழும்போது விபத்து ஏற்பட்டால் அதிலுள்ள அணு உலை மூலம் பூமிக்குப் பிரச்சினை எழலாம் என்ற கேள்வி எழுந்த போது, வழக்கமான ஏவுகணை மூலம் விண்கலத்தைப் பூமியின் சுற்று வட்டப் பாதைக்குக் கொண்டு சென்று, அதற்குப் பிறகு, அணு உலையை இயக்கி விண்கலத்தை இயக்கத் திட்டமிட்டுள்ளனர். இதனால், விண்கலத்தின் அணு உலை உடைந்தாலோ அல்லது விண்கலத்தில் விபத்து ஏற்பட்டாலோ கதிரியக்கப் பொருள்கள் பூமியில் விழாது. பல்லாயிரக்கணக்கான ஆண்டுகள் விண்வெளியில் சுற்றுவதன் மூலம், இயற்கையாகவே ஆபத்து ஏற்படாத அளவுக்குக் கதிரியக்கப் பொருட்கள் சிதைந்து போகும்.

அணுசக்தி ஏவுகணைகள் மனித விண்வெளி பயணத்தை மேம்படுத்துவதோடு, விண்மீன் வணிக வாய்ப்புகளையும் உருவாக்கும். நாசா, பாதுகாப்புத் துறை போன்ற அரசு நிறுவனங்களுக்கும் வணிக துறையில் ஏராளமான வாய்ப்புகளை ஏற்படுத்தும். இதன் மூலம், சூரிய மண்டலத்தில் உள்ள விடுவிக்கப்படாத இரகசியங்களுக்கு விடை கண்டுபிடிக்க முடியும் என்று அல்ட்ரா சேஃப் நியூக்ளியர் டெக்னாலஜிஸ் நிறுவனத்தின் பொறியியல் இயக்குநர் மைக்கேல் ஈட்ஸ் (Michael Eades) தெரிவித்துள்ளார்.

அணுசக்தி விண்கலங்கள் பரவலான பயன்பாட்டுக்கு வர குறைந்தது இருபது வருடங்களாவது ஆகும் என்று கருதப்படுகிறது. செவ்வாய் கிரகத்துக்கு அணுசக்தி ஏவுகணையை அனுப்பி வைப்பதற்கு முன்பு பல்வேறு சோதனைகளை மேற்கொள்ள வேண்டியுள்ளது. ■

# நிலவைப் பார்த்து வானம் சொன்னது...



எழுத்தாளர்
மு.சிவநேசன்
எழுதும் தொடர்

10

நோயெதிர்ப்பு திறன் தொடர்பான ஆய்வில் புற்றுநோய் சிகிச்சை பெறுபவர்கள் தொடர்பான கொரோனா தாக்கம் சிக்கலான அம்சமாகக் கருதப்படுகின்றது.

புற்றுநோயினாலும் அதற்குரிய சிகிச்சையின் பக்க விளைவினாலும் வெண்குருதிக் கலங்களின் எண்ணிக்கை குறைவடைதலே அவர்களுக்கான நோயெதிர்ப்பு திறனைக் கேள்விக்குள்ளாக்குகிறது. எனவே அத்தகைய நோயாளர்கள் கோவிட் தொற்றினைத் தவிர்க்க மிகவும் அக்கறையாக முயலவேண்டும்.

■ நீரிழிவு நோயாளர்கள் இக்காலத்தில் எக்காலமும் போலவே தமது குருதியிலுள்ள சர்க்கரை அளவில் கூடுதல் அக்கறை செலுத்த வேண்டும். குருதியில் இதன் அளவு அதிகமாக இருப்பது எந்த நோய் தொற்று நிலமையையும் மோச மடைய வைக்கவே முயலும்.


■சுவாச நோய்கள் உள்ளவர்களது சுவாசப் பைகளில் காற்றறைகளின் பரிமாற்றத்திறன் ஏற்கெனவே குறைவாக இருக்கும். துடிப்புடன் செயற்பட உயிர்வாயு (ஒட்சிசன்) பற்றாக்குறை இடம் கொடுக்காது. ஆஸ்துமா, மூச்சிரைப்பு, காசநோய் முதலிய தாக்கங்களால் இத்தகைய இக்கட்டான நிலமை ஏற்படுகின்றது. எவருமே இன்றைய காலகட்டத்தில் புகைத்தலை தவிர்ப்பதே உகந்தது. ஏனெனில் கோவிட் தாக்கம் சுவாசத் தொகுதியையே அதிகமாகப் பாதிக்கின்றது.

■இதய நோய்கள் மற்றும் உயர் குருதியமுக்கம் உள்ளவர்கள் பற்றிய ஆய்வு கவலையளிக்கிறது என்கிறது அமெரிக்க இருதய ஆய்வுகளுக்கான ஒன்றியம் ஏஎச்ஏ (AHA). எனவே இவர்களும் தமது நாளாந்த நடவடிக்கைகளில் தொற்றைத் தவிர்க்கும் வகையில் மிகுந்த அவதானமாக இருக்க வேண்டியவர்களாகின்றனர். தீவிர சிகிச்சைகளை எதிர்கொள்ளவும் தாக்குப் பிடிக்கவும் இவர்கள் சிரமங்களை எதிர்கொள்ளக்கூடும்.

■ முடக்குவாதம், முள்ளந்தண்டுவட நோய், தோல் அழற்சி போன்றவற்றிற்கு சிகிச்சை பெறுபவர்கள் தொடர்ச்சியாக பாவிக்கின்ற மருந்துகளின் தாக்கம் அவர்களுடைய நிர்ப்பீடனம் மீது ஆதிக்கம் செலுத்தக்கூடும்.

■ எனவே கோவிட் மட்டுமல்ல எதுவானாலும் தொற்றைப் பொறுத்தவரை வருமுன் காப்பதே அனைத்து தரப்பினருக்கும் உசிதமானது. தொற்றை தவிர்க்க தடுப்பு மருந்துகள் அறிமுகமாகும்போது அவை அனைத்துத் தரப்பினருக்கும் ஒரே மாதிரியாகச் செயற்படும் என்றில்லை. எனவே ஒவ்வொருவரும் ஏற்கெனவே தமது நோய்கள் பற்றிய சரிதத்துடனேயே சிகிச்சைகளையோ தடுப்பூசி மையங்களையோ அணுகுதல் முக்கியமாகிறது.

வயதானவர்களிடம் தடுப்பூசி செயற்படும் வேகம் மந்தமாகவே இருக்கும். எனினும் தடுப் பூசிகளை போட்டுக்கொண்ட ஒருவரினால், அதனை போட்டுக் கொள்ளாத ஒருவரைவிட சிறப்பாக நோயினை எதிர்கொள்ள முடியும்.



இதன்படி தடுப்பூசியால் முற்றிலும் நோய்த் தொற்றை தவிர்க்க இயலாது போனாலும் அதன் தாக்கத்தை அது கணிசமாக குறைக்கக்கூடும். எனவே உரிய மருத்துவ ஆலோசனைகளுடன் தடுப்பூசிகளைப் போட்டுக்கொள்ள எவரும் பின்னிற்க வேண்டியதில்லை.

■ ஒருவர் வழமையாக எடுத்துக்கொள்ளும் மருந்துகள் அவரது நிர்ப்பீடன அல்லது வேறு வகையான சமநிலையை பாதிக்கக்கூடும் என்கிறார் மருத்துவர் இன்சோ காங் (Dr Insoo Kang). உதாரணமாக குடலில் உள்ள அவசியமான நுண்ணங்கிகளை அன்ரிபயோடிக்ஸ் பாவனை அழித்துவிடக்கூடும்.





நிர்ப்பீடனம் பற்றிய ஆய்வுகளை கோவிட் வெளிப்பாடு முடுக்கி விட்டுள்ளது என்றே கூறப்படுகிறது. புதிய கோணங்களில் பல விடயங்களை அவசரமாக ஆராயவேண்டி இருப்பதாக அமெரிக்க மருத்துவ பல்கலைக் கழகங்கள் கருதுகின்றன. கலிபோனிய பல்கலைகழக பேராசிரியர் அதுல் பட்டே (Dr Atul Butte) மற்றும் மருத்துவர் இன்சோ காங் (Dr Insoo Kang - professor of medicine at the Yale School of Medicine) ஆகியோர் இங்கு குறிப்பிடத்தக்கவர்கள்.

ஆக கோவிட் பல புதிய கோணங்களில் ஆய்வுக் களங்களை திறந்து விட்டிருக்கின்றது என்றே கூறவேண்டும். ஒவ்வொரு மழைக்கு ஒவ்வொரு சிரட்டை வைப்பது போல ஒவ்வொரு நோய்க்கு ஒவ்வொரு தடுப்பூசி தேடும் நிலையை மாற்றி சகலரோக நிவாரணியை தேடுகின்ற வகையில் ஆய்வுகள் முடுக்கி விடப்பட்டுள்ளன. முடிவுகள்தான் ஏதும் தெளிவாக எட்டப்பட்ட பாடில்லை.

○ ○ ○

இத்தாலிய நிலமைகள் தொடக்கத்திலே மோசமடைந்தபோது வைத்தியர்கள் செய்வதறியாது திகைத்துப் போயினர் என்கிறார் பிரான்செஸ்கோ மென்கீஸ் (Francesco Menchise), என்கிற மயக்க மருந்து நிபுணர் (anesthesiologist - Santa Maria delle Croci Hospital) தமக்கு தொற்று ஏற்படவில்லை என்பதே பேரதிசயம் என்கிறார்.

> ❝ ஒவ்வொரு மழைக்கு ஒவ்வொரு சிரட்டை வைப்பது போல ஒவ்வொரு நோய்க்கு ஒவ்வொரு தடுப்பூசி தேடும் நிலையை மாற்றி சகலரோக நிவாரணியை தேடு கின்ற வகையில் ஆய்வுகள் முடுக்கி விடப்பட்டுள்ளன.

கோவிட் தொற்றை தொடர்ந்து தீவிர சிகிச்சைக்காக சேர்க்கப்பட்ட நோயாளர்களின் எண்ணிக்கை கட்டுமீறி அதிகரித்தவேளை தாங்கள் நாள் முழுவதும் பாதுகாப்பு உடைகளுக்குள் சிறைப்பட்டு வியர்க்க வியர்க்க நோயாளிகளை மிகவும் நெருங்கி செயற்படத் தொடங்கிய அனுபவங்களை விவரிக்கிறார். இந்த நிலமை இப்போதைக்கு விடியப் போவதில்லை, நீண்ட காலம் தாக்குப்பிடிக்க எவராலும் இயலப்போவதில்லை என்பது அவரது ஆதங்கமாக இருக்கிறது.

நோயாளருக்கு வென்டிலேடர் பொருத்துவது, உயிர் காப்பு சிகிச்சை அளிப்பது, அந்த வேலைகளுக்கு ஒத்தாசை செய்யும் குழுவினரை பாதுகாப்பது, எல்லாம் அவ்வளவு சுலபமாக முடிகின்ற காரியம் அல்லவே. முன்பெல்லாம் இவ்வாறாக நாளுக்கு ஒருவரோ இருவரோதான் நோயாளர்கள் சந்திப்பதுண்டு. அவர்களுக்கான சிகிச்சையும் அதியுச்ச கண்காணிப்பில் இருக்கும். நாள் தோறும் நூற்றுக்கணக்கான நோயாளிகள் இப்படிப்பட்ட தேவைகளுடன் வந்து குவிந்தால் என்னதான் வசதிகள் இருந்தாலும் நாங்கள் எட்டுப் பேர் கொண்ட குழுவினால் என்ன செய்ய இயலும்?

நோயாளர்களுக்கு தேவையான ஒத்தாசைகளை செய்ய உறவினர்கள் பார்வையாளர்கள்கூட அனுமதிக்கப்படுவதில்லை. அவர்கள் இறந்தால்கூட உறவினர் எவரும் வந்து பார்வையிட முடிவதில்லை. இறப்பு விகிதம் எகிறிக்கொண்டு செல்கின்ற வேளையில் நாங்கள் கையாலாகாதவர்களாக கைகட்டி நிற்பது போலொரு உணர்வு.

ஓய்வு ஒழிச்சல் இல்லாத நிலமையிலும் மாற்று ஒழுங்குகள் செய்து தரப்படுகின்ற வேளைகளில் போய் அந்த ஓய்வு நேரத்தை உறங்கவா, சமைக்கவா, துவைக்கவா, குடும்பத்தை அணுகவா பயன்படுத்துவது, எப்படியாக பகிர முடியும்? படுத்தாலும் நிம்மதியாக உறங்கவா முடிகிறது? கனவிலும் அவதிகள் அவஸ்தைகள் என்று கடமையில் இருக்கிற உணர்வுதான் என்கிறார் அவர். ஒரு இரவு விடுப்பில் போய் விடிந்ததும் மீள வரும்போது பலரை காணக் கிடையாத பரிதாபம், புதியவர்கள் அந்த இடங்களில் என்று கலங்கிய கண்களுடன் சொல்கிறார்.

(தொடரும்)

# பென்டுளம்

**(இது 1992 இல் இடம்பெறும் கதை)**
**12.05.1992**

'YOU ARE FREE TO MAKE ANY DECISION YOU WISH.
BUT YOU ARE NOT FREE FROM THE CONSEQUENCES OF THAT DECISION.'
- RIG VEDA -

■ த.கதுர்ஜன்

என் மனநிலை என்னவென்பதை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. அது உற்சாகமா? குழப்பமா? கண்களுக்குள் ஊடுருவி சுவாசக் குழாய்க்குள் புகுந்து முள்ளந்தண்டை அடைந்து அதை நடுங்க வைத்து பின்னர் ஆண்குறிக்குள் நுழைந்து அதை சுருங்கச் செய்யும் அசாதாரண பீதியா?...தெரியவில்லை. அதற்கெல்லாம் காரணம்... அந்த வழக்கு... வழக்கு: பெண்டுளம். என் அனுபவத்தில் நான் அப்படி ஒரு வழக்கை கண்டதில்லை. புதிர்கள் எனும் புதர்களுக்குள் மறைந்துள்ள ஓர் அமானுஸ்ய இருள்தான் அந்த வழக்கு...வழக்கு: பென்டுளம்.

என் பெயர்... சிங்காரவேலன் நந்தகுமாரன்... தலைமை ஆய்வாளர்... காவல்துறை குற்றப்பிரிவு. அந்த வழக்குக்கு இப்போது நான்தான் பொறுப்பதிகாரி. எனக்கு முன் அந்த வழக்கை பல காவல்துறை அதிகாரிகள் கையில் எடுத்தனர். எவராலும் முடியவில்லை. அவர்களில் ஒருவர் இன்று வரை மனநல மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

**வழக்கு:பென்டுளம்**

**15.02.1989.** மாலை மூன்றே முக்கால் மணி. அமெரிக்காவைச் சேர்ந்த ஓர் வெள்ளைக்கார தம்பதியினர் ப்லாக் ஹார்ட் காட்டுக்குச் சென்றிருந்தனர். காட்டின் எல்லையிலிருந்து சுமார் முன்னூறு மீற்றர் தூரத்தில்தான் அவர்கள் அந்தப் பயங்கரத்தைக் கண்டனர். ஒரு ஆணின் சடலம் நிர்வாணமாக மரம் ஒன்றில் தலைகீழாக கட்டித் தொங்கவிடப் பட்டிருந்தது. காவல் நிலையத்திற்கு தகவல்போனது. காவல்துறையினர் உடனடியாக அங்கு சென்று சடலத்தை மீட்டனர்.


உடல் பாதி அழுகியிருந்தது. முகம் சிதைக்கப்பட்டிருந்தது. உடல் முழுவதும் பல விதமான காயங்கள். பெருக்கெடுத்து ஓடியிருந்த குருதி வெள்ளத்துக்கு மேல் நீல நிறச் சாயம் பூசப்பட்டிருந்தது. சம்பவ இடத்திற்கு வந்திருந்த பொதுமக்களில் பலர் உறைந்து போய் நின்றனர். சிலர் வாந்திகூட எடுத்தனர்...அப்படி ஒரு திகில் படலம்.

அந்த வழக்கை முதலில் விசாரணை செய்த காவல்துறை ஆய்வாளர் வீரமன்மதன் அப்போது அதை சாதாரணமாகத்தான் எண்ணினார். அது தான் இல்லை! ஒரு தடயமும் கிடைக்கவில்லை...ஒரு கைரேகை கூட... இதுவரை பாதிக்கப்பட்டவன் யார் என்பதும் தெரியவில்லை. அப்படியொருவன் நம் நாட்டில் வாழ்ந்தவன் என்பதை உறுதிப்படுத்த ஒரு ஆதாரமும் இல்லை.

அதைவிட பெரிய சவால் ஒன்று காவல்துறைக்குக் காத்திருந்தது.

அது கொலைசெய்யப்பட்டவனுடைய உடற்கூறாய்வு பரிசோதனை அறிக்கைதான்.

இறப்பு ஏற்பட்டமைக்கான காரணம் அதிக குருதிப்போக்கு. கொலை செய்யப்பட்டவிதம்... காளை மாடு, வெறிகொண்ட நாய் மற்றும் கூரிய வாளினால் தாக்கப்பட்டமை. இந்தச் சித்திரவதைகள் அனைத்தும் ஒரே நேரத்தில் அரங்கேறியிருக்கின்றன. அது எப்படி சாத்தியம்? பாதிக்கப்பட்டவன் தாக்கப்பட்ட முறையை வைத்து அவனைத் தாக்கியது 'பிட்புள்' இன நாய் என்பதை கண்டுபிடித்தார்கள். கொலைகாரன் அந்த நாய்க்கும் மாட்டுக்கும் கொலை செய்வதற்கு பயிற்சிகள் கொடுத்திருக்கிறான். சடலத்தின் மேல் பூசப்பட்டிருந்த அந்த மர்மப் பதார்த்தம் என்ன என்பது அறியப்படவில்லை. பாதிக்கப்பட்டவன் மீட்கப்படுவதற்கு சுமார் இரண்டு நாட்களுக்கு முன் இறந்திருக்கிறான். அதாவது **13.02.1989.**



அந்த வழக்கு விரைவாக பிரபல்யமானது... காரணம் அது பத்திரிகை மற்றும் ஊடகங்களின் ஊறுகாயாக மாறியமைதான். பல விதமாக எழுதினார்கள். பல வர்ணங்கள் தீட்டினார்கள். தாங்கள் நல்ல கதாசிரியர்கள் என்பதை நிரூபித்தார்கள். பென்டுளம் என்ற பெயரை அவ்வழக்குக்கு வைத்தார்கள்.

நான் அந்த வழக்கை பொறுப்பேற்று ஒரு வருடமாகிறது. நான் என்னுடைய குழுவில் காவல்துறை குற்றப்பிரிவு துணை ஆய்வாளர் நீலகண்டன், மியாட்டா தடயவியல் மருத்துவ நிறுவனத்தின் பீடாதிபதி பேராசிரியர் மணிவண்ணன், தனியார் துப்பறிவாளர் சாகிப் இஸ்மாயில் மற்றும் ஊடகவியலாளர் மற்றும் பிரபல எழுத்தாளரான ராதாம்பாள் ஆகிய நால்வரையும் இணைத்துக்கொண்டேன். நாங்கள் அனைவரும் கடுமையாக உழைத்தோம்.

கடந்த வாரம்தான் எனக்கு அந்த செய்தி வந்தது... அதாவது மணிவண்ணன், சாகிப் இஸ்மாயில் மற்றும் ராதாம்பாள் ஆகிய மூவரும் அந்த வழக்கைப் பற்றி தனித்தனிக் கோட்பாடுகளைத் தாங்கள் கண்டுபிடித்திருப்பதாக எனக்கு கடிதம் மூலம் தெரிவித்தனர். பல தடைகள்... அவமானங்கள்... தூற்றல்கள் எல்லாவற்றையும் கடந்து இன்று... **12.05.1992** எல்லாவற்றிற்கும் ஒரு முடிவு தெரியப்போகிறது. அந்தம் நெருங்குகிறது. பல நாள் மர்மக் காய்ச்சல் தீரப்போகிறது. இவற்றை நினைத்தபடியே என் கண்களைத் திறந்தேன்.

அந்த மாநாட்டு மண்டபத்தில் எனக்கெதிரே இருந்த கதிரைகளில் நீலகண்டன், மணிவண்ணன், சாகிப் இஸ்மாயில் மற்றும் ராதாம்பாள் ஆகியோர் அமர்ந்திருந்தனர்.

தனது கைக்கடிகாரத்தையே பார்த்துக்கொண்டிருந்த நீலகண்டன் நிமிர்ந்து பேச ஆரம்பித்தார்.

"குட் மோர்னிங்! பல நாட்களாக எங்களுக்கு பெரிய சவாலாக இருந்த பென்டுளம் வழக்கு இன்று ஒரு திருப்புமுனையை சந்திக்கும் என நினைக்கிறேன். உங்கள் எல்லோருக்கும் வாழ்த்துக்கள்."

அங்கு சில நொடிகள் நிசப்தம் நிலவியது.

மணிவண்ணன் எழுந்தார்.

"ஹலோ எவ்ரி ஒன்." என்று கூறி அவர் பேச ஆரம்பிக்க சாராய நாற்றம் பலமாக வீசியது.

மணிவண்ணன் தொடர்ந்தார்.

"என் கோட்பாடு 'வெல்பெயார் வொட்ச்'. பாதிக்கபட்டவனுடைய கையில் இருந்த கைக்கடிகாரம் 'வைல்ட் கட்' ப்ரான்ட். அது சுவிட்சர்லான்ட் நாட்டில் உற்பத்தி செய்யப்படுவது. வேறு நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுவதில்லை. அதனால் பாதிக்கப்பட்டவன் சுவிட்சர்லான்ட் நாட்டுப் பிரஜையாக இருக்கலாம் என சந்தேகித்தேன். என் நிறுவனத்தில் இருக்கும் சில தடயவியல் நிபுணர்களோடு சேர்ந்து சிதைந்து போன பாதிக்கப்பட்டவனுடைய முகத்தின் புகைப்படத்தை வைத்து அவன் முகம் சாதாரணமாக எப்படி இருக்கும் என வரைந்தேன். நான் வரைந்த அந்தப்படத்தை சுவிட்சர்லான்ட் நாட்டு காவல்துறைக்கு அனுப்பி விசாரித்ததில் பாதிக்கப்பட்டவன் அந்நாட்டுப் பிரஜைதான் என்பது உறுதியானது.

அவர் பெயர் ஹான்ஸ் சரபில்லா. அந்நாட்டில் பல அநாதை இல்லங்களை நடத்தி வந்த ஒரு சமூக சேவகர். அவருடைய சேவைகளை மதித்து சில நலன்புரிச் சங்கங்கள் அவருக்கு **08.02.1989** அன்று ஒரு பாராட்டு விழா ஏற்பாடு செய்தன. அதற்குப் போயிருந்த சரபில்லா அசாதாரணமாக நடந்து கொண்டார். அன்றே காணாமல்போனார். அதற்கான முறைப்பாடு கூட இருக்கிறது.

*"கொலை செய்யப்பட்டவிதம்... காளை மாடு, வெறிகொண்ட நாய் மற்றும் கூரிய வாளினால் தாக்கப்பட்டமை. இந்தச் சித்திரவதைகள் அனைத்தும் ஒரே நேரத்தில் அரங்கேறியிருக்கின்றன."*

அதன் பின் அவர் என்ன ஆனார் எனத் தெரியவில்லை. அவர் அந்நாட்டின் வேறு மாவட்டங்களுக்கோ அல்லது வேறு நாட்டுக்கோ போனதற்கான ஒரு ஆதாரமுமில்லை. இதை எல்லாம் வைத்துப் பார்த்தால் பாதிக்கப்பட்டவர் ஹான்ஸ் சரபில்லா!'' என்று கூறிவிட்டு தன் கையிலிருந்த பைலை மேசையின் மேல் வைத்துவிட்டு கதிரையில் அமர்ந்தார்.

அடுத்ததாக சாகிப் இஸ்மாயில் எழுந்தார்.

''குட் மோர்னிங். நாங்கள் ஒரு பிரச்சினையை எந்தக் கோணத்தில் பார்க்கிறோமோ அந்தக் கோணத்திலேயே அதைத் தீர்க்க முனைவோம். கோணங்கள் ஆளுக்கு ஆள் வேறுபடும். நான் எனது கோணத்தில் சொல்கிறேன். என் கோட்பாட்டின் பெயர் 'அரிச்சந்திரா த சைக்கோபாத்'. அரிச்சந்திரா என்கிற தேடப்பட்டு வருகிற தொடர் கொலையாளி பத்து வயதிற்குற்பட்ட சிறுமிகளைக் கடத்தி அவர்களை வன்புணர்ந்து கொடூரமாக கொலை செய்த ஒரு மனநலம் பாதிக்கப்பட்டவன். கொலைசெய்யப்பட்டவனுடைய உடலில் காணப்பட்ட வெட்டுக்காயங்களும் கொலை செய்யப்பட்ட சிறுமிகளின் உடல்களில் காணப்பட்ட வெட்டுக்காயங்களும் ஒரே மாதிரியுள்ளன. அச்சிறுமிகளின் உடல்களும் மரத்தில் தான் தொங்கவிடப்பட்டிருந்தன. இதனால் பாதிக்கப்பட்டவனுக்கும் அரிச்சந்திராவுக்கும் ஏதாவது தொடர்பு இருக்கலாம் என்று சந்தேகப்பட்டேன். அரிச்சந்திராவால் கொலை செய்யப்பட்ட ஒரு சிறுமியின் உடலில் இருந்து கிடைத்த அரிச்சந்திராவின் பாதுகாக்கப்பட்ட விந்து மாதிரியின் டீ.என்.ஏயையும் பாதிக்கப்பட்டவனுடைய டீ.என்.ஏயையும் ஒப்பிட்டுப்பார்த்தேன். இரண்டும் ஒத்துப் போகிறது. அரிச்சந்திராவும் கடந்த மூன்று வருடங்களாக கொலைகள் எதுவும் செய்யவில்லை. அரிச்சந்திராவுக்கு குடும்பமும் இல்லை. எனவே கொலைசெய்யப்பட்டது அரிச்சந்திராதான்! நன்றி.''

சாகிப் இஸ்மாயில்; தன் பைலை மேசையின் மேல் வைத்துவிட்டு அமர்ந்தார்.

நீலகண்டன், ''மார்வெலஸ் சாகிப்.''

கடைசியாக ராதாம்பாள் தன் பைலை மேசையின் மேல் வைத்துவிட்டு எழுந்தாள். அவள் நின்றபோது அவள் இடுப்பில் அணிந்திருந்த தங்கச் சங்கிலி தெரிந்தது.

அவள் பேச ஆரம்பித்தாள்.

''குட் மோர்னிங். என் கோட்பாடு 'தியரி ஒப் க்றையிங் நன்' பாதிக்கப்பட்டவனுடைய ஆண் உறுப்பு சிறியது. சில ஆண்களுக்கு இது இயற்கையாகவே உள்ள குறைபாடு தான். ஆனால் பாதிக்கப்பட்டவனுடைய தொப்புளில் உள்ள தோடு குத்தியிருந்ததற்கான அடையாளங்கள், கண் புருவங்களின் வடிவம், தோள் கலங்களில் காணப்பட்ட தடைசெய்யப்பட்ட, பெண்கள் பயன்படுத்தும் ஒரு வகை வாசனைத் திரவியத்தின் இரசாயனங்கள் என்பன பாதிக்கப்பட்டவன் ஒரு திருநங்கை என்பதைச் சொல்கிறது. ப்லாக் ஹார்ட் காட்டுக்கு இருபது கிலோ மீற்றர் தூரத்தில் உள்ள ஒரு கிராமத்தில் இருந்த ஓர் அநாதை இல்லத்தில் வளர்ந்துவந்தவன்தான் கெவின் என்ற சிறுவன். அவனுக்கு பதினொரு வயதாக இருந்தபோது பக்கத்து கிராமத்திலிருந்த திருநங்கைகள் கூட்டம் ஒன்றால் கடத்தப்பட்டான். அவர்கள் அவனது ஆண் உறுப்பை வெட்டி அவனை பல முறைகள் பாலியல் துன்புறுத்தல்கள் செய்தார்கள். அவனையும் திருநங்கையாக மாற்றினார்கள். கெவின் சசிரேகாவாக உருவானான். இருபத்தைந்து வருடங்களுக்குப் பின் தான் வளர்ந்த அநாதை இல்லத்துக்குச் சென்றான். அந்த அநாதை இல்லம் ஒரு தேவாலயமாக மாறியிருந்தது. அங்கு கன்னியாஸ்திரியான ஜாஸ்மின் சொஸாவைக் கண்டான். அவர் மேல் காதல் கொண்டான். அடிக்கடி அங்கு சென்றான். ஒரு நாள் அவன் தன் காதலை ஜாஸ்மினிடம் கூற அவர் அதை மறுத்தார். **25.12.1988** அந்த தேவாலயத்தில் இடம்பெற்ற கிறிஸ்த்துமஸ் கொண்டாட்டத்தின் போது அவன் ஜாஸ்மினுடன் தகாத முறையில் நடந்து அவரை அவமானப்படுத்தினான். அன்று இரவு ஜாஸ்மின் மர்மமான முறையில் இறந்துபோனார். அதற்குப் பின் கெவின் என்ன ஆனான் என்பது தெரியவில்லை. என் யூகத்தின்படி பாதிக்கப்பட்டவன் கெவினாக இருக்கலாம். தட்ஸ் இட்.''



அவள் அமர்ந்தாள்.

மூவரும் தங்கள் கோட்பாடுகளை முன்வைத்திருந்தாலும், அதில் எது சரி? எது தவறு? என்று தெரியாமல் ஒருவரின் முகத்தை ஒருவர் பார்த்துக்கொண்டிருந்தனர்.

ஆனால்…

நான் தெளிவாக இருந்தேன். ஆம்! எனக்கு விடை தெரிந்துவிட்டது.

அது…

பிரம்மனுக்கு ஆணவம் ஏற்பட்டு ஐந்தாவது தலை உருவாக, சிவன் வைரவ அவதாரம் கொண்டு பிரம்மனின் ஐந்தாவது தலையை வெட்டி வீசினான். ஹான்ஸ் சரபில்லாதான் செய்த நல்ல காரியங்களினாலும், தான் சமூகத்தில் பெற்ற நல்ல பெயரினாலும் ஆணவம் கொண்டான். அதை அழிக்க சிவன் வைரவ அவதாரம் எடுத்தான். இதற்கு ஆதாரம் பாதிக்கப்பட்டவனுடைய உடலில் காணப்பட்ட நாய்க்கடிக் காயங்கள்.

மோகத்தினால் மகாவிஸ்ணுவுக்கு பிறந்த அரக்க குணமுள்ள புதல்வர்கள் பல அநீதிகளைச் செய்தனர். அவர்களை அழிக்க சிவன் ரிஸப அவதாரம் கொண்டான். அரிச்சந்திரா பல சிறுமிகளை கொடூரமாக கற்பழித்துக் கொன்றவன். அவனை அழிக்க ரிஸப அவதாரம். இதற்கு ஆதாரம் பாதிக்கப்பட்டவனு டைய உடலில் காணப்பட்ட மாட்டுக் கொம்பு குத்தியதால் ஏற்பட்ட காயங்கள்.

தக்கன் தன் மகளான தாட்சாயினியை தன் யாகத்தில் வைத்து இழிவுபடுத்தினான். சிவன் வீரபத்திரராக அவதரித்து தக்கனின் சிரசை வெட்டி வீழத்தினான். கெவின் கன்னியாஸ்திரியான ஜாஸ்மின்னை அவமானப்படுத்தி அவருடைய இறப்புக்கு காரணமாயிருந்தான். அவனை அழிக்க வீரபத்திர அவதாரம். இதற்கு ஆதாரம் பாதிக்கப்பட்டவனு டைய உடலில் காணப்பட்ட வெட்டுக் காயங்கள்.

கண்டுபிடிக்கப்பட்டது ஒரு சடலம் தான். அது சரபில்லாவாக இருக்கலாம், அரிச்சந்திராவாக இருக்கலாம் அல்லது கெவினாக இருக்கலாம். அதைக் கண்டுபிடிக்க முடியாது. இந்தப் புதிர் தொடரத்தான் போகிறது. நம்பாதவரைக்கும் இந்தக் கொலைக்கான காரணங்கள்கூட அறியப்படாமல்தான் இருக்கப் போகின்றன. இது ஆதியும் அல்ல … அந்தமும் அல்ல.

நான் கதிரையை விட்டெழுந்தேன். மாநாட்டு மண்டபத்தின் ஜன்னல ருகே சென்று வெளியே எட்டிப் பார்த்தேன்.

வெளியே கனமழை பெய்து கொண்டிருந்தது. வானம் ஊதா சிவப்பு நிறமாக மாறியிருந்தது. சாலையில் மயான நிசப்தம். சாலையின் நடுவே ஒரு அந்தணர். வெள்ளை வேட்டி அணிந்திருந்தார். கழுத்தில் உருத்திராட்ச மாலை, நெற்றியில் திருநீற்றுப் பட்டை, சிவந்த உதடுகள், வெள்ளைத் தோள், உணர்ச்சியற்ற முகம்… அவரது கண்கள் என்னை நோக்கிக்கொண்டிருந்தன.

நான் அவரை உற்றுப் பார்த்தேன்… திடீர் என என் கண்களை கருற்திரை மறைத்தது. எல்லாம் இருளானது. மனித உடல் கருகும் போது உருவாகும் வாடையும் சாம்பிராணி வாசமும் சேர்ந்து வீசியது. சில கிழவர்கள் தங்கள் அடைத்த குரல்களில் தேவாரங்கள் பாட பெண்கள் வைக்கும் அவல ஓலங்கள் இசையாக ஒலித்தன.

அப்போதுதான் எனக்கு நீலகண்டனின் குரலும் கேட்டது.

''நந்தகுமாரன் சார் உயிருடன் இருந்திருந்தால் சந்தோசப்பட்டிருப்பார். அவரது துர்திஸ்டம் உங்கள் கடிதம் கிடைத்த அன்றே தற்கொலை செய்துகொண்டார்.''

**(சில உண்மைச் சம்பவங்களை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்டது.)**

■

## ''கிக்கிரி மெற்றா''



தென்னிந்திய நகைச்சுவை நடிகர் வடிவேலு. தென்னகத்தில் மாத்திரமல்ல ஈழத்திலும் அவரை அறியாத சிறுசுகள், பெரிசுகள் இருக்க முடியாது. அந்தளவுக்குத் தனது சாதரண நடிப்பாலும் நகைச்சுவைப் பேச்சுகளாலும் பலரது மனங்களிலும் ஆழப் பதிந்திருப்பவர் அவர். அவரது நடிப்பை இரசிக்காதவர்கள் இருக்க முடியாது. பல நாட்டவர்களும்கூட அவரது நகைச்சுவைக்கு அடிமையாகிக் கிடக்கிறார்கள். அந்த வகையில் தற்போது சிங்கள மொழியில் வடிவேலுவின் நகைச்சுவைக் காட்சிகள் மொழி மாற்றம் செய்யப்பட்டு வருகின்றன. இணையத்தளங்களில் அவை பரவ விடப்பட்டுள்ளன. வடிவேலு நடித்த கட்டங்களைச் சிங்கள மொழிக் கலாசார பண்பாட்டு விழுமியங்களுக்கு ஏற்றவாறும் மாறுபடாமல் மொழி மாற்றம் செய்யப்பட்டுள்ளன. வடிவேலுவின் ''கிணற்றைக் காணவில்லை'' போன்ற நகைச்சுவைக் காட்சிகளை அவ்வாறே மொழி பெயர்த்திருக்கிறார்கள். வடிவேலு ஒவ்வொரு படங்களிலும் தனக்கு ஒவ்வொரு விநோதமான பெயர்களைச் சூட்டியிருப்பார். தீப்பொறித் திருமுகம், பட்டுக்குஞ்சம், அலேர்ட் ஆறுமுகம். கைப்பிள்ளை, என் கவுண்டர் ஏகாம்பரம் போன்ற பெயர்கள் சிறப்பானவை. ஆனால் தற்போதைய சிங்கள மொழி பெயர்ப்பில் இந்தப் பெயர்கள் தவிர்க்கப்பட்டுக் ''கிக்கிரி மெற்றா'' என்கிற ஒரு பெயரில் அவருடை எல்லா நகைச்சுவைக் காட்சிகளும் மொழி மாற்றம் செய்யப்படுகின்றன. வடிவலுவைத் தமிழில் பார்த்துப் பழகியவர்களுக்கு அவர் சிங்களத்தில் பேசுவதான இந்த மொழி மாற்றமும் மிகவும் ரசனைக்குரியதாகவுள்ளது. இனிச் சிங்கள மக்கள் மத்தியில் கிக்கிரி மெற்றாவாகவே வடிவேலு வழக்கத்தில் இருப்பார். தமிழைக் கடந்து இந்தியாவில் இல்லாத வேறறொரு அந்நிய மொழியில் பலரைச் சிரிக்க வைக்கும் வாய்ப்பு வடிவேலுக்குக் கிடைத்திருப்பதைப் பலரும் பாராட்டுகிறார்கள்.



# கவசக் காதல்...?

சாய்ராம்

**இது 21ஆம் நூற்றாண்டு.**

காதலிக்குக் காதலனும், காதல னுக்குக் காதலியும் முத்தம் கொடுப்ப தெல்லாம் ஒரு விடயமே யல்ல. ஐரோப்பிய ஆங்கிலேயர் களின் கலாசாரத்தைப்போல காலப் போக்கில் இங்கும் முத்தம் சாதரண மாகிவிட்டது. காதலன் - காதலி தவிரவும் எவரென்று பாராது எவ ராயினும் முத்தம் கொடுத்து மகிழ் வது பல விடயங்களில் பண்பாடாக இருப்பதும் தெரிந்ததே. ஆனால் பெருந்தொற்றான கொரோனா இவை பற்றியெல்லாம் நின்று நிதா னித்துச் சிந்திக்க வைத்திருக்கி றது.

காலத்தின் போக்கில் கலாசாரங் கள் இவ்வாறு விருத்திகண்டு வரு வது ஒருபுறமிருக்க இந்த நூற் றாண்டில் வந்து குதித்த கொரோனாத் தொற்று முதலில் தடைபோட்டது இந்த முத்தத்துக்குத்தான். சீனா, அமெரிக்கா, இந்தியா, ஐரோப்பா எனப் படர ஆரம்பித்த வைரஸ் உல்லாசப் பயணிகளின் தேசம் என்று கருதப்படுகின்ற இத்தாலியிலும் இன்னும் சில ஐரோப்பிய நாடுகளி லும் இந்த முத்தக் கலாசாரம் காரண மாகத்தான் துரித கதியில் பெரு கியது - பரவியது. இதன் காரணமாக முத்தமிடல்கள் குறைந்தன. சில இடங்களில் அவற்றுக்குத் தடை அறிவித்துத் தண்டமும் விதிக்கு மளவுக்கு நிலமை மோசமடைந் தது.

அதனால் அந்த நாட்டு மனிதர்கள் முகம்கொடுத்த வாழ்வியல் சிக் கல்கள் ஏராளம். ஐரோப்பிய -ஆங் கிலேயர்களை அடியொற்றியும் அவர்களின் வாழ்வியலைக் கொண் டாடிக் கடைப்பிடிப்பதை வழக்க மாக்கியும் வந்த ஆசிரியர்கள்கூட, அரவணைப்பதையும் ஆரத் தழுவு வதையும் கைகுலுக்கிக்கொள் வதையும் தவிர்த்து வணக்கம் கூறிக்கொள்ளுங்கள் என்று குத்துக் கரணம் அடித்தனர். தமது பழ மைக்குச் சென்றனர். காலத்தையும் மனித வாழ்க்கைப் போக்கையும் மாற்றிப்போட்டிருக்கின்ற இந்தப் பெரு வைரஸுக்கு வருகின்ற காத லர் தினம் எங்ஙனம்...?

**காதல் கிறுக்கர்கள்**

ஆங்கிலேயர்களின் நாகரிகத் தைக் கடைப்பிடிக்கத் துடிக்கிற எமது இளசுகள் உடுபுடைவைகள் தொடக்கம் உணவுண்டிகள் வரை யில் ஓரளவுக்காவது மேலைத் தேசத்து வாழ்வியலைத் தமக்குள் புகுத்துவதில் வெற்றி கண்டிருக்கி றார்கள் என்றுதான் சொல்ல வேண் டும். நவீன வர்த்தகப்போக்கும் சினி மாவும் அவற்றை ஊக்குவிப்பதாக இருக்கின்றன. இணையச் செயலி கள், சமூக வலைத்தளங்களும் இதற்கு ஊக்கமளிக்கின்றன. ஆனால், உடலியல் சார்ந்த விடயங்களில் ஆங்கிலேயர்களைப்போல நம்ம வர்கள் அவ்வளவு மாற்றங்களைப் புகுத்திவிடவில்லை. அதற்குத் தயாராகிறார்களோ இல்லையோ உட லைக் கொண்டாடும், புனிதமாகப் பாதுகாக்கும் இந்திய - ஆசியச் சமூக வாழ்வில் இருந்து தூரப்படவு மில்லை என்பது தெளிவு. இணைந்து வாழ்ந்து பார்த்துப் பின்னர் குடும்ப மாதல் மற்றும் டேட்டிங் எனப்படு கின்ற பாலினச் சேர்தல் ஆகிய புதிய புதிய வாழ்க்கை முறைகளில் உச் சம் தொட்டு நிற்கிற மேலைத்தேசத்த வர்களை இந்த விடயத்தில் நம்ம வர்கள் (இந்தியர்கள் ஓரளவு மாற் றம்) அண்ணார்ந்துதான் பார்க்க வேண்டியிருக்கிறது. காதலர் தினத் தன்று காதலியைச் சந்திக்கக்கூட முடியாத இவர்கள் (முத்தமிடுவது அடுத்த கட்டம்) வீதிகளிலும் வீதி யோரங்களிலும் மதிற்சுவர்களிலும் ஒதுக்குப் புறங்களிலும் தமது பெயர்களின் முதல் எழுத்துகளையும்



காதல் குறியீடுகளையும் வசனங் களையும் கிறுக்கி விடுகின்ற நிலைக்கு ஆட்பட்டிருக்கிறார்கள். அதைக் கிளர்ச்சி மிக்க செயலாகவும் செய்து சிலிர்க்கிறார்கள். இதில் பலருடை யது ஒரு தலைக் காதல் என்பது தனிக் கதை....! சமூக வலைத் தளங்கள் பெருகிவிட்ட தற்காலத்தில் இந்தக் கிறுக்கல்களில் தொய்வு ஏற்பட்டாலும் சில பத்தாண்டுக ளுக்கு முன்னர் உச்சம் பெற்றிருந்த - கொடி கட்டிப் பறந்த இவ்வகைக் காதல் கிறுக்கர்கள் ஏராளம்.

> முகக் கவசத்தை முகத்தில் மாட்டுவது மட்டுமன்றித் தாம் பொதுவெளியில் அணிந்து அறியப்பட்ட ஆடைகளைத் தவிர்த்துப் புதிய ஆடைகளை அணிவதன் மூலமும்கூடத் தம்மை எவரும் அடையாளம் கண்டுவிடாத படி அரண் அமைத்துள்ள காதலர்கள் ஏராளம்.

**காதலர்களின் அரண்**

நாளைய காதலர் தினத்தைக் கவ னத்தில் கொண்டு முற்கூட்டியே காவ லர்கள் சார்பில் விடுக்கப்பட்டிருந்த அறிவிப்பு சில இளைஞர் குழாத் தைச் சஞ்சலத்துக்குள் தள்ளினாலும் பல இணைகளை வருடிவிட்டுள்ளது. இது பலர் அறியாத சங்கதி. தனி மைப்படுத்தல் சட்டங்களை மீறிக் காதலர் தினத்தை ஒன்றுகூடிக் கொண்டாடுபவர்கள் மீது நடவ டிக்கை எடுக்கப்படும் என்று காவ லர்கள் அறிவித்திருப்பது காதல் கிறுக்கர்களையே குறிவைத்திருப்ப தாகியுள்ளது. இருவர் கூடுவதற்கு எவ்விதத்திலும் குழப்பம் விளை விக்கவில்லை. முகக் கவசம் அணி வதைக் காவலர்கள் கண்காணிக்கத் தொடங்கியதிலிருந்து காணும் இடங் களில் எல்லாம் காதல் ஜோடிகள் மலியத் தொடங்கினவே அன்றிக் குறையவில்லை. முகக் கவசத்துக் குள் தமது முகத்தைப் புதைத்து மறைக்க முடிவதால் பெற்றோர், உறவினர்கள், அறிந்தவர்கள், தெரிந்த வர்களின் கண்களுக்குத் தட்டுப்படா மல் அவர்களால் காதல் செய்ய முடிந் தது. காவலர்களின் முகக் கவசம் அணிய வேண்டும் என்கிற அறி விப்பை உறுதியாகக் கடைப்பிடிப்ப வர்களாகவும் தற்போதுவரை இந்தக் காதலர்களே இருக்கிறார்கள். முகக் கவசத்தை முகத்தில் மாட்டுவது மட்டு மன்றித் தாம் பொதுவெளியில் அணிந்து அறியப்பட்ட ஆடை களைத் தவிர்த்துப் புதிய ஆடை களை அணிவதன் மூலமும்கூடத் தம்மை எவரும் அடையாளம் கண்டு விடாதபடி அரண் அமைத்துள்ள காதலர்கள் ஏராளம். ஒதுக்குப் புறங் களிலும், ஆள் அரவம் இல்லாத இடங்களிலும் கூடிக் கலைந்துவிடு கின்ற இவர்கள் முகக் கவசங்களை அணிந்து முகத்தை மறைப்பதாலும் ஆடை அணிவதில் மாற்றங்களைப் புகுத்துவதாலும் தமது அடையா ளத்தை இலகுவாக மறைக்க முடிவ தால் இப்போது பண்ணைக் கடற் கரைப் பகுதி போன்ற சன நடமாட் டம் அதிகமுள்ள பகுதிகளில்கூடப் பகல் நேரங்களில் அதிகரிக்கத் தொடங்கியிருக்கிறார்கள். இந்தக் காதலர்களின் கண்களைச் சற்று நேரம் உற்றுப்பார்த்தாலோ (பெரும் பாலும் பெண் பிள்ளைகளை) அல் லது நமக்குத் தெரிந்தவராக அவர் இருந்தாலோ அவர்களின் பார்வை யிலும் உடல் மொழியிலும் திடீர் மாற் றங்கள் உண்டாவதை அவதானிக் கலாம். முகக் கவசம் கொரோனா வுக்கு மாத்திரமல்ல காதலர்களுக் கும் கவசமாகியிருப்பதுதானே இதன் அர்த்தம்...?



● பேர் அறிஞன்

# வளமிகு வாழ்விற்கான வழிகாட்டலின் நிலை...?

வாழ்வில் மகிழ்வை எட்டுதல் என்பது பதவிகள் பணம் என்பவற்றினாலேதான் சாத்தியமாகின்றது எனும் சிந்தனையை மாற்றுவது ஒருபுறமிருக்க அதனை ஏற்படுத்தாமலிருப்பதற்கான வழிவகைகளைப் பற்றி யாராவது முயல்வது நன்று. ஏனெனில் வாழ்வில் உயர்தல் என்பதனைப் பணமீட்டுதலை முன்வைத்தே அனேக செயற்பாடுகள் முன்வைக்கப்படுகின்றன. தன்னிறைவு சமூக நிறைவு என்பன தொடர்பான விழிப்பு நிலைக்குப் பதிலாக நன்றாக வருவாயீட்டலாம் என்பது தான் முன்னிலைப்படுத்தப்படுகிறது.

இம்முன்னிலைப்படுத்தலானது உடல் உள சமநிலை பாதிப்பிற்குள்ளாகுமளவிற்கு ஒருவனை விரட்டுகிறது. இதற்கு எடுத்துக்காட்டாக வெளிநாட்டு வேலைவாய்ப்புகளை நம்பி நாடு கடக்கும் ஒருதொகுதியைக் குறிப்பிடமுடியும். இத்தொகுதியினது உடல் உள பாதிப்புகள் பற்றி முன்னைய பகுதிகளில் பார்த்திருக்கிறோம். ஆனால் அத்தொகுதியினது அன்னியச் செலாவணி உள்ளூர்ப் பணமாக மாறப்படுவதாலெழும் பிரமிப்பு கல்வி மற்றும் பண்பாட்டு விடயங்களில் ஏற்படுத்திக்கொண்டிருக்கும் பாதக விளைவுகளை பார்ப்பதைத் தவிர்த்தே வழிகாட்டல் சமூகத்தால் மேற்கொள்ளப்படுகிறது.

முறைசார்ந்த வழிகாட்டல்கள் இவ்விடயத்தில் கவனத்தைச் செலுத்துவதாகத் தெரியவில்லை. அவையும் ஒத்து ஓடுவதான தொழில் வாய்ப்புகளையே முன்னிலைப்படுத்துகின்றனவா? எனும் ஐயம் எழுவதைத் தவிர்க்க முடியவில்லை. ஏனெனில் குறித்த பணிகூட செயற்றிட்டங்களாக்கப்பட்டு அரச மற்றும் அரச சார்பற்ற நியூட்டங்களினாலேயே காலங் குறித்து நடாத்தப்படுவதுடன் பணமீட்டுதலே குறியாக செயற்பாட்டாளர்கள் நடப்பதும் சிந்தனையில் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டியோரினது சிந்தனையை அளவிட போதுமானதாயில்லையா?

பணமீட்டுதல் என்பது இலக்காக அமைக்கப்படும் போது பிறரை எந்தளவிற்குப் பயன்படுத்தமுடியுமோ அந்தளவிற்குப் பயன்படுத்தும் ஒருவிதமான (குரூர) எண்ணம் வந்துவிடுவதை உணரமுடியாதவர்களாக பிறரையும் அதற்குள் ஈர்த்து அமிழ்த்தும் செயலை பெருமிதத்தோடு செய்யத் தயாராகின்றோம். அதற்கே தயாரக்குகின்றோம். பதவிகள் என்பது பணமீட்டவேயன்றி பிறருக்கு உதவுவதற்கானதல்ல எனும் மனோநிலையுடன்தான் தொடர்ந்தும் நகரப் போகிறோமா?

> “ பதவிகள் என்பது பணமீட்டவேயன்றி பிறருக்கு உதவுவதற்கானதல்ல எனும் மனோ நிலையுடன்தான் தொடர்ந்தும் நகரப் போகிறோமா? ”

இதற்கு எடுத்துக்காட்டாக கடன் திட்டங்கள் (நுண்கடன் மற்றும் பிறகடன்கள்) தவணைக் கட்டண உடமை வியாபாரம் காப்புறுதித் திட்டங்கள் போன்றவற்றினையும் அதன் உத்தியோகத்தர்களையும் குறிப்பிடமுடியும். கடனை வழங்கும்போது

— 19

எதற்கான கடன்? எவ்வளவு இலாபமீட்ட முடியும்? என்பதற்கப்பால் நட்டமடையாதிருக்க வழிகூறுகிறார்களா என்றால் இல்லை. குறித்த தொழிலில் உள்ளகள யதார்த்தம் என்ன? குறித்த துறையில் பெருந்தொகை முதலீட்டினை இடுவதற்கான வழிவகைகள் பற்றிக்கூறி (மண்டைகழுவி) கடனை வழங்குவதில் காட்டும் அக்கறை அத்தொழிலுக்கான சவால்கள் பாதக நிலைகளை சுட்டிக்காட்டுவதில் அறவே காட்டுவதில்லை.

அவ்வாறு நடந்திருந்தால் எமது உழைப்பும் பணமும் வெளியே சென்றிருக்காது என்பதற்கப்பால் பல குடும்பப் பிரிவுகளையும் உயிரிழப்புகளையும் தவிர்த்திருக்கலாமல்லவா? இதற்கான காரணிகள் இரண்டு. ஒன்று குறித்த துறைசார் பட்டறிவின்மை. இரண்டாவது குறித்த கடன்களை வழங்குவதன் மூலமாக தனக்கான பதவியுயர்வு மற்றும் தரகுப்பணம் போன்றவற்றைப் பெறல்.

இந்த இரு காரணிகளுமே நலிவான ஒரு தொகுதியை மீண்டெழவே முடியாத சிக்கலுக்குள் மாட்டிவிடுகிறது. இதனை சமூகத்திற்குத் தெளிவூட்டுவதன் அவசியம் உணரப்பட்டதாக தெரியவில்லை

இக் களயதார்த்தம் பேசப்படாமைக்கும் இரு காரணிகள் உள்ளன. குறித்தபெரும் (சுரண்டல்) நிறுவனங்களை எதிர்த்துச் செயற்படுவதிலுள்ள தயக்கம். மற்றையது சம்மந்தப்பட்ட அப்பாவிகள் தாம் முதலிட்டு சொந்தத் தொழில் மூலம் பணமீட்டுவதை விரும்பாமலேயே குழப்புகிறார்கள் என எண்ணுவார்கள் எனும் தயக்கம். இக்காரணிகள் இரண்டுமே யதார்த்தமானவைதான். ஆனால் வழிப்பு நிலையினை ஏற்படுத்தாதவரை அவலமே வாழ்வாக இருந்துகொண்டிருக்கும் என்பதில் ஐயமில்லை.

வாழ்க்கை என்பது என்ன? அதில் பணம் வகிக்கவேண்டிய பங்குஎன்ன? பணமீட்டுதல் என்பதற்கான நியாயமான கண்ணியமான வழிகள் எவை? பணத்திற்கப்பால் வாழ்க்கைக்கான தேவைகள் என்ன? அவற்றை அடைவதெப்படி? போன்ற வினாக்களை தனக்குள்ளாகவே எழுப்பி விடை காணத் தூண்டக்கூடிய வழிகாட்டல்கள், ஆலோசனைகள் பற்றிச் சிந்திப்பது ஆரோக்கியமானதாயிருக்கும். சிந்திப்போமா? ■

# எது ஆன்மீகம்..?

■ சாம் - ரமேஸ்குமார்

அறம் சார்ந்த செயல் நெறிகளில் இருந்து தான் ஆன்மீகம் ஒரு மனிதனிடத்திலே ஊற்றெடுக்கின்றது. ஆன்மீகத்தின் நுழைவு வாயிலாக எப்போதும் சமயம் விளங்குகின்றதே தவிர ஒருபோதும் சமயம் ஆன்மாவை உணரும் ஆன்மீகம் ஆகிவிட முடியாது.

சமயம் என்பது கிரியைகள், சடங்குகளைக் கொண்ட ஒரு புறம் சார்ந்த செயல் முறையாகும். ஆனால் ஆன்மீகமோ ஒரு ஞானத் தெளிவினை கொண்ட அகம் சார்ந்த தவ வாழ்க்கையாகும். சமயம் வேறு ஆன்மீகம் வேறு என்ற தெளிவு நிலையே ஞானத்தின் முதல்படியாகும்.

உதாரணத்திற்கு ஒரு நூல் நிலையமானது எல்லா விதமான தகவல்களையும் திரட்டி கொடுக்கும் ஒரு தகவல் மையமாக விளங்குகின்றது. அது அந்த தகவல்களை செயற்படுத்தும் ஒரு மையமாக எப்போதும் விளங்குவதற்கு வாய்ப்பே இல்லை.

ஒரு சில நூலறிவைப் பெற்றுக்கொண்ட சமயவாதிகள். அவ்வறிவை தங்கள் அனுபவ ஞானத்தில் உணர்ந்து ஒருபோதுமே செயற்படாது. அதை ஆன்மீகமென தவறாகப் புரிந்துகொண்டு சமயத்துக்கும் ஆன்மீகத்துக்கும் இடையில் வித்தியாசம் தெரியாதவர்களாய் அறியாமையெனும் சுழிக்குள் அகப்பட்டு கொள்கின்றார்கள்.

வெறும் நூல் அறிவை வைத்துக்கொண்டு ஆன்மீகத்தை ஒருபோதும் அளவிட முடியாது. அவ்வறிவானது தலையில் ஒரு பாறாங்கல்லை சுமப்பதற்குச் சமமானது. அதிலிருந்து விடுபட இன்னும் பல பிறவிகள் எடுக்க வேண்டியும் ஏற்படலாம்.

ஆன்மீகம் என்பது ஓர் அரசியல் கட்சியில் சேர்ந்து உறுப்புரிமையை பெறுதைப் போலல்ல. அது தன் உள்ளுணர்வுக்குள் ஊடறுத்து. "நான்" என்ற முனைப்பை வேரோடு இல்லாமல் செய்து. தன் சுயத்தைத் தானே உணரும் ஒரு உன்னத நிலையாகும்.

இன்று சமூகத்தில் நடமாடித் திரியும், சில படித்த, பதவிகளில் இருக்கும். மனிதர்களில் ஒரு சிலர் ஆன்மீக மையங்களில் சேர்வதாலோ அல்லது ஒரு மடத்தில் சாமியாருக்கு பணிவிடை செய்வதாலோ அவர்களிடம் ஆன்மீகம் மலர்ந்து விட்டதாக அர்த்தமில்லை. அவர்களும் குழம்பி சாமியாரையும் குழப்பி ஆச்சிரமத்தை விட்டோ அல்லது மடத்தை விட்டோ வெளியேற்றப்படுகின்றார்கள். இதுவே அறியாமையில் உழலும் மனிதர்களின் இன்றைய நிலையாகும்.

பற்றற்ற நிலையே ஆன்மீகத்தின் அடித்தளமாகும். தர்மத்தோடு கூடிய உலகியல் வாழ்வினை பற்றோடு செய்தால் அது மாயை என அழைக்கப்படும். ஒரு "கர்மயோகி" போல் பற்றற்று செய்தால் ஞானத் தெளிவினை கொடுக்கும் "கர்மயோகம்" என அழைக்கப்படும். உலகியலும், ஆன்மீகமும் எம் மனதைப் பொறுத்தே அமைந்து விடுகின்றது.

உலகியலை நோக்கி மனிதர்கள் முன்னேற, முன்னேற கர்ம பந்தத்துக்குள் அதிகமாய் கட்டுண்டு போகின்றார்கள். உள்ளுணர்வை நோக்கிய பயணத்தில். மனிதர்கள் தங்கள் அகங்காரத்தை கரைக்கும் அளவுக்கு அவர்கள் கர்ம பந்தம் அடியோடு அடிபட்டு போகின்றது. இதுவே சிறந்த ஆன்மீக வாழ்வியலாகும்.

# அட உதுக்குத்தானோ?

■ கதிரேசன் காத்தவராயன்

அதிபர் ராசரத்தினம் மாஸ்ரர் ஏதோ சைக்கிளாலை விழுந்தவராம் ஒருக்காச் சுகநலங் கேப்பமெண்டுபோனன். அங்கை சுப்பிரமணியம் மாஸ்ரரும் அவற்றை பெடிசுதனும் இருந்தினம். ராசரத்தினம் மாஸ்ரர் ஒருதிறமான அதிபராயிருந்து பென்சன் எடுத்தவர். அவற்றை பாராட்டு விழாவிலை காலிலை விழுந்து கும்பிடாத ஆக்களில்லை. அப்பிடியொரு மனிசன். பாவம் பேரப்பிள்ளையை ரியூசனிலை விட்டுட்டு வரேக்குள்ள புதிசாப் போட்ட றோட்டு விழிம்பிலை இடறுப்பட்டுப் போனாராம். முழங்காலிலைதான் சின்ன நோ எண்டு எண்ணைச் சீலை கட்டியிருந்தார்.

என்ன கதிரேசு யோசிச்சுக் கொண்டு நிக்கிறீர்? இப்பிடி இதிலை இருமன் எண்டு மாஸ்ரர் தனக்குப் பக்கத்திலையிருந்த கதிரையைக் காட்டினார். ஓம் மாஸ்ரர் யோசினைதான்... எல்லாரும் படிச்சாக்கள். வாத்திமார்? நான் என்னத்தைக் கதைக்க? உங்கடை கதையைக் குழப்பவோ? எண்டுதான்.... வேறையென்ன? எண்ட படி இருந்துகொண்டன்.

அது சரிதான் சேர் எங்கடையாக்கள் விளக்கமில்லாமலுக்குத்தான் அந்தரப்படுகினம். உதிலை பெரிசாய் ஒண்டுமே இல்லை எண்டு சுதன் சொல்லிச்சுது. அது தான் தம்பி கொஞ்சம் பரந்து யோசிச்சால் அந்தரப்பட மாட்டினம் எண்டார் அதிபர். எங்கடையாக்கள் ஒரு பக்கத்தை மட்டும்தான் பாப்பினம். அங்காலை இஞ்சாலை பாக்கிறது வலுகுறைவல்லே. ஒராள் ஓடுது எண்டால் என்ன ஏதெண்டில்லாமல் பின்னாலை ஓடுறதுதானே பழக்கமாப் போச்சுது எண்டு சுப்பிரமணியம் மாஸ்ரர் சொல்லி பெருமூச்சு விட்டார்.

நான் ஒண்டும் விளங்காததாலை பரிதாபமாய் எல்லாரையும் பாத்ததோடை சரி ஒண்டும் கதைக்கேல்லை. சுதன்தான் இதைக் கண்டிட்டு கதிரேசு மாமா! இப்ப கனக்கப் பெரிய பள்ளிக்கூடங்களை நசனல் ஸ்கூலாக்கப் பொறதாய் அரசு அறிவிச்சிருக்குது. அதுக்கு எங்கடை பள்ளிக்கூடங்கள் கனக்க அடிபிடிப்பட்டு எம்பிமார் அமைச்சர்மார் அடிப்பொடியள் எண்டு சிபாரிசுகளுக்குப் பறக்குதுகள். அதைப் பற்றித்தான் கதைச்சுக்கொண்டிருந்தனாங்கள். நீங்கள் இடையுக்கை கதை கேட்டதாலை விளங்கேல்லைப் போலை?

அது சரிதான்ரா சுதன் அப்ப இப்ப நீ படிப்பிக்கிறது என்ன பிறைவேற்றோ? எண்டன். அது கதிரேசர் அரச பள்ளிக் கூடங்கள்தான். ஆனால் அதுகளை நிர்வகிக்கிறது மாகாணம். இப்ப கதைக்கிற தேசியப் பாடசாலையளை நேராயே அரசு தான் நிர்வகிக்குது. அததான் வித்தியாசம். எண்டு சுப்பிரமணியம் மாஸ்ரர் சொன்னார். அட..ட... உதேவிசயம்.. நானும் என்னவோவெண்டல்லே கனக்க யோசிச்சன் எண்டு சொல்லி நிப்பாட்டினன்.

கதிரேசர் உது கனக்க யோசிக்க வேண்டின விசயந்தான்.. ஆனால் எங்கடையாக்கள் யோசிக்கினமில்லை எண்டுதான் இப்ப பிரச்சினையே எண்டார் அதிபர். மாஸ்ரர் விளங்காமலக்குத்தான் கேக்கிறன் சிரிக்கப்டாது...பள்ளிக்கூடத்துக்கு வாற காசுகள் உதவியள் எல்லாம் டக்கெண்டு நேரை வருமல்லே? இப்ப மாதிரி அங்கை போய் இஞ்சை போய் பிச்சுப் பிடுங்குப் படாமல் வாறது நல்லதல்லே? எண்டன் நான்.

உதிலை ஒரு பக்க நியாயம் சரிதான் மாமா. உந்த ஒரு பக்கப் பார்வையோடை தான் பறக்கினம். எனி தேசியப் பாடசாலை எண்டு பெருமையடிக்கலாம். வேறை பெரிசாய் ஒண்டுமில்லை. எண்டு சுதன் நிப்பாட்ட முதலே அதிபர் குறுக்கிட்டார். தம்பி சொல்லுறதுதான் உண்மை. அதோடை வடிகட்டி பிள்ளையளைச் சேர்க்கலாம். கெட்டிக்காறப் பிள்ளைய ளெண்டால் படிப்பிக்கிறதும் சுவமில்லே எண்டும் யோசிக்கினம் போல கிடக்குது. அப்பிடியும் ரண்டொரு கதை காதுக்குப் பட்டுது. உது களுக்குப் பின்னாலை இன்னொரு ஆபத்தும் இருக்கெண்டதை பாக்க வேணும் கண்டியளோ.

> **பள்ளிக்கூடத்துக்கு வாற காசுகள் உதவியள் எல்லாம் டக்கெண்டு நேரை வருமல்லே? இப்ப மாதிரி அங்கை போய் இஞ்சை போய் பிச்சுப் பிடுங்குப்படாமல் வாறது நல்லதல்லே?**

ஓம் மாஸ்ரர்.. நியமனங்கள் இடமாற்றங்கள் தீர்மானங்கள் அது இது வெண்டு எல்லாத்தையும் தூர இருக்கிற ஒராளிட்டைக் குடுக்கிறது இந்தக் காலச் சூழலிலை நல்ல தில்லைத்தானே.எங்டையாக்கள் மாதிரி வேலிப்பொட்டுக்குள்ளாலை போய் வேலை செய்யிற மனநிலை இல்லாத பிற ஆக்கள் வந்து குதிக்கிறதுக்கும் வாய்ப்பாயல்லே ஆகப்போகுது. ஆஸ்பத்திரியளை மாதிரி பிறமொழிக்காறரைச் சந்திக்க வேண்டியும் வரலாம். ஜீஏமார் மாதிரி அதிபரும் புதுஆள் வரலாம்... இதுகளைக் கதைக்கிறதும் பிழையாப்போகும் எண்டு சுப்பிரமணியம் மாஸ்ரர் நிப்பாட்டினார்.

கண்டபடி அவசரப்பட்டு முடிவெடுக்கிற தாலை கனக்கப் பிரச்சனைப்பட்ட ஆக்களில்லே நாங்கள்? இஞ்சார் நிர்வாகம் அதிபர் வாத்திமார் மாதிரிபிள்ளையளையும் இங்கிலீஸ் மீடியத்திலை சேர்க்கலாமோ? எண்டு கேட்டன். அதுக்கு அதிபர் சிரிச்சார்... கதிரேசர்.. கொஞ்சக் காலத்துக்கு முந்தி மாங்குளம் பள்ளிக்கூடப் பிள்ளையொண்டு மாங்குளத்தைத் தெரியாமலுக்கே சோதினை எழுதிப்போட்டு தெண்ட கதை அடிபட்டதல்லே? நினைவிருக்கோ? எண்டு கேட்டார் சுப்பிரமணியம் மாஸ்ரர். ஓமெண்டு தலையாட்டினன்

உந்த உயர் புள்ளியெடுத்த பிள்ளையளை வடிகட்டி எடுத்துப் படிப்பிச்சு பேரெடுக்கலாம் எண்டனிங்களல்லே? உந்த தேசியப் பாடசாலையளிலையும் எல்லாப் பாடமும் பெயிலாகிற ஆக்களும் இருக்குத் தானே? எனி படிக்கிறாக்கள் நாலிடத்தாலை வாறதாலை பழக்கவழக்கச் சீர்கேடுகளும் இருக்கெண்டும் கதையள் அடிபடுகுது? ஒரே பாடம் ஒரே சோதினை அதுக்குள்ளைதான் இதுவும்..எண்டு சுதன் சொல்லிச்சுது.


அப்பிடியெண்டால் பொல்லைக் குடுத்து அடிவாங்கிறதுக்கு வசதியாய் மோத கத்தைக் கொழுக்கட்டையாய் பிடிக்கப் போறம் எண்டுறியள்போலை? எண்டு போட்டு எழும்பி வந்திட்டன். ■

# மருந்தை விட தொற்றே சிறந்தது...!

## தவறான தகவல்களை நீக்கும் பேஸ்புக்..!

பேஸ்புக் மற்றும் இன்ஸ்டாகிராம் பக்கங்களில் கோவிட்-19 தொற்று மற்றும் அதற்கான தடுப்பு மருந்துகள் குறித்து தவறாகப் பரப்பப்படும் தகவல்களை நீக்குவதற்கான முயற்சிகளை அதிகரித்துள்ளதாக பேஸ்புக் நிர்வாகம் அறிவித்துள்ளது.

கோவிட்-19 மனிதர்களால் உருவாக்கப்பட்டது, தடுப்பு மருந்துகள் சரியாக வேலை செய்வதில்லை, அது ஆபத்தானது, ஆட்டிஸம் உள்ளிட்ட நோய்கள் வரும், தடுப்பு மருந்தைவிட கோவிட்-19 தொற்று வருவதே சிறந்தது என்பன உள்ளிட்ட பல வகையான விடயங்களை நீக்கப்போவதாக அறிவித்துள்ளது.




உலக சுகாதார மையம் உள்ளிட்ட பல்வேறு அமைப்புகளுடன் கலந்தாலோசித்த பிறகு இந்த முடிவு எடுக்கப்பட்டதாக பேஸ்புக் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது. அத்துடன் தடுப்பூசியின் மீது நம்பிக்கை கொண்டு வருவது முக்கியம். எனவே, கோவிட்-19 தடுப்பு மருந்துகள் பற்றிய துல்லியமான தகவல்களைப் பொது சுகாதார அமைப்புகள் பகிர ஏதுவாக உலகின் மிகப்பெரிய பரப்புரையை நாங்கள் தொடங்குகிறோம். இதன் மூலம் தடுப்பூசி எடுத்துக்கொள்ள மக்களை ஊக்குவிக்கிறோம் என்றும் பேஸ்புக் நிர்வாகம் தெரிவித்துள்ளது.

அமெரிக்காவில் பேஸ்புக் தளத்தில், கோவிட்-19 தகவல் பக்கத்தில், தடுப்பூசிக்கு யார் தகுதி பெற்றவர்கள் என்பதற்கான இணைப்புகள் தரப்படவுள்ளன. மேலும், தகவல்கள் வர வர இந்தப் பக்கம் மற்ற நாடுகளிலும் அறிமுகப்படுத்தப்படும் என்று பேஸ்புக் நிர்வாகம் கூறியுள்ளது. அதே நேரம் விரைவில் பேஸ்புக்கின் இணைந்த செயலியான இன்ஸ்டாகிராமிலும் இந்தத் தகவல் பக்கம் அறிமுகப்படுத்தப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



# பாலைவனத்து ஊற்றடி நீ எனக்கு!

07

● கலியுக பித்தன்

**இளசுகளைக் கிறங்க வைக்கும் காதல் தொடர்**

"எது பேசிறென்டாலும் பாத்து பேசோனும் ரித்து" கோபத்தின் உச்சத்தில் வருண் இரைந்தான்.

ரித்துவின் கன்னம் சிவந்து கண்ணிலிருந்து கண்ணீர் கொட்டியது. மற்ற மூன்று பேருக்கும் அதிர்ச்சியில் உடம்பெங்கும் வியர்வை முளைவிடத் தொடங்கிற்று. வருண் எதுவும் பேசாமல் இறுகிய முகத்தோடு வேகமாக வெளியேறினான்.

"டேய் வருண்... வருண்... நில்லுடா " ஜெனி பின்னாலயே போக கார்த்திக்கும் ஜெயும், ஜெனியை தொடர்ந்து சென்றனர். ரித்து அசையாமல் இருந்து அழுது கொண்டே இருந்தாள்.

அப்போதுதான் தூக்கம் கலைந்து விழித்து கொண்ட வரதராஜன், சத்தம் கேட்டு வெளியில் வந்தார். அழுத முகத்தோடு நொந்து போயிருந்த ரித்துவை பார்த்து "என்னாச்சுமா? ஏன் அழுகிறாய்? மத்தவங்க எங்கடா?" எதுவுமே புரியாமல் வினவினார். ரித்து அழுகையோடு நடந்தவை எல்லாத்தையும் கொட்டி முடித்தாள்.

ஒரு நீண்ட மூச்சை எடுத்த பின் பேச்சைத் தொடங்கினார். "ரித்து அவன் உன்னை எதுக்கு அடிச்சவன் என்டு தெரியேல.. ஆனால் நீ அவனை பத்தி கொஞ்சம் தெரிஞ்சு கொள்ள வேணும்மா"

"இதுக்கு மேல அவனை பத்தி தெரிஞ்சு நான் என்னத்தை பண்ண போறன் அங்கிள். விடுங்க எல்லாம் போதும்." எதையோ தொலைத்தவள் போல் பதிலளித்தாள்.

"தெரிஞ்சோ தெரியாமலோ அவனில ஆசைப்பட்டுட்டா... அதை அவனிட்ட சொல்லியும் போட்டாய்..."

"அதுக்கு..." சொல்லி முடிப்பதற்குள் குறுக்கிட்டாள் .

"அவன்ட இறந்த காலம் பத்தி நீ கட்டாயம் தெரிஞ்சு வைச்சிருக்க வேணும்" பெருமூச்சோட சொல்லி முடித்து மீண்டும் தொடங்கினார்.

"வருண் என்னோட சொந்த மகன் இல்லை... நான் அவனுக்கு அப்பாவும் இல்லை" சொல்லும் போதே அழுகை அவரை அணைத்து கொண்டது.

அகன்ற கயல்விழிகளை மேலும் விரித்து அதிர்ச்சியோடு சிலையானாள் ரித்து எனும் ஐந்தடி பதுமை. மேலும் அவர் தொடர சுருங்கா விழிகளோடு அவருடைய வார்த்தைகளுக்காய் ஏக்கத்தோடு நின்றாள்.

"வருணோட அப்பா, அம்மா ரெண்டு பேரும் காதலிச்சுதான் கல்யாணம் பண்ணினவங்க. ஆனால் காதலிச்சவங்கள கல்யாணம் பண்ணேல." ஏக்கத்தோட சொன்னார்.

"என்ன சொல்லுறீங்க? எனக்கு புரியேல" குழப்பத்தோட கேட்டாள்.

"ஆமாம்மா, அவங்க ரெண்டு பேரும் கல்யாணத்துக்கு முதல், வேற வேற ஆட்களை காதலிச்சவங்க. வீட்டுக்காரரின்ட கட்டாயத்தாலையும், ஊரோட கட்டுப்பாட்டாலையும் இவங்க ரெண்டு பேரும் விரும்பியோ விரும்பாமலோ கல்யணம் கட்டிட்டாங்க." வார்த்தைகள் தட்டு தடுமாறி வந்து கொண்டிருந்தது.

"கல்யாணம் கட்டி ஆறே மாசத்துல வருணோட அப்பா, அவனோட அம்மாவை விட்டுட்டு ஏற்கனவே காதலிச்சவளை கல்யாணம் கட்டிக்கொண்டு வேற ஊருக்குப் போட்டார். அப்போ வருண் மூனு மாச கருவா தாயோட வயித்துல இருந்தான். போனவர் அதுக்கு பிறகு திரும்பி வரவும் இல்லை, இவங்கள் அவரை தேடவும் இல்லை."

"நாளாக நாளாக வருணோட அம்மா சரியா கஷ்டப்பட்டு கொண்டு இருந்தாங்க. தற்கொலை செய்யவும் ரெண்டு தடவை முயற்சி பண்ணினாங்க. ஆனாத் தப்பிட்டாங்க. கடைசியா வருண் வயித்துல இருக்கிறான் என்டுறதால எல்லா கஷ்டத்தையும் சமாளிச்சு வாழ்ந்துகொண்டிருந்தாங்க..." வார்த்தைகளைவிட அவருக்கு கண்ணீர் வேகமா வந்தது.

"ஒரு மாதிரி வருண் பிறந்ததும் அவனோட அம்மா கொஞ்சம் நிம்மதியா இருந்தா.. அவனை பார்த்து பார்த்து தன்னோட கஷ்டங்களை துரத்த ஆரம்பிச்சா. அவ்வளவு நாளும் நரகமா தெரிஞ்ச அவங்களோட வாழ்க்கை இப்போ அழகா தெரிய ஆரம்பிச்சிச்சு. கால் வயிறு, அரை வயிறு சாப்பிட்டாலும் அந்த குழந்தையோட சிரிப்பில வயிறை நிறைச்சிக்கிட்டா" மெதுவா கண்ணை துடைத்து கொண்டார்.

"இந்தா பாருமா! கடவுள் கடவுள்னு ஒருத்தன் இருக்கானே, அவன் படு பாதகன்மா.. மனுஷர் எப்ப சந்தோஷமா இருந்தாலும் பொறுக்காது அவனுக்கு... கஸ்டத்தை குடுத்து வேடிக்கை பார்ப்பான்மா... வேடிக்கை பார்ப்பான் ..." விரக்தி கலந்த தொனியில் சற்று உணர்ச்சி வசப்பட்டு சொன்னார்.

தொடர்ந்து சொன்னார்.

"அப்போ வருணுக்கு ரெண்டு வயசிருக்கும். வருணோட அம்மா, வெளியூரில இருக்கிற முன்னாள் காதலனை பாக்கோனுமென்டு வர சொன்னாள்" இடையிலையே நிறுத்தினார்.

"அவர் கல்யாணம் பண்ணேலையா.."

மெதுவா கேட்டாள் ரித்து.

"இல்லை மா, அவர் பண்ணேல... " ஒரு வரியில் சொல்லி முடிக்க

"பிறகு என்ன நடந்தது? அவர் போனாரா? அவங்கள எதுக்கு பாக்கோனுமென்டா?" ஆவலோடு கேட்டாள் ரித்து.

"அவங்க வர சொன்னதும் ஓடோடி போனாரு. அவரோட சீதை அங்க சீரழிஞ்சு போயிருந்தாள். வாராத தலைமுடி, துவைக்காத சேலை, லேசாக கழுவப்பட்ட முகம், பெரும்பாலும் முகம் கண்ணீரால் தான் கழுவப்பட்டிருக்கும் போல... தான் உயிருக்குயிராய் காதலித்த பொண்ணை இந்த நிலைமைல பாக்கிற கொடுமை வேற யாருக்கும் வர கூடாது மா... அவளை பார்த்ததும் கதறி அழ ஆரம்பிச் சிட்டாரு." சொல்லிக் கொண்டே கதி ரையில் இருந்து எழுந்து யன்னல் பக்கமாக மெதுவா நடந்தார்.

மீண்டும் தொடர்ந்தார்.

"இவர் அழுதிட்டு இருக்க, அவங்க பேச தொடங்கிணாங்க. எதுக்கு அழுறீங்க.... எல்லாம் முடிஞ்சு போச்சு. இப்போ நான் உங்கள வரச் சொன்னது எனக்காகவோ, உங்களுக்காகவோ இல்லை. எனக்கு மூளைல கான்சர். கடைசி கட்டத்துல இருக்கேன். இன்னும் ஒரு மாசம் தான் நான் உயிரோட இருப்பன் என்டு டொக்டர் சொல்லிட்டார். நான் போனதுக்கு பிறகு என் குழந்தை அநாதை ஆயிடும். எனக்காக எவ்வளவோ பண்ணி இருக்கீங்க. கடைசியா ஒரே ஒரு உதவி... என் பிள்ளையை இப்பவே நீங்க எடுத்துட்டு போயிடுங்க... அவனை உங்க பிள்ளை மாதிரி பாத்துங்கோங்க ப்ளீஸ்.." சொல்லி அவர் கால்களில் விழுந்து கத்திஅழ ஆரம்பிச்சிட்டாங்க" இந்த தடவை வரதராஜன் அவரையும் மீறி கதறி அழ ஆரம்பித்து விட்டார். அவருக்கு எப்படி ஆறுதல் சொல்வதென்று ரித்துவுக்கு தெரியவில்லை.



"அங்கிள் கூல்டவுண்.. கூல்டவுண்... இதுல இருங்க..." கதிரையை எடுத்து போட்டு அவரை உட்கார வைத்தாள். போத்தலில் இருந்த தண்ணீரை குடிப்பதற்காக திறந்து கொடுத்தாள். இப்போது அவர் கொஞ்சம் சுதாகரித்து கொண்டார்.

பதினைந்து நிமிஷம் அமைதியாவே அங்கே அமைதி நிலவி இருந்தது.

"பிறகு என்னாச்சு அங்கிள்" தயக்கத்தோட கேட்டாள் ரித்து.

"அவங்க சொன்னதுக்காக இவ்வளவு காலமும் வெளியூர்ல இருந்தவர். கூப்பிட்டதுக்காக ஓடி வந்தவர். அதே மாதிரி இப்பவும் அவங்க சொன்னதால அந்த பிள்ளையை அதான் வருணை தூக்கிட்டு கொண்டு வந்துட்டார். " அண்ணாந்து பார்த்து சொல்லி கொண்டே அழுகையை தொண்டைக்குள்ளே விழுங்கினார்.

"இப்போ வருண் எப்டி உங்களிட்ட வந்தான்?" ரித்து புரியாமல் கேட்டாள்.

"அவங்க வருணை கொடுத்ததே என்னட்டதானே " தொண்டைக்குள் விழுங்கிய அழுகை கண் வழியே கண்ணீராய் வந்தது.

"என்ன சொல்றீங்க?" அதிர்ச்சியோட கேட்டாள்.

"ஆமா, அவங்களோட முன்னாள் காதலன் வேற யாருமில்லை நான் தான்மா.. இந்த பாலைவனத்துல ஊறின ஊற்று மா அவள்... என் உயிர் காதலி..!" சத்தமாக சொல்லி திரும்ப கத்தி அழ தொடங்கினார் வரதராஜன்.

(தொடரும்)

# "ரபீட் வெர்மெல்ஹோ" என்கிற "சிவப்புத் திரை"




புரட்சித் தலைவர் எம்.ஜீ.ஆர். ஆகட்டும், நடிகர் திலகம் சிவாஜி கணேசனாகட்டும் இப்போதிருக்கின்ற ரஜினி, கமல், விஜய், அஜித் ஆகட்டும் சினிமாவில் கொடிகட்டிப் பறப்பவர்கள் காலம்தோறும் மாறிக்கொண்டேயிருக்கிறார்கள். ஒரு காலத்தில் பிரபல்யம் பெற்றிருப்பவர் சில காலங்களில் கைவிடப்படுகிறார் அல்லது பின் தள்ளப்படுகிறார். பின்னர் புதியவர் பிரபலமாகிறார். காலம்போகிற போக்கில் இவையும் நடக்கின்றன.

எம்.ஜி.ஆர்., சிவாஜியின் காலம் போய் அஜித், விஜய்யின் காலம் வந்திருப்பதுபோல. இப்போதெல்லாம் திரையரங்குகளை நிறைப்பதும் இவர்களின் படங்கள்தானே...? சிவாஜியினதோ, எம்.ஜி.ஆரினதோ அல்லவே...! ஆனால், இந்தக் கால மாற்றமானது பழைய நட்சத்திரங்களின் இரசிகர்களை மாற்றிப் போடுவதில்லை. அவர்கள் இப்போதும் எம்.ஜீ.ஆர், சிவாஜியின் பெரும் இரசிகர்களாகவே இருப்பார்கள். அந்த நடிகர்களின் படங்கள் எங்கெல்லாம் திரையிடப்படுகின்றனவோ அங்கெல்லாம் இவர்களைக் காணமுடியும். வீட்டுக்கு வீடு தொலைக்காட்சிப் பெட்டிகள் வருவதற்குச் சற்று முந்தைய காலத்தில் இந்த நிலையை அதிகம் கண்டிருக்க முடியும். இந்தப் படங்களைப் பார்ப்பதற்காகத் தேடியலைந்த கதை பழையவர்கள் பலரிடம் உண்டு. அவர் தம் அனுபவங்கள் அலாதியானவை. திரைக் கதாநாயகர்களைத் தமது மனதில் ஆதர்ச மனிதர்களாக நிலை நிறுத்திய இவ்வாறானவர்கள் இன்றைக்கும் நம் மத்தியில் இருக்கின்றனர். அத்தகு திரைக் கதை ஒன்றுதான் சிவப்புக் கம்பளம் எனப்படுகின்ற இந்தப் படத்தினுடையதும். "ரெட் காப்பெற்" என்று ஆங்கிலத்தில் மொழி மாற்றம் செய்யப்பட்டாலும் பிறேசில் நாட்டில் உருவான படமான இதன் தலைப்பு "ரபீட் வெர்மெல்ஹோ" என்பதே.

**கதை**

தனது மகனின் பிறந்த நாளையொட்டித் தனக்குப் பிடித்த மஸரோபி என்ற புகழ்பெற்ற பிறேசில் நடிகனின் படத்துக்கு தனது மகன், மனைவியை அழைத்துச் சென்று காட்டுவதாக வாக்குறுதி அளிக்கிறார் மலைப்பிரதேசத்தில் வள்ளிக்கிழங்குகளைப் பயிரிட்டு வாழும் விவசாயியான குயின்சின்ஹோ.

"என்னது சினிமாவுக்கா. மாடு கன்றுகளை விட்டுட்டு எப்படி வாறது?" என்று கோபப்படும் மனைவி பின்னர் அயலிலுள்ள பெண்களிடம் சொல்லிவிட்டு அவனுடன் புறப்படுகிறாள். சில நாள்கள் சமைத்துச் சாப்பிட ஏதுவாகப் பண்டங்கள் பாத்திரங்கள் உள்ளிட்டவற்றை ஒரு கழுதையில் பொதிகளாகக் கட்டி ஏற்றிக்கொண்டு மலைப்பாதை இறக்கத்தில் ஒற்றையடிப் பாதையில் செல்லும் விவசாயியின் குடும்பம் வழியிலேயே தெரிந்த பண்ணை வீட்டில் இரவைக் கழிக்கிறது. இரவில் அக்கிராமவாசிகளுடன் கிதார் வாசித்து ஆடிப் பாடி மகிழ்ந்துவிட்டு உண்டு, உறங்கிய பிறகு, மறுநாள் காலையில் வான் ஒன்றில் தமது கழுதையையும் பொருள்களையும் ஏற்றிக்கொண்டு மலையடிவார நகரத்திற்குச் செல்கிறார்கள்.

அங்கிருந்து அவர்களது பயணம் கால்நடையாகவும் பார வண்டிகளின் உதவியோடும் நகர்கிறது. அவர்கள் விரும்பியபடி மஸரோபி என்ற தங்கள் அபிமான நடிகனின் படத்தைத் திரையரங்கில் பார்த்தார்களா? இல்லை, படம் பார்க்க வெளிக்கிட்டவர்களின் கதை வெறும் அலைச்சலோடு முடிந்ததா? என்பதுதான் படத்தின் கதை. இந்தப் படம் முடிவில் பார்வையாளர்களுக்கு மிகப்பெரிய பாடமே எடுத்துவிடுகிறது. அது மிக மிகச் சுவாரஸ்யமான பாடமாக இருப்பதுதான் இந்தப் படத்தின் பலம்.




**நீளும் பயணமும் வாழ்வியலும்**

மலைக்கிராம வாழ்க்கையின் நடைமுறைகள், பண்பாடுகள், நம்பிக்கைகள் போன்றவை மிகவும் அழகாகக் காட்டப்பட்டுள்ளன. மலை அடிவாரத்தில் தென்படும் நகரங்கள், நெடுஞ்சாலைகள் புதிய பாதைகள் பழமை வாய்ந்த நகரங்கள் எனப் பயணம் நீள்கிறது. பழைய சினிமா இரசனை என்ற கதைக் களத்தைக் கையில் எடுத்து அப்பாவி ரசிகனின் மனநிலை, வாழ்நிலை, ஆசை, விருப்பங்கள் மூலம் அவனது பயணத்தில் இன்றைய பிறேசிலை நம் கண்முன் நிறுத்துவது இலகுவானதல்ல.

தனது அபிமான நடிகனின் படம் பார்க்கச் செல்லும் பயணத்தில் இப்படத்தின் நாயகனும் அவனது மனைவியும் மகனும் எதிர்கொள்ளும் பல்வேறு அனுபவங்கள் இன்றைய வாழ்க்கையின் புதிய போக்குகளையும் முன்பின் தெரியாத நகரத்தில் என்னவெல்லாம் நடக்கும் என்பதையும் மிக அருமையாகக் காட்டிச் செல்கின்றன. குயின்சின்ஹோ குடும்பம் நவீன சந்தை ஒன்றுக்குள் நுழையும்போது அந்தக் கடையில் வேலை செய்பவர் "என்ன பந்தயம் மிஸரோபி படத்தை உங்களால் பார்க்கமுடியாது, வேண்டுமானால் எங்கள் கடையில் உள்ள தொலைக்காட்சியை வாங்கிச் செல்லுங்கள் அதைவிட நல்ல படங்களைப் பார்க்கலாம்" என்று சவால் விடுகிறார். அவரிடம் சண்டை போட்டுக்கொண்டு அவர்கள் அங்கிருந்து வெளியேறிவிடுவார்கள்.

பொழுதுபோக்கு மையங்களாகத் திகழ்ந்த திரையரங்குகளின் இன்றைய நிலையை ஒரு ஆய்வுக்கட்டுரையில் பயன்படுத்த வேண்டிய அத்தனை தரவுகளையும் இத்திரைப்படம் உள்ளடக்கி வைத்துள்ளது. படம் பார்க்கச் சென்று முடிவில் ஏமாற்றமே மிஞ்சினாலும், மஸரோபி ஷொப் என்ற பெயரில் ஒரு கடையைப் பார்த்ததும் சற்றே குயின்சின்ஹோவின் மனம் ஆறுதலடைகிறது.



மஸரோபியின் படத்தைக் காட்டுவதாகக் கூறி அழைத்து வந்துள்ள பயணத்தைப் பற்றி ஒரு கடைக்காரருக்குச் சொல்லி "இந்நகரில் தியேட்டர் ஏதாவது உள்ளதா?" என்று கேட்பான். "இரண்டு தியேட்டர்கள் உள்ளன. ஆனால், அங்கு புதிய படங்கள்தான் போடுவார்கள், பழைய நடிகரான மஸரோபியின் சிறந்த ரசிகர்கள் ஒன்றாகச் சங்கமிக்கும் ஒரு இடம் இந்த வீதியின் கடைசியில் உள்ள மதுபான விடுதியாகும். அங்கு அவர்கள் கிற்றார் இசைத்தபடி அவரது நினைவுகளை ஆளாளுக்குப் பகிர்ந்துகொள்வார்கள். நீங்கள் சென்று விசாரித்தால் ஏதாவது வழி கிடைக்கும்" என்று கூறுவதோடு, பழைய படங்கள் ஞாயிறு தோறும் மதியம் திரையிடும் ஒரு தேவாலயத்தையும் அக்கடைக்காரர் அவனுக்கு அடையாளம் காட்டி வழிசொல்லி அனுப்புவார்.

அவர் கூறியபடி அங்கு சென்றாலும் கிற்றார் இசையில் மயங்கிவாறு தன்னைப் பற்றி பேச ஆரம்பிப்பான். அதற்குள் நாட்டின் புகழ்பெற்ற கிற்றார் இசைக்கலைஞன் கடைக்குள் நுழைய அவனைப் பார்த்துவிட்ட மகிழ்வில் எல்லாவற்றையும் மறந்துவிடுவான். அவன் பின்னாலேயேபோக அவன் போகுமிடம் மயானம் என்பதை அறிந்து அங்கிருந்து ஓட்டமெடுப்பான் தனது மனைவி, குழந்தைகளைத் தேடி. தேவாலயம் ஒன்றின் அருகே இரவு உறங்கியவர்களை ஒரு குடும்பம் அழைத்துச் சிற்றுண்டி வழங்குவார்கள். அவர்கள் பேச்சுவாக்கில் இங்கு இறந்துபோன பழைய கிற்றார் இசைக்கலைஞன் ஆவி சுற்றுகிறது எனக் கேட்டு குயின்சின்ஹோவின் உடல் நடுங்கத் தொடங்கும். இவ்வாறாக இந்தப் படத்தில் சினிமா ரசனையை அழுத்தமாகச் சொன்ன அளவுக்குக் கிற்றார் இசை இரசனையும் சொல்லப்பட்டுள்ளது. அதேநேரம் அந்தப் பகுதி மக்களிடையே கடவுள் நம்பிக்கையும் பேய்கள் உள்ளிட்ட பல்வேறு பில்லி, சூனியத்தை நம்பும் பழக்கமும் இருப்பதுவும் காட்டப்படுகிறது. மலைக் கிராமம், பெருநகர வாழ்க்கை என்றெல்லாம் நகரும் இப்படத்தில் நாட்டின் நலிவுற்ற நிலமற்ற தொழிலாளர்களின் கோரிக்கைகளும் அவர்களது போராட்டங்களும்கூட ஆங்காங்கே தலைகாட்டுகின்றன.

படத்தைத் தேடி ஏமாந்துவிட்ட குயின்சின்ஹோ வெறித்துப்போய் பார்த்துக்கொண்டிருக்கும்போது பொலிஸ் அதிகாரிகள் துப்பாக்கிச்சூடு நடத்துகிறார்கள். பார வண்டிச் சாரதி உயிரிழக்கிறான். இதனால் குயின்சின்ஹோ வெகுண்டு ஆர்ப்பாட்டம் செய்யப் பொலிஸ் அவரைப் பிடித்துச் செல்கிறது. கலவரத்தின் போது பொலிஸார் துரத்த மகன் காணாமல் போகிறான். மனைவி தனது அத்தை வீட்டுக்குச் சென்றுவிடுகிறாள்.

இப்படத்தில் மஸரோபியின் வெறிபிடித்த ரசிகனாகத் தோன்றி அவனது புகழை வழியெங்கும் பேசிக்கொண்டு செல்லும் நாயகனாக நடித்த ஜாக்ஸன் ஆன்டியூனெஸ் நடிப்புத்தான் படத்தின் ஆதார சுருதி. பொலிஸாரால் பிடிக்கப்பட்ட நாயகனை நீதிபதி விடுவித்துவிடுகிறார். வெளியே வந்தபிறகு மகனைத் தேடி எங்கெங்கோ அலைகிற காட்சியில் பார்வையாளர்களின் இதயத்தைப் பிழிந்துவிடுகிறார்.

# சித்திரமே கதை பேசு! 4

■ ப்ராடி

சித்திரக் கதைகளில் நாவல்கள் போலவே பல்வேறு வகைகள் உள்ளன. கதைகளின் அடிப்படையில் அவற்றையும் சில முக்கியமான தலைப்புகளுக்குள் அடக்கிவிடலாம் என்றாலும் சில வகைகள் கலந்தோ அல்லது எந்த வகைக்குள்ளும் அடங்காமலோகூட சில காமிக்ஸ் படைப்புகள் தனித்துத் தெரிவதுமுண்டு.

திரைப்படங்கள் போன்று கதாநாயகர், நாயகிகளை முதன்மைப்படுத்தி உருவாக்கப்படும் கதைகள், அற்புத ஆற்றல்பெற்ற சூப்பர் ஹீரோக்களின் சாகசங்கள், துப்பறியும் தொடர்கள், விஞ்ஞானப்



ஒரு தொகுதி ஐரோப்பிய சித்திரக்கதை கதாபாத்திரங்கள்

புனைகதைகள், திகில் படைப்புகள், நகைச்சுவைக் கலாட்டாக்கள், வரலாற்றுப் பதிவுகள், சிறுவர் கதைகள், காதல், போர் இலக்கியங்கள் என்று சித்திரக் கதைகளை வரையறுத்துக்கொண்டு செல்லலாம்.

கதைகளோடு ஓவியங்களும் இவற்றில் முக்கிய இடத்தை வகிப்பதால் சில கதைகளின் கட்டமைப்பே விசித்திரமாகிவிடும். துப்பறியும் தொடர் ஒன்று அல்லது வரலாற்றுப் புதினமொன்றுக்கான சித்திரங்கள் கார்ட்டூன் பாணியில் வரையப்படும்போது அது புதியதொரு பரிமாணத்துக்குள் நுழைந்து வாசகர்களை வியப்பிலாழ்த்துகிறது.

**Green Manor** என்றதொரு சித்திரத் தொடரின் ஓவியங்களைப் பாருங்கள்.





இவை கனதியான கதைக் களத்தைக் கொண்டவை. ஆனால், அவற்றுக்கு வரையப்பட்டுள்ள சித்திரங்கள் கார்ட்டூன் பாணியில் வரையப்பட்டுள்ளன. இந்த இரண்டு துருவங்களும் இணையும்போது வாசகர்களுக்கு ஓர் அற்புத வாசிப்பனுபவம் கிடைக்கிறது.

இப்படியான 'கலவை வடிவ'த்தை இரசிக்காத அல்லது ஜீரணிக்க முடியாத வாசகர்களும் இருக்கக்கூடும்தான்! ஆனாலும், இவை போன்ற வித்தியாச முயற்சிகள்தான் சித்திரக் கதை உலகை சுவாரஸ்யப்படுத்துகின்றன.

ஒரே கருவை மையப்படுத்திய கதைத்தொடர்களுக்கு வேறு வேறான பாணிகளில் சித்திரங்கள் வரையப்படுவதுமுண்டு. இது ஓவியர்கள் மாறுவதால் மட்டும் நடப்பதில்லை கதைகளை வெளியிடும் நிறுவனங்கள், வெளியாகும் நாடுகள், கதாசிரியர்கள் வேறுபடும்போதுகூட இப்படியான 'ஓவிய அதிரடிகள்' அரங்கேறும்.

பாற் மன் (**BAT MAN**) என்கிற வௌவால் மனிதனை மையப்படுத்தி உருவாக்கப்பட்ட கதைகளுக்கு வரையப்பட்டுள்ள வேறு வேறான பாணியிலான சித்திரங்களைப் பாருங்கள்.



சில சந்தர்ப்பங்களில் ஓவியங்கள் மட்டும் மாற்றமடைவதில்லை - மாறாக, கதை சொல்லும் பாணியே மாற்றமடைந்துவிடும். இந்த மாற்றங்கள் சித்திரக் கதை வாசகர்களுக்கு விறுவிறுப்பைக் கூட்டி விடும்.

இதே பாற் மான் (**BAT MAN**) இன் கதைகள் திரைப்படங்களான போது லெஸ்லி எச்.மார்டிசன், ரிம் புருட்டன், ஜேயெல் கிறிஸ்தோபர் நோலன் (**Leslie H. Martinson, Tim Burton, Joel Schumacher, Christopher Nolan**) என்று ஒவ்வொரு இயக்குனரும் தனது பாணியில் அவற்றை உருவாக்கியதுபோன்றுதான் சித்திரக்கதைகளும் காலத்துக்குக் காலம் மாற்றமடைந்துகொண்டே வருகின்றன! ■

## அழகே கவனம்!


அழகை விரும்பாதவர்கள், ஆராதிக்காதவர்கள் யார் இருக்கிறார்கள்? ஸ்கொட்லாண்ட் நாட்டைச் சேர்ந்தவரான லூரன் ரென்னிக்கும் தன் பளபளக்கும் வெள்ளை நிறத்தைப் பொன்னிறமாக்கிப் பார்க்கவேண்டும் என்பது ஆசை. அதற்காக மஞ்சள், தேன், பாதாம் எண்ணெய், கடலை மா, புத்துணர்வுக் களிம்பு போன்றவற்றைக் கலக்கி வீட்டிலேயே ஒரு முகப்பூச்சு தயாரித்து தினம்தோறும் பயன்படுத்தி வந்துள்ளார்.

தோலில் காணப்படும் வெடிப்புக்கள் நீங்கி, பளபளப்பும் பொன் நிறப் பொலிவும் கிடைக்கும் என்கிற விருப்பில் அவர் இதனைச் செய்து வந்துள்ளார். டிக்டாக் செயலிப் பிரபலம் வேறு அவர். இந்தக் கலவையை அவர் தொடர்ந்து பயன்படுத்தி வந்ததை அடுத்து அவரது முகத்தில் கலவை பூசப்பட்ட இடம் முழுவதும் பொன்னிறமாவதற்குப் பதிலாக மஞ்சள் நிறமாகவே மாறிவிட்டது. டிக்டாக்கில் அந்தப் படங்களையும் பதிவேற்றியுள்ளார் அவர்.

அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சுதான் என்று இதைத்தான் சொல்வார்களோ!



# லெமூரியா



## ஒரு கற்பனை வாதம்

தற்போதைய தமிழக நிலப்பரப்பிற்கு தெற்கே லெமூரியா கண்டம் என்ற ஒன்று இருந்ததாகவும் அங்கு தமிழர்கள் வாழ்ந்தார்கள் எனவும் நீங்கள் ஏதாவது நூலிலோ, செய்தியிலோ, இணையதளத்திலோ குறைந்தது ஒரு முறையாவது படித்திருப்பீர்கள். இணையத்தில் இது பற்றிய காணொளிகளும் ஏராளம்.

ஆனால் லெமூரியா கண்டம் என்ற ஒன்று உண்மையாகவே இருந்ததா என்றால் அந்தக் கேள்விக்கான பதில் 'இல்லை' என்பதுதான்.

மொரிஷியஸ் தீவுகளைச் சுற்றியுள்ள பகுதிகளில், இந்தியப் பெருங் கடலுக்குள் புதைந்திருக்கும் குறுங்கண்டம் ஒன்றுக்கு 'மொரிஷியா' என்று அறிவியலாளர்கள் பெயரிட்டிருக்கிறார்கள். 2013இல் கண்டுபிடிக்கப்பட்டது இது.

உண்மையைக் கலந்து சொன்னால் நம்பகத்தன்மை கிடைக்கும் எனும் நம்பிக்கையில், இந்த கண்டம்தான் லெமூரியா கண்டம் என்றும் சிலர் கூறி வருகிறார்கள்.

ஆனால், அது உண்மையல்ல. மனித குலத்தின் வரலாறு தொடங்கும் முன்னரே, இந்த நிலப்பரப்பு கடலுக்குள் மூழ்கி விட்டது. ஆனால் லெமூரியா கண்டத்தில் தமிழர்கள் வாழ்ந்தார்கள் என்று கூறப்படுவதால் மொரிஷியா லெமூரியாவாக இருக்க வாய்ப்பில்லை.

90 லட்சம் ஆண்டுகளுக்கு முன் நிகழ்ந்த எரிமலை வெடிப்பின்போது பூமிக்கு அடியில் இருந்த துகள்கள் மொரிஷியஸ் கடற்கரையில் கிடைத்தன. அந்தத் துகள்களில் செய்யப்பட்ட ஆய்வின் மூலம் மொரிஷியாவின் காலம் கண்டறியப்பட்டது. இதன் காலம் 200 கோடி முதல் 8.5 கோடி ஆண்டுகளுக்கு முன்பு வரை என்கிறது நேச்சுர் ஜியோசயின்ஸ் சஞ்சிகையில் 2013 பிப்ரவரியில் வெளியான கட்டுரை.

அப்படியானால் லெமூரியா கண்டம் எனும் கருத்தாக்கம் எப்படி உருவானது? அப்படி ஒரு கண்டமே இல்லை என்பதற்கு அறிவியல் ஆதாரங்கள் இருக்கின்றனவா? தமிழ் இலக்கியங்களில் உண்மையாகவே லெமூரியா கண்டம் பற்றிய குறிப்பு உள்ளதா?

**'லெமூரியா கண்டம்' என்ற ஒன்று இல்லை என்றும் முடிவு செய்த அறிவியல் உலகம் பிலிப் ஸ்கேட்லர் முன் வைத்த கருதுகோளை மறுதலித்தது.**

### லெமூரியா கண்டம் - 'கடலுக்குள் மூழ்கி அழிந்து விட்டது'


பத்தொன்பதாம் நூற்றாண்டில் வாழ்ந்த இங்கிலாந்தைச் சேர்ந்த விலங்கியலாளர் பிலிப் ஸ்கேட்லர் என்பவர் 'மடகாஸ்கரின் பாலூட்டிகள்' **(The Mammals of Madagascar)** என்ற தலைப்பில் கட்டுரை ஒன்றை வெளியிட்டார்.

அதில் 'லெமூர்' விலங்குகளின் படிமங்கள் இந்தியப் பெருங்கடலில் உள்ள தீவு நாடான மடகாஸ்கரிலும் இந்திய நிலப் பகுதிகளிலும் இருக்கின்றன. ஆனால் மடகாஸ்கர் ஓர் அங்கமாக இருக்கும் ஆபிரிக்க கண்டத்தின் பெருநிலப்பரப்பில் அந்தப் படிமங்கள் இல்லை. எனவே கடந்த காலங்களில் மடகாஸ்கர் மற்றும் இந்தியா ஆகிய இரண்டு நிலப்பரப்புகளையும் இணைத்த, ஒரு கண்டம் இருந்திருக்கலாம். அப்போது லெமூர் விலங்குகள் இரு பகுதிகளுக்கும் சென்று வந்திருக்கலாம் என்று கூறினார். லெமூர் விலங்குகள் வாழ்ந்ததால் அந்த கண்டத்தின் பெயர்தான் லெமூரியா என்றும் அது பின்னாளில் கடலுக்குள் மூழ்கி அழிந்துவிட்டது என்றும் பிலிப் ஸ்கேட்லர் தனது கட்டுரையில் குறிப்பிட்டிருந்தார்.

### அறிவியல் வளர்ச்சியால் வெளியான உண்மைகள்

பிலிப் ஸ்கேட்லர் இதை முன்வைத்தபோது ஏற்றுக் கொள்ளப்பட்ட இந்தக் கூற்று பிற்காலத்தில் அறிவியலாளர்களால் மறுக்கப்பட்டது.

பிலிப் ஸ்கேட்லர் 'லெமூரியா கண்டம்' என்ற ஒன்று இருந்ததாகக் கூறியபோது, இடையில் ஒரு நிலப்பரப்பு இருப்பதைத் தவிர, ஒரே விலங்கினம் கடலால் பிரிக்கப்பட்ட வெவ்வேறு நிலப்பரப்புகளில் வாழ்ந்திருப்பதற்கான வாய்ப்பு இல்லை என்றே கருதப்பட்டது. எனவே, அதை அறிவியல் உலகமும் ஏற்றுக்கொண்டது. புவிசார் அறிவியல் இப்போதுள்ள அளவிற்கு வளர்ச்சி அடையாத காலகட்டம் அது.




17ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த ஐரோப்பிய புவியியலாளர் ஆப்ரகாம் ஓர்டெலியஸ் என்பவர் கண்டங்கள் அனைத்தும் ஒன்றாக இருந்து அதன் பின்பு அவை நகர்ந்து வெவ்வேறு கண்டங்களாக உருவாகின எனும் கோட்பாட்டை முன்வைத்தார்.

ஒரு கண்டத்தின் வெளிப்புற வடிவம் இன்னொரு கண்டத்தின் வெளிப்புற வடிவத்துடன் பொருந்தும் வகையில் இருப்பதை அதற்கு அவர் சான்றாகக் குறிப்பிட்டிருந்தார்.. ஆனால், அவருக்குப் பின்னால் வந்த வெகு சில அறிவியலாளர்களைத் தவிர இதை யாரும் ஏற்றுக்கொள்ளவில்லை.

அதன் பின்பு இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் ஜெர்மானிய புவியியலாளர் ஆல்ஃப்ரெட் வெகேனர் கண்டப் பெயர்ச்சி **(Continental Drift)** கோட்பாட்டை முன்வைத்தார். அப்போது இதுவும் ஏற்றுக்கொள்ளப்படவில்லை என்றாலும் புவியத் தட்டுகள் **(tectonic plates)** நகர்தல் குறித்த கண்டுபிடிப்புகள் இதற்கு வலிமை சேர்ப்பதாகவும், அதை நிரூபணம் செய்யும் வகையிலும் அமைந்தன.

பல கோடி ஆண்டுகளுக்கு முன் தற்போது உள்ள அனைத்துக் கண்டங்களும் ஒரே நிலப்பரப்பாக இருந்தன என்றும் அதன் பின்பு, பூமியின் மேற்பரப்புக்கு அடியில் இருக்கும் புவியத் தட்டுகளின் நகர்தல் காரணமாக வெவ்வேறு கண்டங்கள் உருவானதும் பின்னாளில் நிரூபணமானது.

அவ்வாறு அனைத்து கண்டங்களும் ஒன்றாக இருந்த நிலப்பரப்பு, தற்போதைய தனித் தனிக் கண்டங்களாக உருவாகும் முன்னர் பலமுறை பிரிந்து பிரிந்து மீண்டும் இணைந்துள்ளன.

வெவ்வேறு காலத்தில் உருவான பெருங் கண்டங்கள் பான்கையா **(pangea)**, ரொடினியா **(rodinia)** என்று வெவ்வேறு பெயர்களுடன் அறிவியலார்களால் அழைக்கப்படுகின்றன.

சுமார் 75 கோடி (750 மில்லியன்) ஆண்டுகளுக்கு முன்பு ரொடினியா என்ற பெரும் கண்டங்களாக தற்போதைய உலகில் உள்ள ஒட்டுமொத்த நிலப்பரப்பும் இருந்தது.

ரொடினியாவில் இந்தியா மற்றும் மடகாஸ்கர் ஆகிய நிலப்பரப்புகள் அருகருகே இருந்துள்ளன என்றும் கருதப்படுகின்றது.

இவை இரண்டும் சுமார் 8.5 கோடி ஆண்டுகளுக்கு கண்டப் பெயர்ச்சி காரணமாகப் பிரியத் தொடங்கின. இதன் பின்னர்தான் இக்கட்டுரையின் தொடக்கத்தில் குறிப்பிடப்பட்டிருந்த 'மொரிஷியா' கடலுக்குள் மூழ்கத் தொடங்கியது.

புவியத் தட்டுகள் நகர்ந்து உண்டாக்கிய கண்டப் பெயர்ச்சி காரணமாகவே இந்தியா மற்றும் மடகாஸ்கர் இடையே இடைவெளி உண்டானது. அப்போது ஒரே நிலப்பரப்பாக இருந்தபோது வாழ்ந்த விலங்குகளின் படிமங்களே பின்னாளில் கிடைத்தன என்று தெரியவந்த பின், 'லெமூரியா கண்டம்' என்ற ஒன்று இல்லை என்றும் முடிவு செய்த அறிவியல் உலகம் பிலிப் ஸ்கேட்லர் முன்வைத்த கருதுகோளை மறுதலித்தது.

### குமரிக் கண்டம் - லெமூரியா கண்டம்

லெமூரியா கண்டம் குறித்த கருதுகோள் ஏற்றுக்கொள்ளப்பட்டு இருந்த காலத்தில் ஆசியா மற்றும் அமெரிக்க கண்டங்களில் ஒரே விலங்கினங்கள் வாழ்ந்ததற்கான சான்றுகள் கிடைத்தபின், இடையில் நிலப்பரப்பு இருந்தது என்று கருதிய சில அறிவியலறிஞர்கள் பசுபிக் பெருங்கடலின் சில பகுதிகளிலும் லெமூரியா கண்டம் நீண்டிருந்தது என்று கூறினர்.

இதன் பின்பு கடலுக்குள் மூழ்கிய கண்டங்களாக லெமூரியா மற்றும் அட்லாண்டிஸ் ஆகியவை உலக அளவில் பெயர் பெறத் தொடங்கின. இது குறித்த விரிவான கட்டுரை ஒன்று ஃப்ரண்ட்லைன் இதழில் புவிநீர் அமைப்பியலாளர் எஸ்.கிறிஸ்டோபர் ஜெயகரனால் 2011ஆம் ஆண்டு எழுதப்பட்டுள்ளது

லெமூரியா கண்டம் குறித்து மேற்குலகில் எழுதப்பட்ட கட்டுரைகள் மற்றும் வரைபடங்கள் 1941இல் கே.அப்பாதுரை என்பவர் எழுதிய 'குமரிக் கண்டம் அல்லது கடல்கொண்ட தென்னாடு' எனும் நூலில் பயன்படுத்தப்பட்டதாக அந்த கட்டுரையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ்ச் சங்க காலத்திலும், அதன் பின்னரும் எழுதப்பட்ட புறநானூறு, சிலப்பதிகாரம், கலித்தொகை உள்ளிட்டவற்றின் பாடல்களில் கடலில் மூழ்கிய சில நிலப்பரப்புகள் பற்றிய குறிப்பும் உள்ளன.

சங்கப் பாடல்களில் குறிப்பிடப்பட்டிருந்த மலைகள், ஆறுகள், ஊர்கள் உள்ளிட்டவற்றின் பெயர்கள் லெமூரியா கண்டத்தில் இருந்ததாக தமிழில் எழுதப்பட்டதாகவும் இந்த கட்டுரையில்

குறிப்பிட்டுள்ளார் கிறிஸ்டோபர் ஜெயகரன்.

அதாவது, உலகின் வெவ்வேறு பகுதியிலும் 'லெமூரியா' குறித்து தகவல், தங்கள் தங்கள் நிலப்பரப்புடன் தொடர்புடையதாக மாற்றப்பட்டதைப் போல, தமிழ் இலக்கியத்தில் குறிப்பிடப் பட்டிருந்த தகவல்களைத் தமிழர்கள் சிலர் லெமூரியாவுடன் பொருத்திக்கொண்டனர்.

பின்னாட்களில் வந்த நக்கீரர், நச்சினார்க்கினியர், அடியார்க்கு நல்லார் உள்ளிட்டவர்களின் எழுத்துகள் சிலப்பதிகாரம் மற்றும் கலித்தொகையில் கடலுக்குள் மூழ்கியதாக குறிப்பிடப்பட்டிருந்த நிலப்பரப்பை மிகைப்படுத்தி கூறியதாகவும் அவர்களின் கூற்றுப்படி குமரிக் கண்டத்தில் இருந்ததாக கூறப்படும் குமரி ஆறு மற்றும் பஃறுளியாறு ஆகியவற்றுக்கு இடையேயான தூரம் 770 கிலோ மீட்டர் என்றும் அந்த கட்டுரையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**குமரிக் கண்டம் எங்கே?**

லெமூரியா கண்டம் வேறு குமரிக் கண்டம் வேறுதான்; லெமூரியா கண்டம் என்பது ஒருவேளை பொய்யானதாக இருந்தாலும் பண்டைய இலக்கியங்களில் குறிப்பிடப்பட்டுள்ள குமரிக் கண்டம் என்பது உண்மைதான் என்று கூறும் ஒரு தரப்பினர் கடலில் மூழ்கிய நகரங்கள் குறித்து இலக்கியங்களில் கூறப்பட்டுள்ளவற்றை தங்கள் சான்றாக முன்வைக்கின்றனர்.

குமரிக் கண்டத்தில் 49 நாடுகள் இருந்ததாக கூறப்பட்டுள்ளது. ஆனால் வரலாற்றுக் காலத்தில் நாடு எனும் சொல் ஊர் எனும் பொருளில் பயன்படுத்தப்பட்டிருப்பதும், சில ஊர்கள் ஒன்று சேர்ந்தாலே நாடுகளாக இருந்துள்ளன என்பதும் கவனத்தில் கொள்ளப்படவேண்டும்.

அதுமட்டுமல்லாது உலகில் இருக்கும் பல்வேறு பகுதிகளைப் போலவே, இன்றைய இந்தியாவின் கடலோரப் பகுதிகளும் கடல் அரிப்பின் காரணமாக கடலுக்குள் மூழ்கியதற்கான அறிவியல் சான்றுகள் நிறைய கிடைத்துள்ளன. ஆனால் 'கண்டம்' என்று கூறப்படும் அளவுக்கு பெரிய நிலப்பரப்புதான் மூழ்கியது என்பதற்கான எந்த சான்றும் இல்லை.

நிலத்துக்கு அடியிலும் கடல் நீருக்கு அடியிலும் என்ன வெல்லாம் இருக்கிறது என்பதை செயற்கைக்கோளில் இருந்தபடியே படமெடுக்கும் தொழில்நுட்பம் வந்து பல ஆண்டுகள் ஆகின்றன. இப்போதுவரை கடலுக்கடியில் இருப்பதாகக் கூறப்படும் அந்தக் குமரிக் கண்டத்தின் படம் ஏதும் தென்னிந்திய கடல் பரப்பை ஒட்டிக் கிடைக்கவில்லை.

ஒருவேளை இனி அப்படி ஒரு நிலப்பரப்பு கண்டுபிடிக்கப்பட்டாலும், தமிழ் இலக்கியங்களில் கூறப்பட்டிருப்பதைப் போல மனித நாகரிகத்தின் வரலாற்றுக் காலத்துக்கு பிறகு கடலில் மூழ்கியதாக அது இருக்க வாய்ப்பில்லை. மொரிஷியா போல பல லட்சம் முதல் சில கோடி ஆண்டுகளுக்கு முந்தையதாகவே அது இருக்கும்.

நன்றி: பிபிசி தமிழ்

# போடப்பட்டது பிள்ளையார் சுழி!

## தழைத்தோங்குமா தமிழர் - முஸ்லிம்கள்

■ அகில்

பொத்துவில் முதல் பொலிகண்டி வரையான நீதிக்கான கவனவீர்ப்புப் பேரணி கடந்த 3ஆம் திகதி முதல் தொடங்கி 7 திகதி வரை இடம்பெற்றது. பெரும் வெற்றிகரமாக நடந்து முடிந்திருக்கிறது. தமிழ் பேசும் மக்களின் ஒற்றுமையைப் பறைசாற்றும் விதத்திலும் அது அமைந்திருந்தமை மற்றொரு சிறப்பு.

தமிழ் பேசும் மக்களை இலக்கு வைத்து, இலங்கை அரசு மேற்கொண்டு வரும் பாதகச் செயல்களைக் கண்டித்தும் வடக்கு, கிழக்கில் விரிவாக்கம் கண்டுள்ள தமிழின அழிப்புக்கு எதிராகவும் மனித உரிமை மீறல்களைக் கண்டித்தும் நீதி கோரியும் வடக்கு கிழக்கு பொது அமைப்புக்களால் இந்த அறவழிப் போராட்டத்திற்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான இரா. சாணாக்கியனின் சாணக்கியமும் எம்.ஏ.சுமந்திரனின் சூட்சுமமான காய் நகர்த்தல்களும் இந்த நீதிக்கான கவனவீர்ப்புப் பேரணியின் வெற்றிக்கு உந்து சக்திகளாக இருந்தன என்பதில் மாற்றுக்கருத்திருக்க முடியாது.

சிலர் இந்தப் பேரணியைக் கொச்சைப்படுத்தும் விதத்தில் கருத்துக்களை வெளியிட்டபோதும் பேரணி அரச உயர் மட்டங்களின் அடிவயிற்றில் புளியைக் கரைத்திருக்கிறது என்பதை வெளியாகும் அறிக்கைகள் வெளிப்படுத்துகின்றன.

பேரணி அதனது கனதியான தாக்கத்தை, பாதிப்பை கொழும்பு அரசியலில் இறக்கியிருப்பது ஒரு புறமிருக்க, தமிழ் முஸ்லிம் உறவை மீண்டும் கட்டியெழுப்பிவிட முடியும் என்கிற நம்பிக்கையையும் துளிர்விடச் செய்திருக்கிறது.

கிட்டத்தட்ட 30 ஆண்டுகளாகக் கூர்மைப்படுத்தப்பட்டு வந்த தமிழ் - முஸ்லிம் இனப் பிளவு நீண்ட காலத்திற்குப் பின்னர் அடைபடுவதற்கான வாய்ப்பை இந்தப் பேரணி ஏற்படுத்தியிருக்கிறது. பொத்துவிலில் தொடங்கிய பேரணிக்கு முஸ்லிம் பிரதேசங்களில் கிடைத்த வரவேற்பும் மிகையாகக் குறிப்பிடத்தக்கவை.

பொத்துவில், அட்டாளைச்சேனை, நிந்தவூர், கல்முனை, காத்தான்குடி, ஓட்டமாவடி மூதூர், கிண்ணியா, வவுனியா, மன்னார் போன்ற பகுதிகளில் முஸ்லிம்களும் பேரணியில் பங்குகொண்டு பேராதரவையும் எழுச்சியையும் காட்டினர். அரசமைப்பின் 20ஆவது திருத்தத்திற்கு வாக்களித்துவிட்டு கொழும்பில் "மௌன ராகம்" இசைத்துக்கொண்டிருப்போரின் நிலைக்கு ஆட இன்னும் முஸ்லிம்கள் தயாரில்லை என்பதையும் இதன் மூலம் மக்கள் எடுத்துச் சொல்லியுள்ளார்கள்.

தந்தை செல்வா காலத்தில் பூத்துக் குலுங்கிய தமிழ், முஸ்லிம் நல்லுறவு பின்னர் குறிப்பாகப் போர்க் காலத்தில் இடம்பெற்ற கசப்பான சம்பங்களால் பாதிப்படைந்தது. தமிழர்கள் முஸ்லிம்களையும் முஸ்லிம்கள் தமிழர்களையும் சந்தேகக் கண் கொண்டும் வெறுப்புணர்வுடனும் பார்க்கும் நிலை தோன்றியது.

குறிப்பாகக் கிழக்கில் பிட்டும் தேங்காய்ப் பூவும் போன்று வாழ்ந்தவர்கள் தமிழர்களும் முஸ்லிம்களும் என்று பெருமையாக மார்தட்டிக்கொண்ட காலங்கள் மறக்க முடியாதவை. இன்றும் அந்த உணர்வு இல்லாமலில்லை. ஆனாலும் அன்றைய அன்னியோன்னியத்தை இரு இனங்களும் இழந்தே நிற்கின்றன.

தமிழ் முஸ்லிம் மக்களிடையே தீர்க்கப்படவேண்டிய பல பிணக்குகள் இருக்கின்றன. அவை பேசித் தீர்க்கப்படக்கூடியவை. அந்தப் பிரச்சினைகளை இரு தரப்பு அரசியல் தலைவர்களும் பேசித் தீர்த்திருக்க வேண்டும். ஆனால் அவை இன்னும் நீறு பூத்த நெருப்பாகவே இருக்கின்றன.

1989ஆம் ஆண்டு உப பிரதேச செயலகமாகத் திறந்து வைக்கப்பட்ட கல்முனைத் தமிழ்ப் பிரதேச செயலகம் இதுவரை முழுமையான பிரதேச செயலகமாகத் தரமுயர்த்தப்படவில்லை. அதனோடு உப பிரதேச செயலகங்களாக அறிவிக்கப்பட்ட ஏனைய முஸ்லிம் இடங்களெல்லாம் முழுமையான பிரதேச செயலகங்களாகத் தரமுயர்த்தப்பட்டுவிட்ட போதும் இது மட்டும் இன்னும் தரமுயர்த்தப்படாமலேயே இருக்கின்றது. இதற்கு முஸ்லிம்கள் காட்டும் எதிர்ப்பு ஒரு மூல காரணம்.

இரு தரப்பு அரசியல் தலைவர்களும் அசமந்தமாக இருந்திராவிட்டால் இந்தப் பிரச்சினையும் சரி கிழக்கில் முஸ்லிம்கள் எதிர்கொள்ளும் வேறு பல பிரச்சினைகளும் சரி எப்போதோ தீர்க்கப்பட்டிருக்க முடியும்.

தனக்கு ஏற்றபடியான புதிய அரசமைப்பு ஒன்றைக் கொண்டுவருதற்காக ஆட்சியாளர்கள் விரைந்து பயணிக்கும் காலம் இது. இந்தக் காலத்தில் தமிழ், முஸ்லிம் மக்களுக்கு மிக முக்கியமான பொறுப்புண்டு. தமிழ், முஸ்லிம் ஒற்றுமையும் இணக்கப்பாட்டுடனான விட்டுக்கொடுப்பும் இல்லாமல் அந்தப் பொறுப்பைச் செவ்வனே நிறைவேற்ற முடியாது.

கிழக்கில் இந்த இனங்களுக்கும் இடையில் நல்லுறவு மேலோங்கவில்லை என்றால் கொழும்பு வழக்கம் போன்று தனது பிரித்தாளும் தந்திரத்தின் வழியே தனது நலன்களை நிறைவேற்றிக்கொண்டு சென்றுவிடும். இரு இனங்களும் தமக்கிடையில் பிளவுகள் இருப்பதாகத் தூக்கிப் பிடித்துக்கொண்டிருப்பதை சிங்கள அரசுகள் தமக்கு வாய்ப்பாகப் பயன்படுத்திக் கொள்ளும் என்பதை உணர வேண்டும். அப்படிப்பட்டதொரு எதிர்காலத்திற்கு முடிவுகட்டி இரு இனங்களும் மீண்டும் சேர்ந்து மிடுக்குடன் நடக்கும் காலம் வரும் என்கிற நம்பிக்கையை இந்தப் பேரணி ஏற்படுத்தியிருக்கின்றது.

ஒரு சிலரது கோரிக்கைகளுக்கு மத்தியிலும் பெரும்பாலான முஸ்லிம் இளைஞர்கள், பொது மக்கள் கிளர்ந்தெழுந்து தமிழ் மக்களின் இந்தக் கவனவீர்ப்புப் பேரணிக்கு வலுச் சேர்த்திருக்கிறார்கள். இந்த நிலையில் இரு இனங்களுக்கும் இடையிலான நல்லுறவு தழைத்தோங்கு வதற்கான நடவடிக்கைகளை நாம் எடுத்தாக வேண்டும்.



**பேரணியின்போது ஒரு விதமாகவும் அதன் பின்னர் பழையபடியும் என்பதாக அரசியல் தலைவர்களும் தமது போக்கை மாற்றிக்கொண்டு விடக் கூடாது. அத்தகைய எண்ணங்களை முளையிலேயே கிள்ளி எறிந்துவிட வேண்டும்.**

ஆறு கடக்கும் மட்டும் அண்ணன் தம்பி கடந்த பின்னர் நீ யாரோ நான் யாரோ என்பதைப் போன்று பேரணியின்போது ஒரு விதமாகவும் அதன் பின்னர் பழையபடியும் என்பதாக அரசியல் தலைவர்களும் தமது போக்கை மாற்றிக்கொண்டுவிடக் கூடாது. அத்தகைய எண்ணங்களை முளையிலேயே கிள்ளி எறிந்துவிட வேண்டும்.

இந்தப் பேரணியில் முஸ்லிம்கள் கலந்துகொண்டமையும் பேராதரவளித்தமையும் பல்வேறு தரப்பினரதும் நல்லபிமானத்தை வென்றெடுத்திருக்கின்றது. "இந்தப் பயணம் ஒற்றுமைப் பயணமாக இருக்கவேண்டும். தமிழ், முஸ்லிம் மக்களை ஒன்றிணைக்கும் பிள்ளையார் சுழியாக இந்த நிகழ்வு அமையவேண்டும்" என்று அகில இலங்கை முஸ்லிம் காங்கிரஸின் முக்கிய பிரமுகரான எம்.எஸ்.எஸ்.அமீரலி ஓட்டமாவடியில் எழுச்சிப் பேரணியை வரவேற்று உரையாற்றியபோது உணர்வு மேலோங்கக் கூறியிருந்தார்.

தமிழ், முஸ்லிம் மக்களிடையே துளிர்விடத் தொடங்கியுள்ள இன ஒற்றுமையைச் சிதைப்பதற்குப் பேரினவாதமும் பௌத்த சிங்கள மேலாதிக்கவாதமும் நிச்சயம் முயற்சிக்கும். நாம் விழிப்படைவோம்! ஒருவரையொருவர் நம்புவோம்! பேரினவாத அடக்குமுறைக்குச் சாவு மணி அடிப்போம்!

# அடங்காத் தமிழர்களின் நடை பயணம்



• நியூட்டன்

ஈழத் தமிழர் வரலாற்றில் "அடங்காத் தமிழன்" என முதல் முதலில் வர்ணிக்கப்பட்டவர் பி. சுந்தரலிங்கம். இவர் ஒரு கணித மேதை. பிரித்தானிய இளவரசிக்கு (தற்போதுள்ள மகாராணி) கணித பாடம் கற்பித்தவர் என்ற பெருமை இவருக்குண்டு. அதேவேளை மாவிட்டபுரம் கந்தசுவாமிக் கோவிலுக்குள் "ஒடுக்கப்பட்ட, தாழ்த்தப்பட்ட" மக்களை உள்ளே போகக்கூடாது என்று தடியுடன் கதிரையில் குந்தியிருந்து போராட்டம் செய்ததில் கதிரையுடன் தூக்கி வீசப்பட்டவர். அதேவேளை இனத்தின் பெயரால் தமிழரும் சிங்களவரும் சமதையானவர்கள் என்று நடைமுறையில் காட்டிச் சிங்களவருக்குச் சிம்ம சொப்பனமாக விளங்கியவர் விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன். சுந்தரலிங்கத்தை அடங்காத் தமிழன் எனத் தமிழர் மத்தியில் கூறியபோதும் நடைமுறையில் பெரும்பான்மைச் சிங்களவர்களாலும் அடங்காத் தமிழன் எனத் தன்னை உணர வைத்தவர் பிரபாகரன்.

பிரபாகரனின் போராட்டம் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டு 11ஆண்டுகள் கடந்த பின்பும் அவரது சாதனைகளைக் காட்டி அரசியல் நடத்த வேண்டிய தேவை தற்போதைய தமிழ் அரசியல்வாதிகளுக்கு ஏற்பட்டுள்ளது. இதன் விளைவே பொத்துவிலில் இருந்து பொலிகண்டி என்ற நடைபவனியும், பொலிகண்டித் தீர்மானமும் ஆகும். இந்த ஊர்வலத்தைப் பொது அமைப்புகள் ஏற்பாடு செய்திருந்தபோதும் தமிழ் அரசுக்கட்சி உட்படப் பல்வேறு தமிழ்க் கட்சிகள் களமிறங்கின. அதிலும் தமிழ் அரசுக் கட்சியைச் சேர்ந்த இரா.சாணக்கியன், எம்.ஏ.சுமந்திரன் ஆகிய இருவரும் தமது தனிப்பட்ட போராட்டமாக இதை வெளிக்காட்டினர். பொத்துவிலில் ஆரம்பித்த நாளில் இருந்து பொலிகண்டியில் முடிவுறும் தருணம் வரை இவ்விருவரின் முகங்களே அதிக இடத்தைப் பிடித்தன. இந்தக் கூட்டத்தின் பின்னர் சுமந்திரனின் விசேட அதிரடிப் படைப் பாதுகாப்பை அரசு விலக்கியிருப்பது வடிவேல் பாணியில் "கொஞ்சம் ஓவராய்ப் போயிற்றமோ" என்று எண்ண வைத்திருக்கிறது.

### சர்வதேசத்துக்கான செய்தி

இந்த ஊர்வலமானது சர்வதேசத்துக்கு தமிழரின் பிரச்சினைகளை எடுத்துக் காட்டுவதை நோக்கமாகக் கொண்டது எனக் கூறப்பட்டது. இந்தப் பேரணிக்கு ஆதரவாக ஐரோப்பாவில் உள்ள தமிழர்களால் ஏற்பாடு செய்யப்பட்ட ஆதரவு ஊர்வலங்களில் கார்ப் பவனி இடம்பெற்றது. அதில் தடை செய்யப்பட்ட அமைப்பான தமிழீழ விடுதலைப் புலிகளின் கொடி காட்சிப்படுத்தப்பட்டதால் இது புலிகளின் பேரணி என்று அடையாளப்படுத்தப்பட்டதே தவிர புலம்பெயர்ந்து வாழ்கின்ற அனைத்துத் தமிழர்களின் பேராதரவைப் பெற்றதாக இல்லை.

சர்வதேசத்துக்கு இந்த ஊர்வலத்தின் முக்கியத்துவத்தை எடுத்துச் சொல்லக்கூடிய பிரதான ஊடகங்களான பிபிசி, சி.என்.எல், ஆர்.ரி, அல்ஜசீரா, சணல் 4 ஆகிய எந்தச் செய்தி ஊடகங்களிலும் இந்த ஊர்வலம் காட்சிப்படுத்தப்படாதது குறையே.

### இலங்கை அரசு எவ்வாறு கையாண்டது

ஒடுக்கபட்ட மக்கள் தன்னெழுச்சியாகக் கிளர்ந்து எழும்போது ஒடுக்குமுறையாளர்கள் அதைக் குழப்புவதில் ஈடுபடுவது வழமை. ஆனால் கோட்டாபய அரசு இது விடயத்தில் மிகவும் தந்திரோபாயமாகச் செயற்பட்டது. பொலிஸார் மூலம் பல இடங்களில் நீதிமன்றத் தடைகளை ஏற்படுத்தியும் சில தனிப்பட்ட அரசியல் செயற்பாட்டாளர்கள் இந்தப் பேரணியில் கலந்துகொள்ளத் தடையும் விதித்தது. நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் தான் இறங்கும் இடமெல்லாம் அரசின் சிறப்பு அதிரடிப்படைப் பாதுகாப்புடன் காணப்பட்டார். இதனால் அவரை சாதாரண பொலிஸார் தடுக்க முடியாது. அவருக்கு வழங்கப்பட்டது இலங்கை அரசின் முக்கிய நபருக்கான பாதுகாப்பாகும். இந்த ஊர்வலத்தின் முன்னரங்கில் நின்றபின்னர் அந்தப் பாதுகாப்பு மீளப் பெறப்பட்டுள்ளது.

சாணக்கியனுக்கும் மகிந்த குடும்பத்துக்குமான மிக நெருங்கிய உறவு காரணமாகப் பொலிஸார் தடுப்பது போல தடுத்து வாக்குவாதத்தில் ஈடுபட்டு தடைகளை எல்லாம் உடைத்தெறிந்த அடங்காத் தமிழன் என்ற தோற்றப்பாட்டை ஏற்படுத்த முனைந்துள்ளது. சாணக்கியனைத் தவிர வேறு தலைவர்களை அவ்வாறு முன்னிலைப்படுத்த அரசு விரும்பவில்லை. எனவே இந்த ஊர்வலத்தின் முக்கிய இருவரும் தமிழ் அரசுக் கட்சியைச் சார்ந்தவர்களாக இருந்த போதிலும் கோட்டாபய அரசுக்கு மிகவும் வேண்டப்பட்டவர்களாக உள்ளனர்.

இந்தப் பேரணியில் ஐந்து நாள்களுக்குள் வடக்குக் கிழக்குத் தமிழ் மக்கள் மத்தியில் ஒரு ஹீரோ அந்தஸ்தைப் பெற்றவர் சாணக்கியன் மட்டுமே. அந்தளவுக்கு ஊடகங்களில் அவர் தன்னைப் பிரபல்யப்படுத்தியிருக்கிறார். இது ஏற்கனவே களத்தில் நின்ற பல அடங்காத் தமிழர்களை அடக்கி விட்டது என்றே கூற முடியும். கிழக்கிலிருந்து ஒருவர் வடக்குக்குத் தலைமைத்துவம் கொடுக்கும் நிலை கருணாவுக்குப் பின்னர் சாணக்கியனுக்குக் கிடைத்திருக்கிறது.

இந்தப் பேரணிக்கு ஒரு சில கோடிகள் செலவிடப்பட்டுள்ளன. இது பொது அமைப்புகளின் பணம் அல்ல என்பதை இலகுவாகப் புரிந்துகொள்ள முடியும். புலம் பெயர் தமிழர்களின் நிதிப்பங்களிப்பின் மூலம் அரசுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் உள்நாட்டில் வாழும் தமிழருக்கு மேலும் பல நெருக்கடிகளை ஏற்படுத்த வாய்ப்புண்டு. இவ்வாறான சந்தர்ப்பத்தில் சுமந்திரனுடனும் சாணக்கியனுடனும் அருகில் நின்று எடுத்துக்கொண்ட செல்பி படங்களும் ஊர்வலத்தில் ஆக்ரோசமாகக் கத்தும்போது எடுத்த படங்களும் எதிர்காலத்தில் வெளிநாடொன்றில் அரசியல் தஞ்சம் அல்லது அகதித் தஞ்சம் கோருவதற்கு முக்கிய ஆவணமாக இருக்கும் என இதில் கலந்து கொண்ட இளைஞர்களில் பலர் நம்புகின்றனர்.

### மும்மொழிப் புலமை

சாணக்கியன் தனது நாடாளுமன்ற உரைகளில் தமிழ், சிங்களம், ஆங்கிலம் என 3 மொழிகளிலும் உரையாற்றுவதன் மூலம் ஏனைய தமிழ் உறுப்பினர்களை விடப் பிரபல்யம் அடைந்தார். அவரது தாத்தவான இராசமாணிக்கம் தமிழ் அரசுக் கட்சியின் முக்கியஸ்தராக இருந்தவர். சாணக்கியனின் தந்தை ஒரு மருத்துவர். மகியங்கனைச் சிங்களப் பெண் ஒருவரைத் திருமணம் செய்தவர். இதனால் சாணக்கியனின் தாய் மொழியாகச் சிங்களம் மாறியது. சாணக்கியன் திருமணம் செய்யவிருப்பதும் சிங்களப் பெண்மணி என்று பேச்சுகள் இருக்கின்றன. எனவே சாணக்கியன் இலங்கையில் தமிழ் - சிங்கள நல்லிணக்கத்தின் ஓர் அடையாளமே.

**இந்தப் பேரணியில் ஐந்து நாள்களுக்குள் வடக்குக் கிழக்குத் தமிழ் மக்கள் மத்தியில் ஒரு ஹீரோ அந்தஸ்தைப் பெற்றவர் சாணக்கியன் மட்டுமே.**

### முஸ்லிம்களின் ஆதரவு

கொரோனாப் பாதிப்பால் மரணமடையும் முஸ்லிம்களின் ஜனசாக்களை எரிக்காது புதைக்க வேண்டும் என்ற விடயமும் ஓர் அம்சமாக ஏற்கப்பட்டதால் இந்தப் போராட்டத்துக்கு முஸ்லிம்களின் ஆதரவு இருந்ததாகக் கூறப்பட்டபோதும் இலங்கையின் முன்னணி முஸ்லிம் அரசியல்வாதிகளான ஹிஸ்புல்லா, ரவூப்ஹக்கீம், ரிசாத் பதியுதீன் ஆகிய தலைவர்கள் தமது எதிர்கால அரசியலைக் கருத்தில் கொண்டு இந்தப் பேரணியில் கலந்து கொள்ளவில்லை. தமிழர் அரசியலில் இருந்து முஸ்லிம்களைப் பிரித்தெடுப்பதற்கு அரசு ஜனாசாக்களைப் புதைக்க முடியும் என அனுமதியளித்தல் அத்தனை முஸ்லிம்களும் அரசின் பக்கமே சாய்வார்கள். 20ஆவது திருத்தம் சிறுபான்மை இனங்களுக்குப் பாதிப்பானது என்று தமிழ்க் கட்சிகள் எவ்வளவு எடுத்துக்கூறியும், தமிழ்த் தலைவர்கள் அதை எதிர்த்து வாக்களித்த போதிலும் ஹக்கீமினதும் ரிசாத்தினதும் 8 உறுப்பினர்கள் அதற்கு ஆதரவாகவே வாக்களித்தனர்.

### இந்த ஊர்வலத்தைப் பலர் பயன்படுத்திக் கொண்டார்கள்

மேற்படி ஊர்வலம் வவுனியாவைச் சென்றடைந்தபோது நெடுங்குளத்தில் வைத்து ஒரு மௌலவி கலந்து கொண்டார். அவர் ஜனசா விடயத்தில் அரசுக்கு எதிராக மிக ஆக்ரோசமான கருத்துகளை முன்வைத்தார். தனக்குக் கிடைத்த அந்த வாய்ப்பை அவர் நன்றாகப் பயன்படுத்திக் கொண்டாரே தவிர இந்த மாபெரும் ஊர்வலத்தின் முக்கியத்தை அவர் கருத்தில் எடுத்ததாகத் தெரியவில்லை.

இதைவிடக் கிளிநொச்சியில் ஊர்வலம் ஆரம்பித்தபோது சிவப்பு, மஞ்சள் கொடியும் சால்வையும் போராட்டத்தில் கலக்கப்பட்டது. இதன் மூலம் இந்த ஊர்வலம் விடுதலைப் புலிகளின் ஊர்வலமாக அல்லது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஊர்வலமாக மாறியது. இது ஏற்பாட்டாளர்களின் கட்டுமீறிய செயலாகவும் கடந்த தேர்தலில் கூட்டமைப்பின் வாக்கு வங்கிகளில் ஏற்பட்ட சரிவைச் சீர் செய்வதகவும் காணப்பட்டது.

### பொலிகண்டியில் இருந்து பொத்துவிலுக்குப் போயிருக்கவேண்டும்

கிழக்கு மாகாணத்தின் அரசியல் சூழல் 2020 தேர்தலில் மிகத் தெளிவாகத் தெரிந்தது. கூட்டமைப்பிலிருந்து விலகிய வியாழேந்திரன், சிறைக்குள்ளிருந்த பிள்ளையான் ஆகியோர் அமோக வெற்றியைப் பதிவு செய்தனர். அதேவளை யாழ்ப்பாணத்தில் அதிக முதன்மை வாக்குகள் அங்கஜன், டக்ளஸ் பெற்றார்கள். இவ்வாறானதொரு சூழலில் பொலிகண்டியில் இருந்து இந்தப் போராட்டத்தை ஆரம்பித்துப் பொத்துவிலில் முடித்திருந்தால் கிழக்குத் தமிழரையும் முஸ்லிம்களையும் அதிகம் திருப்திப்படுத்தியிருக்க முடியும். யாழ்ப்பாணத் தமிழர் தம்மை நோக்கி வருகிறார்கள் என்ற நல்லிணக்க நிலை அவர்களுக்கு ஏற்பட்டிருக்கும். பேரணியின் இறுதிக் கூட்டம் யாழ்ப்பாணத்தில் இடம்பெறுவதையே தமிழ் அரசுக் கட்சி விரும்பியிருக்கிறது.

இந்த ஊர்வலம் பொது அமைப்புகளால் அனைத்துக் கட்சிகளையும் இணைத்து ஆரம்பிக்கப்பட்ட போதும் விக்னேஸ்வரன், சுரேஷ் பிரேமச்சந்திரன், சிவாஜிலிங்கம், அனந்தி சசிதரன், கஜேந்திரகுமார் பொன்னம்பலம், சிறிகாந்தா ஆகியோர் புறக்கணிக்கப்பட்டதாகவே தெரிகிறது. இதில் முக்கியத்துவம் பெற விரும்பியவர்கள் தம்மை அடங்காத் தமிழர்களாகக் காட்ட முனைந்து அதில் ஓரளவுக்கு வெற்றியும் பெற்றார்கள்.

இவ்விதழ் யாழ்ப்பாணம் இல. 551ஏ, கஸ்தூரியர் வீதியிலுள்ள கிறீன் மீடியா கவுஸ் பிரை. லிமிட்டட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 13.02.2021 அன்று வெளியிடப்பட்டது. தொடர்பு: 0214927781